து உன் கைக்கு நேரா கிறதைச் செய். ஏ
னெனில் தேவன் உன்னோடே இரு
8 க்கிறார்.—ஆனாலும் நீ எனக்கு முன்னே
கில்காலுக்கு இறங்கிப்போவாயாக.என
ன்றால் இதோ, சருவாங்கத் தகனங்களை
யுஞ் சமாதான பலிகளையுஞ் செலுத்து
ம்படிக்கு நான் உன் அண்டைக்கு இறங்
கிவருவேன். நான் உன் அண்டைக்கு வந்
து, நீ செய்ய வேண்டியதை உனக்கு
அறிவிக்குமட்டும் ஏழு நாட் காத்திருப்பா
யாகவென்றான்.
9 அவன் சாமுவேலை விட்டுப் புறப்பட்
டுத் தன் தோளைத் திருப்பினபோது சம்
பவித்த தேதெனில், தேவன் அவனு
க்கு வேறே இருதயத்தை மாற்றிக் கொ
டுத்தார். அந்த எல்லா அடையாளங்களு
ம் அந்நாளிலேதானே அவனுக்கு வந்த
10 ன.—அவர்கள் அந்த மேட்டுக்கு வந்த
போதும் இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்
டம் அவனுக்கு எதிராக வந்தது, அப்
போது தேவனுடைய ஆவி அவன்
மேல் இறங்கினதினாலே அவர்களுக்குள்

இருந்து தீர்க்கதரிசனஞ் சொன்னான்.-
அதற்கு முன்னே அவனை அறிந்தவர்கள் 11
எல்லாரும் அவன் தீர்க்கதரிசிகளோடி
ருந்து தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறதைக்
கண்ட போது, அந்தச் சனம் ஒருவரோ
டொருவர் கீசின் குமாரனுக்கு வந்ததெ
ன்ன? சவுலுந் தீர்க்கதரிசிகளுக்குள் இ
ருக்கிறானோவென்றார்கள்.— அதற்கு அ 12
ங்கே இருக்கிறவர்களில் ஒருவன் பிரத்தி
யுத்தரமாக, ஆனாலும் இவர்களுடைய
தகப்பன் ஆரென்றான். ஆனதுகொண்டு,
சவுலுந் தீர்க்கதரிசிகளுக்குள் இருக்கிறா
னோவென்கிற பழமொழி உண்டாயிற்று.
—அவன் தீர்க்கதரிசனஞ்சொல்லி முடி 13
த்தபின் மேட்டின் மேலே வந்தான்.

அப்போது சவுலுடைய சிறிய தகப் 14
பன் நீங்கள் எங்கே போனீர்களென்று
அவனையும் அவன் வேலைக்காரனையுங் கே
ட்டான். அதற்கு அவன் நாங்கள் கழுதை
களைத் தேடப் போய் அவைகளைக் காணா
தே போனபடியினாலே சாமுவேல் அண்
டைக்கு வந்தோமென்றான்.—அப்போ 15
து சவுலின் சிறியதகப்பன், சாமுவே

ல் உங்களுக்குச் சொன்னதென்னவென்று
எனக்கு அறிவியென்றான். = சவுல் தன் சி
றிய தகப்பனுடனே, கழுதைகள் அகப்ப
ட்டனவென்று எங்களுக்கு அறிவிக்கவே
அறிவித்தானென்று சொன்னான். ஆகிலு
ம் சாமுவேல் சொன்ன இராச்சியபாரத்
தின் வர்த்தமானத்தை அவனுக்கு அறிவி
யாதேபோனான்.
17 சாமுவேலோ சனத்தை மிஸ்பாவி
லே யெகோவாவண்டைக்கு வரவழைத்
18 து,— இஸ்ரவேல் புத்திரரோடே
சொன்னதாவது, இஸ்ரவேலின் தேவனா
கிய யெகோவா சொல்லுகிறதேதெனி
ல்; நான் இஸ்ரவேலை எகிப்திலிருந்து
ஏறிவரப்பண்ணி; உங்களை எகிப்தியர்
கைக்கும் உங்களை இறுக்கப்பிடித்த எல்
லா இராச்சியத்தாரின் கைக்கும் நீங்கலா
19 க்கிவிட்டேனே.— நீங்களோ உங்களுக்குண்டா
ய எல்லாத் தீங்குகளுக்கும் நெருக்கங்க
ளுக்கும் உங்களை நீங்கலாக்கி இரட்சி
த்த உங்களின் தேவனை இந்நாளிலே பு
றக்கணித்து; அவருடனே, ஒரு இரா
சாவை எங்கள்மேலே வையுமென்றீர்

கள். இப்போதும் யெகோவாவுக்கு மு
ன்பாக உங்கள் வமிசங்களின் படியே
யும் ஆயிரங்களான உங்கள் சேர்வைக
ளின் படியேயும் உங்களை நிறுத்துங்க
ளென்றான்.—இஸ்ரவேலின் கோத்திரங்க 20
ளை எல்லாஞ் சாமுவேல் சேரப்பண்ணி
ன பின்பு, பென்யமின் கோத்திரத்தி
ன்மேலே சீட்டுவிழுந்தது.—அவன் பெ 21
ன்யமின் கோத்திரத்தை அதினுடைய வ
மிசங்களின்படியே சேரப்பண்ணின பி
ன்பு, மாத்திரி வமிசத்தின்மேலும் அதி
லே கீசின் குமாரனாகிய சவுலின்மேலு
ஞ் சீட்டு விழுந்தது. அவனைத் தேடுகி
றபொழுது அவன் தென்படாதேபோ
னான்.—அவன் இன்னம் இங்கே வருவா 22
னோவென்று அவர்கள் திரும்ப யெகோ
வாவை கேட்டபோது, இதோ, அவன்
தளவாடங்கள் இருக்கிற இடத்திலே ஒ
ளித்துக்கொண்டிருக்கிறானென்று யெ
கோவா சொன்னார்.—அப்போது அவர் 23
கள் ஓடி, அங்கே இருந்து அவனை அழை
த்து வந்தார்கள். அவன் சனத்தின் நடுவே
வந்து நிற்கிறபோது எல்லாச் சனத்திலு

ந் தன்தோள் உயர்ந்தவனாய் இருந்தான்.
24 —அப்போது சாமுவேல் எல்லாச் சன
த்தோடும்யெகோவா தெரிந்துகொண்ட
வனைப் பார்க்கிறீர்கள் அல்லவோ! எனெ
ன்றால் எல்லாச் சனத்திலும் அவனுக்கு
ச் சரியானவன் இல்லையென்றான். அப்
போது சனம் எல்லாம் ஆர்ப்பரித்து இ
ராசாவானவர் வாழ்கவென்றார்கள். —
25 சாமுவேலோ இராச்சியபாரத்தின் நி
யாயத்தைச் சனத்திற்குச் சொல்லிக் கா
ட்டி, அதை ஒரு புஸ்தகத்தில் எழுதி
யெகோவாவுக்கு முன்பாக வைத்துவிட்
டுப் பின்பு சனத்தை எல்லாம் அவரவ
வரை அவர்கள் வீட்டுக்கு அனுப்பிவிட்
26 டான்.-சவுலுங் கிபேயாவில் இருக்கிற த
ன் வீட்டுக்குப் போய்விட்டான். இராணு
வத்திலே தேவன் எவர்கள் மனதை ஏவி
னாரோ அவர்களும் அவனோடே போ
27 னார்கள்.-ஆனாலும் பேலியாளின் பிள்ளை
கள் இவன் நம்மை இரட்சிப்பானோ தெ
ன்று அவனை அசட்டைபண்ணி, அவனுக்
குக் காணிக்கையைக் கொண்டுபோகாதி

ருந்தார்கள். அவனோ அதற்குக் காதுகே
ளாதவனைப் போல் இருந்தான்.

௰௧. அதிகாரம்.

சவுல் அம்மோனியரைச் சயித்தது.

ஆனாலும் நாகாஸென்னும் அம்மோனிய 1
ன் எதிர்வந்து கிலேயாத்திலிருக்கிற யாபே
சை முற்றிக்கைபோட்டான்; அப்பொழு
து யாபேசின் மனுஷர் எல்லாரும் நாக
காசுடனே, எங்களோடே உடம்படிக்கை
பண்ணும், அப்பொழுது உம்மைச் சேவிப்
போமென்றார்கள்.- ஆனாலும் அம்மோனி 2
யனாகிய நாகாசு அவர்களுடனே, நான் உ
ங்கள் எல்லாருடைய வலது கண்ணையும் பி
டுங்கி இதினாலே இஸ்ரவேல் எல்லாவற்றின்
மேலும் நிந்தை வரப் பண்ணுவேனென்
கிறதாய் உங்களோடே உடம்படிக்கைப
ண்ணுவேனென்றான்.— அப்பொழுது யா 3
பேசின் மூப்பானவர்கள் அவனுடனே,
நாங்கள் இஸ்ரவேலின் எல்லைகளெல்லாம்
தூதுவரை அனுப்ப எழு நாள் எங்க
ளுக்குத் தவணை கொடும், எங்களை இ

நட்சேப்பாரில்லாவிட்டால் அப்போது உ
ங்களண்டைக்குப் புறப்பட்டு வருவோமெ
4 ன்றார்கள்.—அந்தத் தூதுபதிகள் கிபே
யாவிலே சவுல் அண்டைக்கு வந்து சனத்
தின் காதுகள் கேட்க அந்தவார்த்தைகளை
ச் சொன்னார்கள். அப்போது சனமெல்
5 லாரும் சத்தமிட்டு அழுதார்கள்.—இதோ
சவுல் மாடுகளின் பிறகாலே வயல்வெளியி
லிருந்து வந்து சனம் அழுகிற முகாந்த
ரம் என்னவென்று கேட்டான். அவனுக்
கு யாபேசு மனுஷரின் வார்த்தைகளை வி
6 வரித்தார்கள்.—சவுல் இந்த வார்த்தைக
ளைக் கேட்கையில் தேவனுடைய ஆவி
அவன்மேல் இறங்கினதினாலே அவன் மிக
7 வுங் கோபம்கொண்டவனாகி,—ஓர் இணைமா
ட்டைப் பிடித்து, அதைத் துண்டித்துப்
போட்டு, அந்தத் தூதுபதிகள் கையி
லே இஸ்ரவேலின் எல்லைக்கெல்லாம் அ
னுப்பிச் சவுலின் பிறகாலேயும் சாமுவே
லின் பிறகாலேயும் புறப்படாதவனுடை
ய மாடுகளுக்கு இப்படிச் செய்யப்படு
மென்று சொல்லி அனுப்பினான். அப்போ
து யெகோவாவினால் உண்டான பயங்கரத்

சனத்தின்மேல் இறங்கினதினால் ஒருவனை
ப் போலே புறப்பட்டார்கள்.—அவர்க 8
ளைப் பேசேக்கிலே இலக்கம்பார்த்தான்.
இஸ்ரவேற்புத்திரரில் மூன்னூறாயிரம்பே
ரும், யூத மனுஷரில் முப்பதினாயிரம் பே
ரும் இருந்தார்கள்.—அப்போது வந்த 9
தானாபதிகளுக்கு அவர்கள் சொன்னதா
வது, கீலேயாத்தில் இருக்கிற யாபேசி
ன் மனுஷருக்கு நீங்கள் சொல்லவேண்
டியது, நாளை வெய்யில் ஏறுகையில்
உங்களுக்கு இரட்சிப்பு உண்டாமென்று
சொல்லுங்களென்றார்கள். தானாபதிக
ள் வந்து யாபேசின் மனுஷருக்கு அ
தை அறிவிக்கிறபோது அவர்கள் சந்தோ
ஷப்பட்டார்கள்.—பின்பு யாபேசின் 10
மனுஷர் நாளை உங்கள் அண்டைக்குப் புற
ப்படுவோம். அப்போது உங்கள் பார்
வைக்குச் சரியானபடி எல்லாம் எங்களு
க்குச் செய்யுங்களென்றார்கள்.— மறுநா 11
ளிலே சவுல் சனத்தை மூன்றுவகுப்பாக
நிறுத்தினான். பின்பு அதிகாலச் சாம
த்திலே பாளயத்திற்குள் வந்து பகலின்
வெய்யில் ஏறுமட்டும் அம்மோனை முறி

ய அடித்தான். தப்பி மீதியானவர்களி
லே இரண்டு பேராகிலுஞ் சேரடாய்க்
கூடிப்போகாதபடியாகச் சிதறினார்கள்.
12 அப்போது சனஞ் சாமுவேலுடனே,
சவுல் நம்முடையமேல் இராசாவாய் இ
ருப்பதேது என்றவர்கள் ஆர்? அந்த மனு
ஷரை நாங்கள் கொன்றுபோடும்படிக்கு
13 ஒப்புக்கொடுங்களென்றார்கள்.- சவுலோ
இந்த நாளிலே ஒருவருங் கொன்றுபோ
டப்பட வேண்டாம். ஏனெனில் இன்று
யெகோவா இஸ்ரவேலிலே இரட்சிப்பை
உண்டுபண்ணினாரென்றான்.
14 அப்போது சாமுவேல் சனத்துட
னே, நாம் கில்காலுக்குப் போய் அங்கே
இராச்சியபாரத்தைப் புதிதாக்குவோம்
15 வாருங்களென்றான்.- அப்படியே சனம் எ
ல்லாங் கில்காலுக்குப்போய் அவ்விடத்
திலே யெகோவாவுக்கு முன்பாகச் சவுலை
இராசாவாக வைத்து, அங்கே யெகோ
வாவுக்குமுன்பாகச் சமாதானபலிகளைச்
செலுத்தி அங்கே சவுலும் இஸ்ரவேல்
மனுஷர் அனைவரும் மிகவும் மகிழ்ந்து
கொண்டிருந்தார்கள்,

௧௨. அதிகாரம்.

சாமுவேல் தன்னுடைய நியாயத்தை உத்[illegible]
[illegible]ப் படுத்தினது.

அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேலர் அ 1
னைவரோடுஞ் சொன்னது, இதோ,
நீங்கள் எனக்குச் சொன்னபடி எல்லா
ம் உங்கள் சொற் கேட்டு, உங்கள் மே
ல் ஒரு இராசாவை வைத்தேன். —இப் 2
பொழுதும் இதோ இராசாவானவர் உங்
களுக்கு முன்பாக நடந்துவருகிறார். நா
னோ கிழவனும் நரைத்தவனுமானேன்.
என் குமாரரோ உங்களோடிருக்கிறார்
கள். நான் என் சிறு வயது துவக்கி
இந்நாள் வரைக்கும் உங்களுக்கு முன்
பாகச் சஞ்சரித்தேன். —இதோ, நான் இ 3
ங்கே இருக்கிறேன். நான் ஆருடைய மாட்
டை எடுத்துக்கொண்டேன்? ஆருடை
ய கழுதையை எடுத்துக்கொண்டேன்? ஆ
ருக்கு இடுக்கண் செய்தேன்? ஆரை ஒ
டுக்கினேன்? நான் கண்சாய்ப்பாயிருக்
க ஆர் கையிலே பரிதானம் வாங்கினே
னென்று யெகோவாவுக்கு முன்பாகவும்

அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு
முன்பாகவும் எனக்கெதிராக மறுவுத்தர
வுசொல்லுங்கள். அப்போது அதை உங்
களுக்குத் திரும்பக் கொடுப்பேனென்
4 றான்.— அப்போது அவர்கள் நீர் எங்
களுக்கு இடுக்கண் செய்ததும் இல்லை, எங்
களை ஒடுக்கினதும் இல்லை, ஒருவர் கையிலும்
ஒன்றும் எடுத்துக் கொண்டதும் இல்லை
5 யென்றார்கள்.— அப்போது அவன் அவர்
களோடே, நீங்கள் என் கையிலே ஒன்று
ங் கண்டுபிடித்ததில்லையென்பதற்கு யெ
கோவா உங்களுக்கெதிராகச் சாட்சியாயி
ருவர். அவர் அபிஷேகம் பண்ணுவித்த
வரும் இன்று அதற்குச் சாட்சியென்று
ன். அதற்கு இவர்கள் அவர் சாட்சியாயிரு
ரென்றார்கள்.
6 அப்புறஞ் சமூவேல் சனத்தோடே
சொன்னதாவது, மோசேயையும் ஆரோ
னையும் கட்டளையிட்டவரும், உங்கள் பி
தாக்களை எகிப்து தேசத்தில் இருந்து
ஏறிவரப் பண்ணினவருமாகிய யெகோவா
7 தாமே.— இப்போதும் யெகோவா உங்க
ளுக்கும் உங்கள் பிதாக்களுக்குஞ் செய்

திருக்கிற எல்லா நீதி நியாயங்களுக்காக
வும் நான் யெகோவாவுக்கு முன்பாக உ
ங்களோடே நியாயம் பேசும்படிக்கு உ
ங்களை நிறுத்துங்கள்.—யாக்கோபு எகி 8
ப்திலே வந்ததற்குப் பின்பு உங்கள் பி
தாக்கள் யெகோவாவை நோக்கிக் கூப்
பிட்டார்கள். அப்போது யெகோவா
மோசேயையும் ஆரோனையும் அனுப்பி
னர். இவர்கள் உங்கள் பிதாக்களை எகிப்
த்தில்இருந்து அழைத்துவந்து, அவர்களை
இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப் பண்ணி
னார்கள்.—அவர்கள் தங்கள் தேவனாகிய 9
யெகோவாவை மறந்துபோகிற பொ
ழுது இவர் அவர்களை ஆத்சோரின் சே
னபதியாகிய சிசராவின் கையிலும் பெ
லிஸ்தரின் கையிலும் மோவாபுடைய இ
ராசாவின் கையிலும் விற்றுப்போட்டா
ர். இவர்கள் அவர்களுக்கு விரோதமா
க யுத்தம்பண்ணினார்கள்.— ஆகையால் 10
அவர்கள் யெகோவாவை நோக்கிக் கூப்
பிட்டு, நாங்கள் யெகோவாவை விட்டுப்
பாகால்களையும் அஸ்தரோத்தையுஞ் சே
வித்ததினாலே பாவஞ் செய்தோம். இப்

போதும் எங்கள்சத்துருக்களின் கைக்கு
எங்களை நீங்கலாக்கிவிடும். இனி உம்மை
11 ச் சேவிப்போமென்றார்கள்.—அப்பொ
து யெகோவா எருபாகாலையும் பேதா
னையும் இப்தாவையுஞ் சாமுவேலையும் அ
னுப்பி, நீங்கள் பயம் இல்லாமற் குடியி
ருக்கும்படிக்குச் சுற்றிலும் இருந்த உங்
கள் சத்துருக்களின் கைக்கும் உங்களை நீ
12 ங்கலாக்கிவிட்டார்.—அம்மோன் புத்திர
ரின் இராசாவாகிய நாகாசு உங்களுக்கு வி
ரோதமாய் வருகிறதை நீங்கள் காண்கி
றபொழுது உங்கள் தேவனாகிய யெ
கோவாதானே உங்கள் இராசாவாயி
ருந்தாலும், நீங்கள் என்னுடனே, அப்ப
டி வேண்டாம். ஒரு இராசா எங்கள்மே
13 லே அரசாள வேண்டுமென்றீர்கள்.—இ
ப்போதும் இதோ, நீங்கள் வேண்டுமெ
ன்று கேட்டுத் தெரிந்துகொண்ட இரா
சா இங்கே இருக்கிறார். இதோ, யெகோ
வா உங்கள் மேல் இராசாவை வைத்தார்.
14 —நீங்கள் யெகோவாவுடைய வாக்குக்கு
விரோதமாய்க் கலகம்பண்ணாமல், யெ
கோவாவுக்குப் பயந்து, அவரைச் சேவி

த்தாவுக்குடைய சத்தத்திற்குக் கீழ்ப்
படிந்தால், நீங்களும் உங்கள் மேல் ஆளு
கிற இராசாவும் உங்கள் தேவனாகிய யெ
கோவாவைப் பின்பற்றுகிறவர்களாய் இ
ருப்பீர்கள்.—நீங்கள் யெகோவாவுடைய 15
சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், யெகோ
வாவின் வாக்குக்கு விரோதமாய்க் கல
கம் பண்ணினீர்களேயாகில், யெகோவாவு
டைய கை உங்கள் பிதாக்களுக்கு விரோ
தமாய் இருந்தது போலே உங்களுக்கும்
விரோதமாய் இருக்கும்.—இப்போது 16
ம் நீங்கள் உங்களை நிறுத்தி யெகோவா
உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யு
ம் பெரிய காரியத்தைப் பாருங்கள்.—இ 17
ப்போது கோதும்பை அறுப்பின் நாள்
அல்லவோ? நீங்கள் உங்களுக்கு ஒரு இரா
சாவைக் கேட்டதினாலே, யெகோவாவி
ன் பார்வைக்குச் செய்த உங்களுடைய
பொல்லாங்கு பெரியதென்று நீங்கள் அ
றிந்து உணர்ந்து காணும்படிக்கு, நான்
யெகோவாவை நோக்கிக் கூப்பிடுவேன்.
அப்போது இடிமுழக்கங்களையும் மழை
யையுங் கட்டளையிடுவாரென்று சொல்லி,

18 —சாமுவேல் யெகோவாவை நோக்கி
க் கூப்பிட்டான். அப்போது அந்நாளி
லேதானே யெகோவா இடி முழக்கங்க
ளையும் மழையையுங் கட்டளையிட்டார். அ
ப்போது சனம் எல்லாம் யெகோவா
வுக்குஞ் சாமுவேலுக்கும் மிகவும்பயந்தி
19 ருந்தது.— சாமுவேலுடனே, நாங்கள்
சாகாதபடிக்கு உம்முடைய தேவனாகிய
யெகோவாவை உமதடியாருக்காக வி
ண்ணப்பஞ் செய்யும். ஏனென்றால் எங்
களுடைய எல்லாப் பாவங்களோடும் நா
ங்கள் எங்களுக்கு ஒரு இராசாவைக் கே
ட்ட பொல்லாங்கையுங் கூட்டினோ
மென்று சனம் எல்லாஞ் சொல்லிற்று.
20 —அப்போது சாமுவேல் சனத்தோடே
சொன்னதாவது, பயப்படாதேயுங்கள்.
நீங்கள் இந்தப் பொல்லாங்கை எல்லாஞ்
செய்தீர்கள். ஆகிலும் யெகோவாவை வி
ட்டுப் பின்வாங்காமல் யெகோவாவை உ
ங்கள் முழு இருதயத்தினாலுஞ் சேவியுங்
21 கள் — விலகிப்போகாதேயுங்கள். மற்ற
ப்படிக்குப் பிரயோசனமற்றதும் இரட்
சிக்க மாட்டாததுமாய் இருக்கிற விருதா

க் காரியங்களைப் பின்பற்றுவீர்கள். ஏனெ
ன்றால் அவைகள் விருதாத்தானே.—அ 22
தேதெனில் யெகோவா உங்களைத் தமக்
குச் சனமாக்கிக்கொள்ளப் பிரியமானப
டியினாலே, யெகோவா தம்முடைய மக
த்துவமான நாமத்திற்காகத் தமது சன
த்தைக் கைவிடாதிருப்பார்.—நானும் உ 23
ங்களுக்காக விண்ணப்பஞ் செய்யாதே
போகிற பாவத்தை யெகோவாவுக்கு வி
ரோதமாகச் செய்வது எனக்குத் தூரமா
ய் இருக்கக் கடவது. நன்மையுஞ் செவ்
வையுமான வழியையும் உங்களுக்குப்
போதித்துக்கொண்டிருப்பேன்.—ஆனா 24
லும் நீங்கள் யெகோவாவுக்குப் பயந்து உ
ங்கள் முழு இருதயத்தினாலும் உண்மை
யாய் அவரைச் சேவிக்கக் கடவீர்கள். ஏ
னெனில் அவர் உங்களிடத்தில் எத்தனை ம
கிமையான காரியங்களைச் செய்தாரென்கி
றதைப் பாருங்கள்.—நீங்கள் பொல்லா 25
ங்கைச் செய்யவே செய்தீர்களானால், நீங்
களும் உங்கள் இராசாவுங் கெட்டுப்போ
வீர்களென்றான்.

௰௩. அதிகாரம்.

சவுல் பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணப் போகையில் அவநம்பிக்கையினாலே பாவஞ் செய்தது.

1 சவுல் இராச்சியபாரம் பண்ணி அப்
போது ஒரு வருஷமாயிருந்தது. அவன்
இஸ்ரவேலை இரண்டு வருஷம் அரசாண்
2 ட பொழுது,—அவன் இஸ்ரவேலில் மூ
வாயிரம்பேரைத் தனக்குத் தெரிந்து
கொண்டான். அவர்களில் இரண்டாயி
ரம்பேர் சவுலோடே மிக்மாசிலும் பெ
த்தேல் மலையிலும், ஆயிரம் பேர் யோ
னத்தானோடே பென்யமின் தேசத்துக்
கிபேயாவிலும் இருந்தார்கள். ஆனாலும்
மற்றச் சனத்தை அவர் அவர் கூடாரங்க
ளுக்கு அனுப்பிவிட்டான்.
3 யோனத்தானே கிபேயாவிலே தாணை
யம் இருந்த பெலிஸ்தரை முறியடித்தா
ன். அதைப் பெலிஸ்தர் கேட்டார்கள்.
ஆகையினாலே சவுல் தேசம் எங்கும் இ
தை எபிரேயர் கேட்கக்கடவர்களென்று
4 எக்காளம் ஊதுவித்தான்.— தாணையம்
இருந்த பெலிஸ்தரைச் சவுல் முறியடித்

தானென்றும் பெலிஸ்தருக்கு இஸ்ரவே
ல் நாற்றமாய்ப் போயிற்றென்றும் இஸ்
ரவேல் எல்லாங் கேட்டபோது, சனஞ்
சவுலுக்குப் பின்செல்லக் கில்காலுக்கு
வரவழைப்பிக்கப்பட்டு வந்தது.—பெ 5
லிஸ்தர் இஸ்ரவேலோடு யுத்தம் பண்ணு
ம்படிக்கு முப்பதினாயிரம் வண்டிற்கார
ரும் ஆறாயிரங் குதிரைக்காரருங் கட
ற்கரை மணல் அத்தனை சனமுமாய்க் கூ
டிக்கொண்டு, வந்து ஏறிப் பெத்தாவே
னுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளய
ம் இறங்கினார்கள்.—அப்போது இஸ்ர 6
வேல் மனுஷர் தங்களுக்கு உண்டான
இக்கட்டைக் காண்கிறதினாலே சனந் த
னக்கு உண்டான நெருக்கத்தின் நிமித்
தங் கெபிகளிலும் முட்காடுகளிலுங் கன்
மலைகளிலுந் துருக்கங்களிலுங் குகைக
ளிலும் ஒளித்துக்கொண்டார்கள்.— எ 7
பிரேயர் யோர்தானையுங் கடந்து காத்
தேசத்திற்குங் கிலேயாத் தேசத்திற்கும்
போனார்கள். ஆனாலுஞ் சவுல் இன்னுங் கி
ல்காலில் இருந்தான். சனமெல்லாந் தத்த
ளிப்பாய் அவனுக்குப் பின் சென்றார்கள்.

8 அவன் சாமுவேல் தனக்குக் குறித்த
காலத்தின்படி, ஏழு நாள் மட்டுங் காத்
திருந்தான். ஆனாலும் சாமுவேல் கில்கா
லுக்கு வராதிருக்கிறபோது சனம் அவ
9 னை விட்டுச் சிதறிப்போயிற்று.—அப்
போது சவுல் சருவாங்கத் தகனபலியை
யுஞ் சமாதானப்பலிகளையும் என்னண்
டைக்குக் கொண்டுவாருங்களென்று சொ
ல்லிச் சருவாங்கத் தகனத்தைச் செ
10 லுத்தினான்.—அவன் சருவாங்கத் தகன
த்தைச் செலுத்தி முடிக்கிற போது இ
தோ, சாமுவேல் வந்தான். அப்போது
அவனை வினவிக்கொள்ள சவுல் அவனு
11 க்கு எதிர்க்கொண்டு போனான்.—நீர் செ
ய்ததென்னவென்று சாமுவேல் கேட்ட
தற்குச் சவுல் சொன்னதாவது, சனம்
என்னை விட்டுச் சிதறிப்போகிறதையுங்,
குறித்த நாட்களின் திட்டத்திலே நீர்
வராததையும் பெலிஸ்தர் மிக்மாசிலே
கூடிக்கொண்டிருக்கிறதையும் நான் க
12 ண்டபடியினாலே,—இப்போது பெலி
ஸ்தர் கில்காலில் இருக்கிற என்னண்டை
க்கு இறங்கி வருவார்களென்றும், நாயா

ளே இன்னும் யெகோவாவுடைய சமுக
த்தை நோக்கிக் கெஞ்சினதில்லையென்
றுஞ் சொல்லித் துணிந்து, சருவாங்கத்
தகனத்தைச் செலுத்தினேனென்றான்.
— ஆனாலுஞ் சாமுவேல் சவுலோடே 13
சொன்னதாவது, புத்தியீனமாய்ச் செ
ய்தீர். உம்முடைய தேவனாகிய யெகோ
வா உமக்குக் கற்பித்த கற்பனையைக் கை
க்கொள்ளாதேபோனீர். மற்றப்படி இ
ப்போது யெகோவா இஸ்ரவேலின்மே
ல் உம்முடைய இராச்சியபாரத்தை என்
றைக்குந் திடப்படுத்துவார்.—இப்போ 14
து உம்முடைய இராச்சியபாரம் நிலை
நில்லாது. யெகோவா தம்முடைய இருத
யத்திற்கேற்ற ஒரு புருஷனைத் தமக்குத்
தேடி, அவனை யெகோவா தம்முடைய
சனத்தின் மேலே தலைவனாய் இருக்கக்
கட்டளையிட்டார். ஏனெனில் யெகோவா
உமக்குக் கற்பித்ததை நீர் கைக்கொண்
டதில்லையென்று சொல்லி,—சாமுவேல் 15
எழுந்திருந்து, கில்காலைவிட்டுப் பென்
யமீன் தேசத்துக் கிபேயாவுக்கு ஏறிப்
போனான். பின்பு சவுல்தன்னோடே இரு

க்கிற சனத்தைத் தொகைபார்க்கிறபோ
து ஏறக்குறைய அறுநூறு பேராய் இ
16 ருந்தார்கள்.—சவுலும் அவன் குமார
னாகிய யோனத்தானும் அவர்களோடே
இருக்கிற சனமும் பென்யமின் தேசத்
துக் கிபேயாவில் இருந்துவிட்டார்கள்.
பெலிஸ்தரோ மிக்மாசிலே பாளயம் இ
றங்கியிருந்தார்கள்.
17 அழிக்கிறவர்கள் பெலிஸ்தரின் பாள
யத்தில் இருந்து மூன்று தண்டாய்ப்புற
ப்பட்டார்கள். ஒரு தண்டு ஒப்ரு வழி
யாய்ச் சூவால் தேசத்திற்கு நேராகப்
18 போயிற்று.—வேறொரு தண்டு பெத்
தொரோன் வழியாகப் போயிற்று. வே
றொரு தண்டு வனாந்தரத்தில் இருக்கிற
சேபோயீமின் பள்ளத்தாக்குக்கு எதிரா
ன எல்லை வழியாய்ப் போயிற்று.
19. இஸ்ரவேல் தேசத்தில் எங்கும் ஒரு
கருமான் அகப்பட்டதில்லை. ஏனென்று
ல் எபிரேயர் பட்டையங்களையாகிலும்
ஈட்டிகளையென்கிலுஞ் செப்பனிடாத
படிக்குப் பார்க்க வேண்டுமென்று பெ
20 லிஸ்தர் சொல்லியிருந்தார்கள்.-ஆகையா

ல் இஸ்ரவேல் அனைத்திலும் அவரவர்
தங்கள் கொழு இரும்புகளையுந் தங்கள்
மண்வெட்டிகளையுந் தங்கள் கோடாலி
களையுந் தீட்டி, ஆணிகளைக் கூர்மையா
க்குகிறதற்கும் பெலிஸ்தர் அண்டைக்கு
இறங்கிப் போக வேண்டியதாய் இருந்
தன.—அரிவாட்களையும் மண்வெட்டிக 21
ளையும் முக்கூருள்ள ஆயுதங்களையுங் கோ
டாலிகளையுங் கூர்மையாக்குகிறதற்கு அ
வர்களுக்கு அரங்கள் மாத்திரம் இருந்
தன —யுத்த நாள் வந்தபோது, சவுலோ 22
டும்யோனத்தாளோடும் இருக்கிற சகல ச
னத்தின் கையிலும் பட்டையமும் ஈட்டி
யும் இல்லாதிருந்தது. சவுலுக்கும் அவ
ன் குமாரனாகிய யோனத்தானுக்கும் மா
த்திரம் இருந்தன.—பெலிஸ்தரின் பாள 23
யம் மிக்மாசில் இருந்து போகிற வழியா
யிப் புறப்பட்டு வருகிறதாய் இருந்தது.

௰ச. அதிகாரம்.

இஸ்ரவேல் பெலிஸ்தரைச் சயங்கொண்டது.

ஒரு நாளிலே சம்பவித்ததேதெனில் 1

ற், சவுலின் குமாரனாகிய யோனத்தான்
தன் ஆயுதங்களைப் பிடிக்கிற பிள்ளையா
ண்டானுடனே, நமக்கு எதிராக அந்த
ண்டையில் இருக்கிற பெலிஸ்தரின் தா
ணையத்திற்குக் கடந்துபோவோம் வா
வென்று சொல்லி, அதைத் தன் தகப்ப
2 னுக்கு அறிவியாதிருந்தான்.—சவுலோ
கிபேயாவின் கடைசி முனையாகிய மிக்
ரோனிலே ஒரு மாதளைமரத்தின் கீழ் இ
ருந்தான். அவனோடே இருந்த சனம் ஏற
க்குறைய அறுநூறு பேராய் இருந்தார்க
3 ள்.—சீலோவிலே யெகோவாவுடைய ஆ
சாரியனாய் இருந்த ஏலியின் குமாரனாகிய
பினேகாசுக்குப் பிறந்த இக்கவொத்தின்
சகோதரனும் அகித்தோபின் குமாரனு
மாகிய அகியா என்கிறவன் ஆசாரியச்சா
ல்வையை அணிந்தவனாய் இருந்தான். யோ
னத்தான் போனதைச் சனம் அறியாதி
4 ருந்தது.—யோனத்தான் பெலிஸ்தரின்
தாணையத்திற்குக் கடந்துபோகப் பார்த்
த வழிகளின் நடுவே இந்தண்டை ஒரு க
ன்மலைக்குன்றும் அந்தண்டை ஒருகன்
மலைக் குன்றும் இருந்தது. ஒன்று போ

த்சேஸ் என்றும் மற்றொன்று சேனே எ
ன்றும் பேர்கொண்டது.-அந்தக் குன்று 5
களில் ஒன்று வடக்கே மிக்மாசுக்கு எதி
ராகவும் மற்றொன்று தெற்கே கிபேயாவு
க்கு எதிராகவும் இருந்தது,-யோனத்தா 6
ன் தன் ஆயுதங்களைப்பிடிக்கிற பிள்ளையா
ண்டாரோடே, சுன்னத்தில்லாதவர்களின்
அந்தத் தாணையத்திற்குக் கடந்து போ
வோம் வா. ஒருவேளை யெகோவா நமக்
காக ஒரு காரியஞ் செய்வார். ஏனென்று
ல் அநேகம் பேரைக் கொண்டாகிலுங்
கொஞ்சப் பேரைக் கொண்டென்கிலும்
இரட்சிக்க யெகோவாவுக்குத் தடை இல்
லையென்றான்.-அப்போது அவன் ஆயுத 7
ங்களைப் பிடிக்கிறவன் அவனோடே, உம்
முடைய இருதயத்தில் இருக்கிறதை எ
ல்லாஞ் செய்யும். அப்படிப்போம். இ
தோ, உம்முடைய மனதுக்கேற்றபடி
நானும் உம்மோடே வருகிறேனெ
ன்றான்.— அப்போது யோனத்தான் 8
சொன்னதாவது, இதோ, நாங் கடந்து
அந்த மனுஷரண்டைக்குப் போகிறவர்
களாய் அவர்களுக்கு நம்மைக் காண்பி

9 ப்போம்.—நாங்கள் உங்களண்டைக்கு
வருமட்டும் நில்லுங்களென்று நம்மோ
டே சொன்னார்களானால் நாம் அவர்கள
ண்டைக்கு ஏறிப்போகாமல் நம்முடைய
10 நிலையிலே நிற்போம்.—எங்களண்டைக்கு
ஏறிவாருங்களென்றார்களேயாகில் ஏறிப்
போவோம். ஏனென்றால் யெகோவா அ
வர்களை நம்முடைய கையிலே ஒப்புக்
கொடுத்தார். இது நமக்கு அடையாள
11 மென்றான்.—அப்படியே அவர்கள் இரு
வரும் பெலிஸ்தரின் தாணையத்திற்குத் த
ங்களைக் காண்பித்தார்கள். அப்போது
பெலிஸ்தர் இதோ, எபிரேயர் ஒளித்து
க்கொண்டிருந்த அளைகளை விட்டுப் புறப்
12 படுகிறார்களென்று சொல்லி,—தாணையம்
இருக்கிற மனுஷர் யோனத்தானையும்
அவன் ஆயுதங்களைப் பிடிக்கிறவனையு
ம் பார்த்து, எங்களண்டைக்கு ஏறிவா
ருங்கள். உங்களுக்குப் புத்தி கற்பிப்போ
மென்றார்கள். அப்போது யோனத்தா
ன் தன் ஆயுதங்களைப் பிடிக்கிறவனோ
டே, என் பிறகாலே ஏறிவா, ஏனென்றா
ல் யெகோவா அவர்களை இஸ்ரவேலின்

கையிலே ஒப்புக்கொடுத்தாரென்று சொ
ல்லி,—யோனத்தான் தன் கைகளாலுந் 13
தன் கால்களாலுந் தவழ்ந்து ஏறினான். அ
வன் ஆயுதங்களைப் பிடிக்கிறவன் அவன்
பிறகாலே ஏறினான். அப்போது அவர்க
ள் யோனத்தானுக்கு முன்பாக விழுந்தா
ர்கள். அவன் ஆயுதங்களைப் பிடிக்கிறவன்
அவன் பிறகாலே வெட்டிக்கொண்டே
போனான்.—யோனத்தானும் அவன் ஆயு 14
தங்களைப் பிடிக்கிறவனும் அடித்த அந்த
முந்தின அடியிலே ஏறக்குறைய இருபது
பேர் அரையேர் நிலமான விஸ்தாரத்தில்
விழுந்தார்கள்.

அப்பொழுது வெளியில் இருந்த பாள 15
யத்திலுஞ் சகல சனத்திலும் பயங்கரம் உ
ண்டாய்த் தாணையம் இருந்தவர்களுங்கொ
ள்ளையிடப்போன தண்டுங் கூடத் திகில்
அடைந்ததினாலே பூமி அதிர்ந்தது. ஏனெ
னில் அது தேவனால் உண்டான பயங்கர
மாய் இருந்தது,-இதோ அந்த ஏராளமான 16
கூட்டங் கலைந்து, ஒருவர்மேல் ஒருவர் வி
ழுகிறதைப் பென்யமீன் கிபேயாவிலே சவு
லுக்கு இருந்த சாமக்காரர் கண்டார்கள்.

17 அப்போது சவுல் தன்னோடே இருக்கி
ற சனத்துடனே, நம்மிடத்தில் இருந்து
போனவர்கள் ஆரென்று இலக்கம் பாரு
ங்களேனென்றான். அவர்கள் இலக்கம் பா
ர்க்கிற போது இதோ, யோனத்தானும்
அவன் ஆயுதங்களைப் பிடிக்கிறவனும் இ
18 ல்லாதிருந்தார்கள்.— அப்போது சவுல்
அகியாவுடனே தேவனுடைய பெட்டி
யைச் சேரக் கொண்டுவாவென்றான். ஏ
னென்றால் தேவனுடைய பெட்டி அந்
நாளிலே இஸ்ரவேற் புத்திரரிடத்திலே
19 இருந்தது.- இப்படிச் சவுல் ஆசாரியனோ
டே பேசுகையில், பெலிஸ்தரின் பாளய
த்தில் உண்டான கலகம் வெகு அதிகமா
யிற்று. அப்போது சவுல் ஆசாரியனோ
20 டே, இருக்கட்டுமென்றான்.- சவுலும் அ
வனோடிருந்த சனமும் ஒருவரை ஒரு
வர் கூப்பிட்டு யுத்த களத்திற்கு வந்தார்
கள். இதோ, ஒருவர் பட்டயம் ஒருவரு
க்கு விரோதமாய் இருந்து மகா பெரிய
21 அமளியாயிற்று.— முந்நாளிலே பெலிஸ்
தரிடத்தில் இருந்து, அவர்களோடே பாள
யத்திலே திரிந்துவந்து எறின எபிரேயரு

று சவுலோடும் யோனத்தானோடும் இரு
க்கிற இஸ்ரவேலரோடே கூடிக்கொண் 22
டார்கள்.—எப்பிராயீம் மலைகளில் ஒளித்
துக்கொண்டிருந்த சகல இஸ்ரவேலரு
ம் பெலிஸ்தர் முறிந்து ஓடுகிறதைக் கே
ட்டபோது, இவர்களும் யுத்தத்திலே
அவர்களை ஓட்டித் தொடர்ந்தார்கள்.
—இப்படி யெகோவா அன்றையித்தின 23
ம் இஸ்ரவேலை இரட்சிக்கிறதினாலே அந்
த யுத்தம் பெத்தாவேன் மட்டுக்கும் நட
ந்தது.

ஆனாலும் இஸ்ரவேலர் அன்றையித்தி 24
னம் வெகு வருத்தம் அடைந்தார்கள். எ
னென்றால் நான் என் சத்துருக்கள் கையி
லே பழிவாங்கும்படிக்கு, எவன் சாய
ங்காலமட்டும் யொருமற் போசனஞ்
சாப்பிடுகிறானோ, அவன் சபிக்கப்பட்ட
வனென்று சவுல் சனத்தை ஆணையிட்டா
ன். ஆகையால் சனம் எல்லாம் போசன
ம் உருசியாதிருந்தார்கள்.-தேசத்தின் ச 25
னம் எல்லாம் ஒரு காட்டிலே வந்தார்கள்.
அங்கே வெளியிலே தேன்கட்டி இருந்த
து.—சனங் காட்டிலே வந்த போது, இ 26

தோ, தேன் ஒழுகிக்கொண்டிருந்தது
ஆனாலும் ஒருவரும் அதைத் தன் கையி
னாலே தொட்டுத் தன் வாய்க்கெடுத்து
க்கொண்டதில்லை. ஏனெனிற் சனம் அந்
த ஆணையின் நிமித்தம் பயப்பட்டது.—
27 யோனத்தானோ தன் தகப்பன் சனத்தை
ஆணையிட்டதைக் கேள்விப்படாதிருந்து,
தன் கையில் இருந்த கோலை நீட்டி, அ
தின் முனையினாலே தேன் கூட்டிலே கு
த்தி, அதை எடுத்துத் தன் வாயிலே
போட்டுக்கொண்டான். அதினாலே அவ
28 ன் கண்கள் தெளிவாயின.—அப்போ
து சனத்திலே ஒருவன் இன்றைக்குப்
போசனஞ்சாப்பிடுகிறவன் சபிக்கப்பட்
டவனென்று உம்முடைய தகப்பனார் ச
னத்தை ஆணையிடவேயிட்டார். ஆகை
யினாலே சனம் விடாய்த்திருக்கின்றதெ
29 ன்றான்.—அப்போது யோனத்தான் சொ
ன்னதாவது, என் தகப்பன் தேசத்தின்
சனத்தைக்கலக்கமாக்கினார். நான் இந்தத்
தேனிலே கொஞ்சம் உருசித்ததினாலே
என் கண்கள் தெளிவாயினவென்று பா
30 ருங்களேன்.—இன்றையத்தினஞ் சனந் த

ங்களுக்கு அகப்பட்ட தங்கள் சத்துருக்
களின் கொள்ளையிலே எதாகிலும் பு
சிக்கவே புசித்திருந்தால் எத்தனை நல
மாய் இருக்கும். இப்போதோ பெலிஸ்த
ரை முறியடிக்குதல் அத்தனை பெரியதா
ய் இராதென்றான்.—அவர்கள் அன்றையித் 31
தினம் மிக்மாசில் இருந்து ஆயலோன்மட்
டும் பெலிஸ்தரை முறியடித்த போது ச
னம் மெத்தவும் விடாய்த்திருந்தது —
அப்போது சனங் கொள்ளையின்மேற் ப 32
றப்பாகி, ஆடுகளையும் மாடுகளையுங் கன்
றுக்குட்டிகளையும் பிடித்துத் தரையி
லே போட்டடித்து இரத்தத்தோடிரு
க்கிறதாகப் புசித்தார்கள்.— அப்போ 33
து இதோ, இரத்தத்தோடிருக்கிறதைப்
புசிக்கிறதினாலே சனங்கள் யெகோவா
வுக்கு எராத பாவஞ் செய்கிறார்களெ
ன்று சவுலுக்கு அறிவித்தார்கள். அப்
போது அவன், நீங்கள் துரோகம் பண்
ணினீர்கள். இந்நேரமே ஒரு பெரிய க
ல்லை என்னண்டைக்கு உருட்டிக்கொண்
டுவாருங்களென்றும்,—நீங்கள் சனத்திற் 34
குள்ளே சிதறித் திரிந்து, இரத்தத்தோ

டே இருக்கிறதைச் சாப்பிடுகிறதினாலே
யெகோவாவுக்கு விரோத பாவஞ் செய்
யாதபடிக்கு அவரவர் தங்கள் மாட்டை
யும் அவரவர் தங்கள் ஆட்டையும் என்
னண்டைக்குக் கொண்டுவந்து, இங்கே அ
டித்துப் பின்பு சாப்பிட வேண்டுமென்
று அவர்களுக்குச் சொல்லுங்களென்று
ஞ் சொன்னான். ஆகையாற் சனம் எல்
லாம் அவரவர் தங்கள் மாடுகளை அ
ன்றிராத்திரி தங்கள் கையினாலே கொ
35 ண்டுவந்து அங்கே அடித்தார்கள்.—பிற
கு சவுல் யெகோவாவுக்கு ஒரு பீடத்
தைக் கட்டினான். அது அவன் யெகோ
வாவுக்குக் கட்டின முந்தின பீடமானது.
36 —அதற்குப் பிறகு சவுல், நாம் இந்த இ
ராத்திரியிலே பெலிஸ்தரின் பின்னாலே இ
றங்கிப் போய், விடியற்காலம் வெளிச்ச
மாகுமட்டும் அவர்களைக் கொள்ளையிட்
டு, அவர்களில் ஒருவரையும் மீதியாக வை
யாதிருப்போமாகவென்றதற்கு அவர்க
ள் உம்முடைய கண்களுக்கு நலமானப
டி எல்லாஞ் செய்யுமென்றார்கள். ஆ
னாலும் ஆசாரியன், இங்கே தேவன் சன்

விதிக்குச் சேரக் கடவோமென்றான்.—
அப்படியே பெலிஸ்தருக்குப் பின்னு 37
க இறங்கிப்போவேனு, அவர்களை இஸ்ர
வேலின்கையிலொப்புக்கொடுப்பீரோவெ
ன்றுசவுல் தேவனைக் கேட்டான். ஆனாலு
ம் அவர் அந்த நாளிலே அவனுக்குமறு
வுத்தரவுஅருளினதில்லை.-அப்போது சவு 38
ல் சொன்னதாவது, சனத்தின் சகல சே
னைகளே, நீங்கள் இங்கே சேர்ந்து, எதினு
லே இன்று இந்தக் குற்றம் இருக்கின்றதெ
ன்று அறிந்துபாருங்கள். -ஏனெனில் அது 39
என் குமாரனுகிய யோனத்தான்பேரில்
இருந்தாலும் அவன் சாகவே சாகவேண்
டுமென்று இஸ்ரவேலை இரட்சிக்கிற யெ
கோவாவுடைய சீவனைக்கொண்டு சொல்
லுகிறேனென்றான். ஆனாலும் சகல சன
த்திலும் ஒருவனும் அவனுக்குப் பிரத்தி
யுத்தாரஞ் சொல்லவில்லை.—அதற்குப் பி 40
ன் அவன் இஸ்ரவேலோடெல்லாம் நீங்
கள் அந்தப் புறத்திலே இருங்கள். நானு
ம் என் குமாரனுகிய யோனத்தானும் இ
ந்தப் புறத்தில் இருப்போமென்றான். ச
னஞ் சவுலுடனே, உம்முடையகண்களுக்

கு நலமானபடி செய்யுமென்றார்கள்.—
41 அப்போது சவுல் இஸ்ரவேலின் தேவனு
கிய யெகோவாவை நோக்கி, நிதானமா
யிக் கட்டளை இடுவீராகவென்றான். அப்
போது யோனத்தானுஞ் சவுலும் பிடி
பட்டார்கள். சனமோ தப்பிப்போயிற்
42 று.—எனக்கும் என் குமாரனாகிய யோ
னத்தானுக்குஞ் சீட்டுப்போடுங்களென்
று சவுல் சொன்னபொழுது யோனத்
43 தான் பிடிபட்டான்.—அப்போது சவு
ல் யோனத்தானோடே, நீ செய்ததென்ன
வென்று எனக்கு அறிவியென்றான். யோ
னத்தான் அவனுக்கு அறிவித்து, என் கை
யில் இருக்கிற கோலின் முனையினாலே நா
ன் கொஞ்சந் தேன் எடுத்து உருசிக்கவே
உருசித்தேன். இதோ, அதற்காக நான்
44 சாகவேண்டுமென்றான்.—அப்போது ச
வுல், யோனத்தானே! நீ சாகவே சாக
வேண்டும். இல்லாவிட்டால் தேவன் எ
னக்கு இப்படியும் அப்படியுஞ் செய்ய
45 க் கடவரென்றான்.—சனமோ சவுலுட
னே, இஸ்ரவேலிலே இந்தப் பெரிய இர
ட்சிப்பைச் செய்த யோனத்தான் கொ

லைசெய்யப்படலாமோ? அது வேண்
டாம். அவன் தலையில் இருக்கிற ஒரு மயி
ருந் தரையிலே விழப்போகிறதில்லையெ
ன்று யெகோவாவுடைய ஜீவனைக்கொ
ண்டு சொல்லுகிறோம். ஏனெனில் தே
வன் துணையாய் அவன் இன்று காரியம்
நடப்பித்தானென்றார்கள். அப்படியே
யோனத்தான் சாகாதபடிக்குச் சனம் அ
வனை மீட்டுக்கொண்டது.— சவுல் பெ 46
லிஸ்தரைத் தொடருகிறதை விட்டுவந்து
ஏறினான். பெலிஸ்தருந் தங்கள் தலத்திற்
குப் போய்விட்டார்கள்.— இப்படிச் ச 47
வுல் இஸ்ரவேலை ஆளுகிற இராச்சியபா
ரத்தைக் கட்டிக்கொண்டது முதற் சுற்றி
லும் இருக்கிற தன்னுடைய எல்லாச் சத்
துருக்களுமாகிய மோவாபியருக்கும் அ
ம்மோன் புத்திரருக்கும் ஏதோமுக்குஞ்
சோபாவின் இராசாக்களுக்கும் பெலி
ஸ்தருக்கும் விரோதமாக யுத்தம் பண்
ணி, எவர்கள் மேலே திரும்பினானோ, அ
வர்களை எல்லாம் ஆக்கினையிட்டான்.— 48
அவன் பலத்துக்கொண்டு, அமலேக்கிய
ரை முறியடித்து, இஸ்ரவேலைத் தொ

ள்ளையிடுகிற யாவர் கைக்கும் அவனை நீங்
49 கலாக்கி விடுவித்தான்.-சவுலுக்கு இருந்த
குமாரர் யோனத்தான், இஸ்வி, மல்கி
யா, சூவா என்றவர்கள். அவனுடைய இ
ரண்டு குமாரத்திகளின் நாமங்களேதெ
ன்றால், மூத்தவளுக்கு மேராப் என்ற நா
மமும் இளையவளுக்கு மீகாள் என்ற நாம
50 மும் இருந்தது.—சவுலுடைய பெண்
சாதியின்பேர் அகினோவாம். அவள் அ
கிமாசின் குமாரத்தியாய் இருந்தாள்.
அவனுடைய சேனாபதியின் பேர் அப்
னேர். இவன் சவுலுடைய சிறியதகப்ப
னாகிய நேரின் குமாரனாய் இருந்தான்.—
51 கீசு சவுலின் தகப்பனானவன். அப்னேரி
ன் தகப்பனாகிய நேரோ ஆபியேலின் கு
52 மாரனாய் இருந்தான்.-சவுல் இருந்த நாள்
எல்லாம் பெலிஸ்தரின்மேலே கடினமா
ன யுத்தம் நடந்தது. சவுல் ஒரு பராக்
கிரம மனுஷனையும் ஒரு பலசாலியையு
ங் காண்கிற போது, அவர்களை எல்லாந்
தன்னிடமாகச் சேர்த்துக்கொண்டான்.

௰௫. அதிகாரம்.

சவுல் ஆமலேக்கியரோடே பண்ணின யுத்தத்தி லே யெகோவாவுக்குக் கீழ்ப்படியாதே போனதி ன் நிமித்தம் அவராலே புறக்கணிக்கப்பட்டது.

பின்பு சாமுவேல் சவுலோடே சொ 1
ன்னதாவது, இஸ்ரவேலாகிய தம்மு
டைய சனத்தின்மேல் உம்மை இராசா
வாக அபிஷேகம் பண்ணுகிறதற்கு யெ
கோவா என்னை அனுப்பினார்; இப்
போதும் யெகோவாவுடைய வார்த்தை
களின் சத்தத்தைக் கேளும்.—சேனைகளு 2
டைய யெகோவா சொல்லுகிறதெ
னில், இஸ்ரவேல் எகிப்தில் இருந்து வந்
து ஏறுகிறபோது, ஆமலேக் அதற்கு வ
ழியை மறித்த அதின் செய்கையை மன
திலே வைத்தோம்.— இப்போதும் நீ 3
போய், ஆமலேக்கை மடங்கடித்து, அ
வனுக்கு உண்டான எல்லாவற்றையுஞ் சங்
கரித்து, அவன்மேல் இரக்கம் வையாம
ற் புருஷரையும், பெண்சாதிகளையும், பி
ள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுக
ளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும்,

கழுதைகளையுங் கொன்றுபோடக் கட
4 வாயென்கிறாரென்று சொன்னான்.— அ
ப்போது சவுல் இதைச் சனத்துக்கு அ
றியப்படுத்தித் தெலாயிமிலே அவர்களை
த் தொகைபார்த்தான். அவர்கள் இருநா
றாயிரங் காலாட்களும், யூதமனுஷரிற் ப
த்தாயிரம் பேருமாய் இருந்தார்கள்.—
5 சவுல் ஆமலேக்குடைய பட்டணமட்
டும் வந்து, பள்ளத்தாக்கிலே ஒரு பதி
6 விடையை வைத்தான்.—ஆனாலுஞ் சவுல்
கேனியருடனே, நான் ஆமலேக்கியரோ
டே உங்களையும் வாரிக்கொள்ளாதபடி
க்கு, நீங்கள் அவர்கள் நடுவில் இருந்து பு
றப்பட்டு விலகி வாருங்கள். ஏனெனில்
இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து வந்து ஏ
றுகிறபோது, நீங்கள் அவர்கள் எல்லாரு
க்குந் தயவு செய்தீர்களென்றான். அ
ப்படியே கேனியர் ஆமலேக்கியரின் ந
7 டுவில் இருந்து விலகிப்போனார்.— அப்
போது சவுல் ஆவிலாத் துவக்கி எகிப்த்
திற்கு எதிரே இருக்கிற சூருக்குப் போ
கும் எல்லைமட்டும் இருந்த ஆமலேக்கி
8 யரை மடங்கடித்து,— ஆமலேக்கியரின்

இராசாவாகிய ஆகாகை உயிரோடே பிடி
த்தான். ஆனாலும் சனம் அனைத்தையும்
பட்டயக் கருக்கினாலே சங்காரம் பண்
ணினான்.— ஆனாலும் சவுலுஞ் சனமும் 9
ஆகாகையும் ஆடுமாடுகளில் முதற்தர
மானதையும் இரண்டாந்தரமானதையு
ம் ஆட்டுக்குட்டிகளையும், நலமானதெ
ல்லாவற்றையுஞ் சங்காரம்பண்ண மனதி
ல்லாமல் தப்ப வைத்துப் புறக்கணிக்க
ப்படத்தக்கதும் ஆகாததுமான சகலவ
ஸ்துவையுமே சங்காரமபண்ணினார்கள்.
—அப்போது யெகோவாவுடைய வார் 10
த்தை சாமுவேலுக்கு உண்டாகி, அவர்
சொன்னதாவது,—நாம் சவுலை இராசா 11
வாக்கினது நமக்கு மனஸ்தாபமாய் இ
ருக்கின்றது. ஏனெனில் அவன் நம்மை
விட்டுத் திரும்பி நம்முடைய வார்த்தை
களை நிறைவேற்றாமற் போனானென்று
ர். அப்போது சாமுவேல் மன எரிச்ச
லாகி இராமுழுதும் யெகோவாவை நோ
க்கிக் கூப்பிட்டான்.—மறு நாள் அதிகா 12
லமே சாமுவேல் சவுலைச் சந்திக்கப்போ
னான். அப்போது சவுல் கர்மேலுக்கு

வந்து, இதோ, தனக்கு ஒரு வெற்றிவி
ருதை நாட்டினானென்றும், பின்பு சுற்
றிக்கொண்டு கடந்து கில்காலுக்கு இற
ங்கிப்போனானென்றுஞ் சாமுவேலுக்கு
13 அறிவிக்கப்பட்டது.— சாமுவேல் சவுல
ண்டைக்கு வந்தபோது, சவுல் அவனு
டனே, நீர் யெகோவாவுக்குள் ஆசீர்வதி
க்கப்பட்டவர். யெகோவாவுடைய வார்
த்தையை நிறைவேற்றினேனென்றான்.–
14 அதற்குச் சாமுவேல், ஆனாலும் என் கா
துகளில் விழுகிற அந்த ஆடுகளின் சத்
தமும் நான் கேட்கிற மாடுகளின் சத்தமு
15 ம் என்னவென்றான்.—அப்போது சவு
ல், ஆமலேக்கியரிடத்தில் இருந்து அவைக
ளைக் கொண்டுவந்தார்கள். ஏனெனில் ச
னம் ஆடுமாடுகளில் நலமானதை உம்மு
டைய தேவனாகிய யெகோவாவுக்குப் ப
லியிடும்படிக்குத் தப்ப வைத்தார்கள். ஆ
னாலும் மற்றதைச் சங்காரம் பண்ணி
16 னோமென்றான்.—அப்போது சாமுவே
ல் அந்தப் பேச்சை விடு, யெகோவா இந்
த இராத்திரியிலே என்னோடே சொன்
னதை உமக்கு அறிவிப்பேனென்று சவு

லோடே சொன்னான். இவன் அவனுடை
னே சொல்லுமென்றான்.—அப்போது 17
சாமுவேல் சொன்னதாவது, நீர் உம்மு
டைய பார்வைக்குச் சின்னவராயிருக்கி
றபோதல்லோ இஸ்ரவேல் கோத்திரங்க
ளுக்குத் தலைவரானீர்! அப்போது யெ
கோவா உம்மை இஸ்ரவேலின்மேல் இ
ராசாவாக அபிஷேகம் பண்ணுவித்தார்.
—இப்போதும் யெகோவா உம்மை அ 18
ந்த வழியாய் அனுப்பி, நீர் போய், ஆம
லேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்க
ரித்து அவர்களை நிர்மூலமாக்கித் தீரு
மட்டும் அவர்களோடு யுத்தம் பண்ணெ
ன்றாரே.—இப்படி இருக்க, நீர் யெ 19
கோவாவுடைய சொற்கேளாமல், கொ
ள்ளையின்மேற் பறந்து, யெகோவாவு
டைய பார்வைக்குப் பொல்லாங்கான
தைச் செய்ததென்னவென்றான்.— அப் 20
போது சவுல் சாமுவேலோடே சொன்ன
தாவது, நான் யெகோவாவுடைய சொ
ற்கேட்டு யெகோவா என்னை அனுப்பி
ன வழியாய்ப் போய், ஆமலேக்கின் இரா
சாவாகிய ஆகாகைக் கொண்டுவந்து ஆ

மலேக்கியரைச் சங்காரம் பண்ணினே
21 னே.—சனமோ உம்முடைய தேவ
னாகிய யெகோவாவுக்குக் கில்காலி
லே பலியிடுகிறதற்காக கொள்ளையிலே
சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதா
னமானதைப் பிடித்து ஓட்டிவந்தார்க
22 ளென்றான்.—ஆனாலும் சாமுவேல் சொ
ன்னதாவது, யெகோவாவுடைய சத்தத்
திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலுஞ்
சருவாங்கத் தகனங்களும் பலிகளும் யெ
கோவாவுக்குப் பிரியமாயிருக்குமோ? இ
தோ, பலியைப் பார்க்கக் கீழ்ப்படியுத
லும், ஆட்டுக்கடாய்களின் கொழுப்பை
ப்பார்க்கக் கவனித்திருக்குதலுந் தாவிளே.
23 —ஏனென்றால் இரண்டகம் பண்ணுத
ல் பில்லிசூனியப் பாவத்திற்கும் முருட்
டாட்டம்பண்ணுதல் மாயையானதையு
ஞ் சுரூபங்களையுங் கும்பிடுகிறதற்குஞ்
சரியாயிருக்கின்றது. நீர் யெகோவாவு
டைய வார்த்தையைப் புறக்கணித்தபடி
யினாலே அவர் உம்மையும் நீர் இராசா
வசயிராதபடிக்குப் புறக்கணித்தாரென்
24 றான்.—அப்போது சவுல் சாமுவேலோ

டே சொன்னதாவது, நான் யெகோவா
வுடைய வாக்கையும் உம்முடைய வார்த்
தைகளையும் மீறுகிறதினாலே பாவஞ்செ
ய்தேன். ஏனெனில் நான் சனத்திற்குப்
பயந்து, அவர்கள் சொற் கேட்டேன்.
—இப்போதும் நீர் என் பாவத்தை ம 25
ன்னித்து, நான் யெகோவாவைப் பணிந்
துகொள்ளும்படிக்கு,என்னோடே திரும்
பிக்கொண்டுவாருமேனென்றான்.—ஆனா 26
லும் சாமுவேல் சவுலுடனே, நான் உம்
மோடே திரும்புவதில்லை. ஏனெனில் யெ
கோவாவுடைய வார்த்தையைப் புறக்க
ணித்தீர். நீர் இஸ்ரவேலின்மேல் இராசா
வாய் இராதபடிக்கு யெகோவா உம்மை
யும் புறக்கணித்தாரென்றான்.-போகிறத 27
ற்காகச் சாமுவேல் திரும்புகிற பொழு
து, இவன் அவன் சால்வையின் முனை
யைப் பிடித்துக்கொண்டான். அது கி
ழிந்துபோயிற்று.— அப்போது சாமு 28
வேல் அவனோடே சொன்னதாவது, உ
ம்மிடத்தில் இருந்த இஸ்ரவேலின் இரா
ச்சியபாரத்தை இன்று யெகோவா கிழி
த்துப்போட்டு, உம்மைப் பார்க்க நல்

லவனுயிருக்கிற உம்முடைய தோழனுக்
29 கு அதைக் கொடுத்தார்.—இஸ்ரவேலி
ன் செய் பலனானவர் பொய்சொல்லுகி
றதுமில்லை. தாம் சொன்னதற்கு மனஸ்
தாபப்படுகிறதுமில்லை. ஏனென்றால் அ
தற்கு மனஸ்தாபப்பட அவர் மனுஷ
30 ன் அல்லவென்றான்.—அதற்கவன் நான்
பாவஞ் செய்தேன். இப்போதும் என்
சனத்தின் மூப்பருக்கு முன்பாகவும்,
இஸ்ரவேலுக்கு முன்பாகவும், நீர் என்
னைக் கனம்பண்ணி, நான் உம்முடைய
தேவனாகிய யெகோவாவைப் பணிந்து
கொள்ளும்படிக்கு, என்னோடே திரும்
31 பிக்கொண்டு வாருமென்றான்.—அப்போ
து சாமுவேல் திரும்பிக்கொண்டு சவு
லுக்குப் பின்சென்றான். சவுல் யெகோ
32 வாவைப் பணிந்துகொண்டான்.—பிறகு
சாமுவேல் ஆமலேக்கின் இராசாவா
கிய ஆகாகை என்னண்டைக்குக் கொண்
டுவாருங்களென்றான். ஆகாகு சந்தோஷ
மயக்கமாய் அவனண்டைக்குப் போய்,
மரணத்தின் கசப்பு அற்றுப்போனது
33 நிச்சயமென்றான்.— சாமுவேலோ உன்

னுடைய பட்டையம் ஸ்திரிகளைப் பிள்ளை
களற்றவர்களாக்கினதுபோலே ஸ்திரிகளு
க்குள்ளே உன்னுடைய தாயாரும் பிள்
ளைகளற்றவளாவாளென்று சொல்லிச் சா
முவேல் கில்காலிலே யெகோவாவுக்கு
முன்பாக ஆகாகைத் துண்டித்துப்போ
ட்டான்.-பின்பு சாமுவேல் இராமாவுக்கு 34
ப்போனான், சவுலோ தன் ஊராகிய கி
பெயாவில் இருக்கிற தன் வீட்டுக்குப் போ
ய் ஏறினான்.—சவுல் மரணமடையும் நா 35
ள் மட்டுஞ் சாமுவேல் அப்புறம் அவனை
க் கண்டு பேசினதில்லை. ஏனென்றால்
இஸ்ரவேலின் மேல் சவுலை இராசாவாக்கி
னதற்கு யெகோவா மனஸ்தாபப்பட்ட
நிமித்தஞ் சாமுவேல் சவுலுக்காகத் துக்
கித்துக்கொண்டிருந்தான்.

௰௬. அதிகாரம்.

தாவீது முதல்விசை அபிஷேகம் பண்ண
ப்பட்டது

யெகோவா சாமுவேலுடனே இஸ்ர 1
வேலின் மேல் இராசாவாய் இராதபடிக்

குநாம் புறக்கணித்த சவுலுக்காக நீ எ
ந்த மட்டுந் துக்கமாய் இருப்பாய்? நீ உ
ன் கொம்பை எண்ணெய்யால் நிரப்பிவா.
பெத்லகேமியனாகிய இசாயண்டைக்கு
உன்னை அனுப்புவோம். ஏனெனில் அவ
ன் குமாரரில் ஒருவனை நமக்கு இராசரா
வாகத் தெரிந்துகொண்டோமென்றார்.
2 -அதற்குச் சாமுவேல் நான் போவதெப்
படி? சவுல் அதைக் கேட்டு என்னைக்கொ
ன்றுபோடுவானென்றான். அப்போது
யெகோவா சொன்னதாவது, நீ ஒரு க
டாரிக்கன்றைக் கையோடே கொண்டு
போய் யெகோவாவுக்குப் பலியிடவந்தே
3 னென்று சொல்லி,-இசாயைப் பலிவிரு
ந்துக்கு அழைப்பாயாக. அப்போது நீ
செய்யவேண்டியதை நாம் உனக்கு அறி
விப்போம். நாம் உனக்குச் சொல்லப்
போகிறவனை நமக்கு அபிஷேகம் பண்
4 ணுவாயாகவென்றார்.-யெகோவா சொன்
னபடியே சாமுவேல் செய்து பெத்லகே
முக்கு வந்தான். அப்போது ஊரின் மூ
ப்பர் தத்தளிப்போடே அவனுக்கு எதி
ர்கொண்டுவந்து நீர் வருகிறது சமாதா

ணமோவென்றார்கள்.- அதற்கு அவன் ச 5
மாதானந்தானே, யெகோவாவுக்குப் பலி
யிட வந்தேன். நீங்கள் உங்களைப் பரிசுத்த
ம்பண்ணிக்கொண்டு என்னுடனே பலி
விருந்திற்கு வாருங்களென்று சொல்லி, ஈ
சாயையும் அவன் குமாரரையும் பரிசுத்
தம்பண்ணி அவர்களைப் பலி விருந்துக்
கு அழைத்தான்.- அவர்கள் உட்பிரவேசி 6
க்கையில் அவன் எலியாவைப் பார்த்து
யெகோவாவுடைய பார்வைக்கு அவரா
ல் அபிஷேகம் பண்ணப்படுபவன் இவன்
தானாக்குமென்றான்.- ஆனாலும் யெகோ 7
வா சாமுவேலுடனே நீ அவனுடைய உ
ருவையும் அவன் தன் வளர்த்தியிலே
நெட்டையனென்பதையும் நோக்காயா
க. ஏனெனில் அவனைப் புறக்கணித்தோ
ம். அதேனென்றால் மனுஷன் பார்க்கிற
படி பாரோம். ஏனெனில் மனுஷன் க
ண்களுக்கு முன்பாக இருக்கிறதைப்
பார்ப்பான். யெகோவா இருதயத்தைப்
பார்க்கிறாரென்றார். — அப்போது ஈசா 8
ய் அபீனதாபை அழைத்து அவனைச் சா
முவேலுக்கு எதிராகக் நடந்துபோக

ப் பண்ணினான். அவனோ, இவனையும்
யெகோவா தெரிந்துகொண்டதில்லையெ
9 ன்றான்.— ஈசாய் சம்மாவையுங் கடந்து
போகப் பண்ணினான். ஆனாலும் அவன்
இவனையும் யெகோவா தெரிந்துகொ
10 ண்டதில்லையென்றான்.— இப்படி ஈசா
யீ தன் ஏழு குமாரரைச் சாமுவேலு
க்கு எதிராகக் கடந்துபோகப் பண்ணி
னான். ஆனாலும் சாமுவேல் ஈசாயுட
னே, யெகோவா இவர்களில் ஒருவனையு
ந் தெரிந்துகொண்டதில்லையென்று சொ
11 ல்லி,—இருக்கிற பிள்ளைகள் இதோடே
சரியோவென்று ஈசாயைக் கேட்டான்.
அதற்கவன், சின்னவன் ஒருவன் இன்
னம் மீதியாய் இருக்கிறான். இதோ,
அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிரு
க்கிறானென்றான். அப்போது சாமுவே
ல்ஈசாயுடனே, அவனை அழைத்தனுப்பு.
ஏனெனில் அவன் இங்கே வருமட்டும் நா
12 ம் பந்தியிருப்பதில்லையென்றான்.— அவ
னை அழைத்தனுப்பி வரப்பண்ணினான்;
அவன் சிவந்த மேனியும் அழகான கண்
களுள்ளவனும் நல்ல உருபுள்ளவனுமாய்

இருந்தான். அப்போது யெகோவா, நீ எ
ழுந்து அவனை அபிஷேகம்பண்ணு. அவ
னேயென்றார் - அப்போது சாமுவேல் எ 13
ண்ணெய் இருக்கிற கொம்பை எடுத்து
அவனை அவன் சகோதரர் நடுவிலே அபி
ஷேகம் பண்ணினான். அந்நாள் முதற்
கொண்டு யெகோவாவுடைய ஆவி தாவீதி
ன் மேலே பலமாய் இறங்கியிருந்தார். சா
முவேல் எழுந்திருந்து இராமாவுக்குப்
போய்விட்டான்.

தாவீது சவுலுக்குச் செய்த ஊழியம்.

யெகோவாவுடைய ஆவி சவுலைவி 14
ட்டு விலகி யெகோவாவால் வரவிடப்பட்
ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்க
ப்பண்ணிக்கொண்டிருந்தது.- அப்போ 15
து சவுலின் ஊழியக்காரர் அவனோ
டே சொன்னதாவது இதோ தேவனால்
விடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி உம்
மைக் கலங்கப்பண்ணுகின்றதே.—சுரம 16
ண்டலத்தை வாசிக்க அறிந்த ஒருவனைத்
தேடும்படிக்கு, எங்கள் ஆண்டவனாகிய நீ
ர் உமக்கு முன்பாக நிற்கிற உமதடியா
ருக்குச் சொல்லுமேன். அப்போது தே

வனால் விடப்பட்ட பொல்லாத ஆவி உம்
முடைய மேல் இறங்குகையில் அவன் த
ன் கையினால் அதைக் கொட்டுகிறதி
னாலே உமக்குத் தாவிளையாகுமென்று
17 ரிகள்.— ஆகையால் சவுல் தன் ஊழியக்
காரருடனே, நன்றாய்க் கொட்டத்தக்க
ஒருவனை எனக்காகப் பார்த்து, என்ன
ண்டைக்குக் கொண்டுவாருங்களென்று
18 ன்;—அப்போது அந்த வேலைக்காரரி
ல் ஒருவன் பிரத்தியுத்தரமாக, இதோ,
கொட்ட அறிந்திருக்கிற பெத்லேகேமியனா
ன ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்
டேன். அவன் பராக்கிரமசாலியும் நல்ல
சேவகனும் காரியங்களிலே புத்திமானு
ம் சவுந்தரியனுமாய் இருக்கிறான். யெ
கோவா அவனோடே இருக்கிறாரென்று
19 ன்.—அப்போது சவுல் ஈசாயண்டைக்
கு ஆட்களை அனுப்பி, ஆடுகளண்டையில்
இருக்கிற உன் குமாரனாகிய தாவீதை எ
ன்னண்டைக்கு அனுப்பென்று சொல்
20 லச் சொன்னான்.—அப்போது ஈசாய்
அப்பத்தையும் ஒரு துருத்தி திராட்ச
ப்பழ இரசத்தையும் ஒரு வெள்ளாட்

டுக் குட்டியையுங் கழுதையின்மேல் ஏற்
றி அதையுந் தன் குமாரனாகிய தாவீதி
ன் கையிலே சவுலுக்கு அனுப்பினான்.—அ 21
ப்படியே தாவீது சவுலண்டைக்கு வந்
து அவனுக்கு முன்பாக நின்றான். அ
வன் இவனை மிகவுஞ் சிநேகித்தான். அ
வனுக்கு இவன் ஆயுதம் பிடிக்கிறவனானா
ன்.—சவுல் ஈசாயண்டைக்கு ஆளனுப்பி 22
த் தாவீது எனக்கு முனபாக நிற்கட்டு
மேன். ஏனெனில் என் கண்களில் அவனு
க்குத் தயவு கிடைத்ததென்று சொல்லச்
சொன்னான்.—அப்படியே தேவனால் விட 23
ப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும் போது
தாவீது சுரமண்டலத்தை எடுத்துக்கொ
ண்டு தன் கையினாலே கொட்டுவான். அதி
னாலே சவுலுக்கு முசிப்பாறுதல் உண்டா
கி, அவனுக்குத் தாவிளையாய்ப் போய்ப்
பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்கும்.

௰எ. அதிகாரம்.

*இராட்சதனாகிய கோலியாத்தென்ற பெலிஸ்த
னைத் தாவீது சயித்த அதிசயம்.*

பெலிஸ்தர் யுத்தம் பண்ணுகிறதற்கு 1

ர் தங்கள் இராணுக்களைச் சேர்த்து யூ
தாவில் இருக்கிற சொக்கோவிலே கூடிச்
சொக்கோவுக்கும் அசெக்காவுக்கும் நடு
வே இருக்கிற தம்மீமின் எல்லையிலே
2 பாளயம் இறங்கினார்கள்.—ஆனாலும் சவு
லும் இஸ்ரவேல் மனுஷரும் கூடிக்கொ
ண்டு, கருவாலியு பள்ளத்தாக்கிலே பாள
யம் இறங்கிப் பெலிஸ்தருக்கு எதிராக யு
த்தத்திற்கு ஆயத்தம்பண்ணினார்கள்.—
3 பெலிஸ்தர் அந்தண்டை ஒரு மலையின்
மேலும் இஸ்ரவேலர் இந்தண்டை ஒரு
மலையின்மேலும் நின்றார்கள். பள்ளத்
தாக்கு அவர்களுக்கு நடுவே இருந்தது.-
4 அப்பொழுது காத்தூரானாகிய கோலியாத்
தென்று பேருள்ள ஒரு மனுஷன் பெலி
ஸ்தரின் பாளயங்களில் இருந்து புறப்பட்
டு நடுவே நிற்பான். அவன் உயர்ச்சி ஆ
5 றுமுழமும் ஒரு சாணுமானது.-அவன்
தன் தலையின் மேலே பஞ்சலோகமா
ன தலைச்சோட்டைப் போட்டுச் செதி
செதியான ஒரு சீராவைத் தரித்துக்
கொண்டிருந்தான். அந்தச் சீராவின் நி
றை ஐயாயிரஞ் சேக்கலான பஞ்சலோ

கமாய் இருந்தது.—அவன் தன் கால்களி 6
லே பஞ்ச லோகமான தொப்பாரத்தை
யுந் தன் தோட்களின் மேலே பஞ்ச
லோகமான கேடயத்தையும் போட்டு
க்கொண்டிருந்தான்.-அவனுடைய ஈட் 7
டித் தாங்கு நெய்கிறவர்களின் படைமா
த்தின் கனதியும் அவன் ஈட்டியின் அலகு
அறுநூறு சேக்கலான இரும்புமாய் இ
ருந்தது. பரிசைபிடிக்கிறவன் அவனுக்
கு முன்னுக நடப்பான்.—அவன் நின்று 8
கொண்டு, இஸ்ரவேலுடைய இராணுவ
ப் பவுஞ்சுகளுக்கு எதிராகக் கூப்பிட்டு
அவர்களுக்குச் சொன்னதாவது, நீங்கள்
யுத்தத்திற்கு ஆயத்தமாகப் புறப்பட்டு
வந்து நிற்கிறதென்ன? நான் பெலிஸ்தனு
ம் நீங்கள் சவுலுவின் வேலைக்காரரும் அல்
லவோ? என்னண்டைக்கு இறங்கிவர உங்
களில் ஒருவனைத் தெரிந்தெடுங்கள். —
அவன் என்னோடே யுத்தம்பண்ணச் ச 9
மர்த்தனாய் இருந்து, என்னை மடங்கடித்
தால், உங்களுக்கு வேலைக்காரராய் இரு
ப்போம். நான் அவனை மேற்கொண்டு
அவனை மடங்கடித்தால் நீங்கள் எங்களு

க்கு வேலைக்காரராய் இருந்து எங்களைச்
சேவிக்க வேண்டுமென்று சொல்லி,—
10 பின்னையும் நான் இன்றையித்தினம் இஸ்
ரவேலுடைய இராணுவப் பவுஞ்சுகளை
நிந்தித்தேன். நாம் ஒன்றுக்கொன்று
யுத்தம்பண்ண ஒருவனை எனக்கு விடுங்
களென்று அந்தப் பெலிஸ்தன் சொல்
11 லுவான்.—சவுலும் இஸ்ரவேல் அனைத்
தும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்
தைகளைக் கேட்கிற போது மிகவுங் கல
ங்கிப் பயப்பட்டார்கள்.
12 தாவீதோ யூதாவுக்கடுத்த பெத்லகேம்
ஊரானாகிய ஈசாயென்று பேருள்ள எ
ப்ருத்திய மனுஷனுடைய குமாரனான
வன். இவனுக்கு எட்டுக் குமாரர் இருந்தா
ர்கள். இந்த மனுஷன் சவுலின் நாட்க
ளிலே மற்றச் சனங்களுக்குள்ளே வயது
13 சென்ற கிழவனாய் இருந்தான்.—ஈசாயி
னுடைய மூன்று மூத்த குமாரர் சவுலு
வின் பிறகாலே யுத்தத்திற்குப் போயி
ருந்தார்கள். யுத்தத்திற்குப் போயிரு
ந்த அவனுடைய மூன்று குமாரரில் த
லைச்சனுக்கு எலியாப்பென்றும், இரண்

டாம் குமாரனுக்கு அபீனதாபென்று
ம், மூன்றாங் குமாரனுக்குச் சமோவெ
ன்றும் பேர் இருந்தது.—தாவீதென்றவ 14
ன் எல்லாரிலும் இளையவனாய் இருந்தா
ன். மூத்தவர்களாகிய அந்த மூன்று பே
ருஞ் சவுலின் பிறகாலே போகிற போ
து,—தாவீது பெத்லகேமில் இருக்கிற 15
தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கு
ம் படிக்குச் சவுலை விட்டுத் திரும்பி
ப் போனான்.—அந்தப் பெலிஸ்தனோ 16
காலைமாறும் அந்திமாறும் நாற்பது நா
ளாகச் சேர்ந்து வந்து நின்றுகொண்டி
ருப்பான்.—இசாயோ தன் குமாரனாகி 17
ய தாவீதோடே சொன்னதாவது, உன்
சகோதரருக்காக இந்த ஒரு மரக்கால்
வறுத்த பயற்றையும் இந்தப் பத்து அப்
பங்களையும் எடுத்து ஓடிப், பாளயத்தி
ல் இருக்கிற உன் சகோதரருக்குக் கொ
ண்டுபோய்,— இந்தப் பத்துக் கேஸ் 18
கட்டிகளை ஆயிரத்துச் சேர்வைக்கார
னுக்குக் கொடுத்து, உன்சகோதரர் சுக
மாய் இருக்கிறார்களோவென்று விசாரி
த்து, அவர்களுடைய அடையாளம் வா

19 ங்கிக்கொண்டுவாவென்றான்.—அப்போ
து சவுலும் இவர்களும் இஸ்ரவேல் மனு
ஷிர் எல்லாருங் கருவாலியு பள்ளத்தாக்கி
லே பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணியிரு
20 ந்தார்கள்.—தாவீது அதிகாலமே எழுந்
திருந்து, ஆடுகளைக் காக்கிறவன் வசமா
ய் விட்டு ஈசாய் தனக்குக் கற்பித்தபடி
யே எடுத்துக்கொண்டுபோய், இரதங்க
ள் இருக்கிற இடத்திலே வந்தான். இரா
ணுவமோ பவுஞ்சாக நிற்கப் புறப்பட்
டு யுத்தத்திற்கென்று ஆர்ப்பரித்தார்கள்.
21 —இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் ஒன்று
க்கொன்று எதிராகப் பவுஞ்சுகளை நிறு
22 த்தினார்கள்.—அப்போது தாவீது தான்
சுமந்து வந்தவைகளை இறக்கி இரஸ்துக்
களைக் காக்கிறவன் வசமாக வைத்துவிட்
டு, இராணுவத்தினிடத்தில் ஓடி, அங்கே
வந்த போது, சுகமாய் இருக்கிறீர்களோ
வென்று தன் சகோதரரைக் கேட்டான்.
23 —அவன் இவர்களோடே பேசிக்கொண்டி
ருக்கையில், இதோ காத்தூரானாகிய கோ
லியாத்தென்று பேருள்ள அந்தப் பெலி
ஸ்தன் பெலிஸ்தரின் இராணுவங்களில் இ

ருந்து எழும்பி வந்து நடுவே நின்று, அந்
த வார்த்தைகளுக்குச் சரியாகப் பேசின
ன். அதைத் தாவீது கேட்டான்.—இஸ் 24
ரவேல் மனுஷர் எல்லாரும் அந்த மனு
ஷனைக் காணும்பொழுது அவனை வில
கி ஓடி மிகவும் பயப்படுவார்கள்.—அ 25
ந்நேரத்திலே இஸ்ரவேல் மனுஷர்
சொன்னதாவது, எழும்பின அந்த மனு
ஷனைக்கண்டீர்களோ! ஏனென்றால் இஸ்
ரவேலை நிந்திக்க எழும்பி நிற்கிறான்.
எவன் அவனை மடங்கடிக்கிறானோ, அவ
னை இராசா மிகவும் ஐசுவரியமுள்ளவனா
க்கி, அவனுக்குத் தம்முடைய குமாரத்
தியைக் கொடுத்து, அவன் தகப்பன் வீட்
டை இஸ்ரவேலிலே இஷடமாக்குவாரெ
ன்றார்கள்.—அப்போது தாவீது தன்ன 26
ண்டையிலே நிற்கிற மனுஷருடனே, இந்
தப் பெலிஸ்தனை மடங்கடித்து நிந்தை
யை இஸ்ரவேலை விட்டு விலக்குகிறவனு
க்கு என்ன செய்யப்படும்? ஏனெனித்
சீவனுள்ள தேவனுடைய இராணுவங்க
ளை நிந்திக்கிறதற்குச் சுன்னத்தில்லாத
இந்தப் பெலிஸ்தனானவன் எம்மாத்திர

27 மென்றான்.—அப்போது சனம், அவ
னை மடங்கடிக்கிறவனுக்கு இன்னின்னப
டி செய்யப்படுமென்று அந்த வார்த்
தைக்குச் சரியாக அவனுக்குச் சொன்
28 னார்கள்.—அந்த மனுஷரோடே அவன்
பேசிக்கொண்டிருக்கிறதை அவன் மூத்
த சகோதரனாகிய எலியாப் கேட்கிற
போது, அவன் தாவீதின்பேரிலே கோ
பமாய் எரித்து, நீ இங்கே இறங்கிவந்த
தென்ன? வனாந்தரத்தில் இருக்கிற அந்தக்
கொஞ்ச ஆடுகளை நீ ஆர் வசமாய் விட்
டாய்? யுத்தத்தைப் பார்க்க இறங்கிவந்
தாயென்று உன்னுடைய துணிகரத்தை
யும் உன் இருதயத்தின் அகங்காரத்தை
29 யும் நான் அறிவேனென்றான்.— அதற்
குத் தாவீது, நான் இப்போது செய்த
தென்ன? நான் வந்ததற்கு முகாந்தரம் இ
30 ல்லையோவென்று சொல்லி,—அவனை வி
ட்டு வேறொருவனுக்கு எதிராகத் திரும்
பிக்கொண்டு அந்தப் பிரகாரமாகச் சொ
ன்னான். அப்போது சனம் முந்தின சொ
ல்லுக்குச் சரியாக அவனுக்கு மறுமொ
ழி கொடுத்தார்கள்.

தாவீது சொன்ன வார்த்தைகளை அவ 31
ர்கள் கேட்ட பிறகு, அதைச் சவுலுக்கு
முன்பாக அறிவித்தார்கள். அப்போது
அவனை அழைப்பித்தான்.—தாவீது சவு 32
லுடனே, அவன் நிமித்தமாக ஒருவனு
டைய இருதயமுந் திடனற்றுப்போக வே
ண்டாம். உமதடியான் போய், இந்த
ப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவா
னென்றான்.—அப்போது சவுல் தாவீது 33
டனே, நீ இந்தப் பெலிஸ்தனோடே யுத்
தம்பண்ண அவனுக்கு எதிராகப் போக
க் கூடாது, ஏனென்றால், நீ இளைஞன்,
அவனோ தன் சிறு வயதிலே துவக்கி நல்
ல சேவகனாயிருக்கிறானென்றான்.—
ஆனாலுந் தாவீது சவுலோடே சொன்ன 34
தாவது, உமதடியான் என் தகப்பனு
டைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிரு
க்கிற போது, ஒருவிசை ஒரு சிங்கமும்
ஒருவிசை ஒரு கரடியும் வந்து மந்தை
யில் இருக்கிற ஒரு ஆட்டை எடுத்துக்
கொண்டது.—ஆனாலும் அதின் பிறகா 35
லே நான் புறப்பட்டுப் போய் அதைப்
பிடித்து இதை அதின் வாய்க்குத் தப்

புலித்தேன். அப்போது அது என்மே
லே பாய்கிறபோது நான் அதின் தாடி
யைப் பிடித்துக்கொண்டு அதை அடித்
36 துக் கொன்றுபோட்டேன்.— அந்தச் சி
ங்கத்தையும், அந்தக் கரடியையும் உம
தடியான் மடங்கடித்தான். சுன்னத்தில்
லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில்
ஒன்றைப் போல் இருப்பான். ஏனென்
றால் அவன் சீவனுள்ள தேவனுடைய இ
37 ராணுவங்களை நிந்தித்தானென்றான்.—பி
ன்னையுந் தாவீது, என்னைச் சிங்கத்தின்
கைக்குங் கரடியின் கைக்குந் தப்புவித்
த யெகோவாவானவர் இந்தப் பெலிஸ்
தனுடைய கைக்கும் என்னைத் தப்புவிப்
பாரென்றான். அப்போது சவுல் தாவீது
டனே, போ, யெகோவா உன்னுடனே
38 இருப்பாராகவென்றுசொல்லி,— சவுல்
தாவீதுக்குத் தன் வஸ்திரங்களை உடுத்து
வித்துப் பஞ்சலோகமான ஒரு தலைச்
சோட்டை அவன் தலையின்மேற்போட்
டு, ஒரு சீராவை அவனுக்குத் தரிப்பித்தா
39 ன்.—தாவீது அவன் பட்டயத்தைத் த
ன் வஸ்திரங்கள் மேற் கட்டிக்கொண்

டு, நடக்கத் துவக்கினான். ஏனெனில் அதை
அவன் பரிட்சை பார்த்திருந்ததில்லை. அப்
போது தாவீது சவுலுடனே, நான் இ
தோடே போகக் கூடாது, ஏனென்றால்
நான் இப்படி அப்பியாசம் பண்ணினதி
ல்லையென்று சொல்லி அவைகளைக் களைந்
துபோட்டு—தன் தடியைத் தன் கையிலே 40
பிடித்து ஆற்றில் இருக்கிற ஐந்து கூழாங்
கல்லுக்களைத் தெரிந்தெடுத்து அவைகளை
த் தனக்கிருக்கிற மேய்ப்பரின் அடப்ப
மான பையிலே போட்டுத் தன் கவண்டை
தன் கையிலே பிடித்துக்கொண்டு, அந்த
ப் பெலிஸ்தன் அண்டை சேரப்போனா
ன்.—பெலிஸ்தனும் நடக்கவே நடந்து, 41
தாவீதண்டைக்குக் கிட்டி வந்தான். அவ
ன் பரிசையைப்பிடிக்கிறவன் அவனுக்கு
முன்னாக நடந்தான்.—பெலிஸ்தனானவ 42
ன் தாவீதை நோக்கிப் பார்த்து, அவன்
இளைஞனுஞ் சவுந்தரிய உரூபான சிவந்
த மேனியுமாய் இருந்தபடியினாலே அவ
னை அசட்டைபண்ணி,— தாவீதுடனே 43
நீ தடிகளோடே என் அண்டையிலே வர
நான் நாயோவென்று சொல்லி, அந்தப்

பெலிஸ்தன் தன்னுடைய தேவர்களைக்
44 கொண்டு தாவீதைச் சபித்தான் —பின்
னையும் அந்தப் பெலிஸ்தன் தாவீதுட
னே, என் அண்டைக்குவா, நான் உன் மா
மிசத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும்
வெளியின் மிருகங்களுக்குங் கொடுப்
45 பேனென்றான்.--ஆனாலுந் தாவீது பெலி
ஸ்தனோடே சொன்னதாவது, நீ பட்ட
யத்தோடும், ஈட்டியோடும், கேடய
த்தோடும், என்னண்டைக்கு வருகிறாய்.
நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இ
ன். தாவீதின் சேவகரிற் பத்தொன்பது
பேரும் ஆசகேலுங் குறைந்தார்கள்.—
தாவீதின் சேவகரோ பென்யமினிலும் 31
அப்னேரின் மனுஷரிலும் முந்நூற்றறு
பது பேரை மடங்கடித்தார்கள்.—அவர் 32

கள் ஆசகேலை எடுத்துப் பெத்லகேமிலே இருக்கிற அவனுடைய தகப்பனின் கல்லறையிலே அவனை அடக்கம்பண்ணினார்கள். யோவாபும் அவன் மனுஷரும் இராமுழுவதும் நடந்து எபிரோனுக்குச் சேருகிறபோது அவர்களுக்குப் பொழுது விடிந்தது.

---

௩. அதிகாரம்.

தாவீதுக்கு எபிரோனில் இருந்த சுக சீர்.

1 சவுலின் வீட்டுக்குந் தாவீதின் வீட்டுக்
கும் நெடு நாள் யுத்தம் நடந்தது. ஆ
னாலுந் தாவீது பலத்துப்போனான். சவு
லின் வீட்டாரோ சிறுகிப்போனார்கள்.
2 —எபிரோனிலே தாவீதுக்குப் பிறந்த
குமாரராவது, இஸ்ரெயேல் ஊராளான
அகினோகாமிடத்திலே பிறந்த அம்னோன்
3 அவனுக்கு மூதற் பிறந்தவன்.—நாபாலி
ன் பெண்சாதியாய் இருந்த கற்மேல் ஊ
ராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கீ
லேயாப் அவனுடைய இரண்டாங்குமார

ளுனவன். மூன்றாங் குமாரன் கேசூரின்
இராசாவான தல்மாயி குமாரத்தியாகிய
மக்காள் பெற்ற அப்சலோம் என்றவன்.
—நாலாங் குமாரன் ஆகீத் பெற்ற அ 4
தோனியா என்றவன். ஐந்தாங் குமாரன்
அபித்தால் பெற்ற செப்பத்தியா என்
றவன்.—ஆறாங் குமாரன் தாவீதின் பெ 5
ண்சாதியான எக்லாளிடத்திலே பிறந்த
இத்ரேயாம் என்றவன். இவர்கள் எபிரோ
னிலே தாவீதுக்குப் பிறந்தார்கள்.
சவுலின் வீட்டுக்குந் தாவீதின் வீட்டுக் 6
கும் யுத்தம் நடந்துவருகிறபோது, அப
னேர் சவுலின் வீட்டிலே பலத்தவனு
ன்.—சவுலுக்கு ஆயாவின் குமாரத்தியா 7
கிய ரிஸ்பாளென்று பேருள்ள ஒரு வை
ப்பாட்டி இருந்தாள். இஸ்போசேத் அப்
னேருடனே நீ என் தகப்பனுருடைய
வைப்பாட்டியினிடத்திலே பிரவேசித்த
தென்னவென்றான்.— அப்போது அப் 8
னேர் இஸ்போசேத்தின் வார்த்தைகளுக்
காக மிகவுங் கோபமாய் எரிந்து சொன்
னதாவது, உம்மைத் தாவீதின் கையில் ஒ
ப்புக்கொடாமல் இர்ந்தாள் மட்டும் உம்மு

டைய தகப்பனாகிய சவுலின் வீட்டுக்கும்
அவருடைய சகோதரருக்குஞ் சினேகித
ருக்குந் தயவு செய்கிறவனாகிய என்னை நீ
ர் இன்று ஒரு ஸ்திரிக்காகக் குற்றம்பிடி
க்கிறதற்கு நான் யூதாவுக்குட் கையான
9 நாய்த்தலையோ?—நான் இராச்சியபாரத்
தைச் சவுலின் வீட்டை விட்டுத் தாண்ட
ப்பண்ணித் தாவீதின் ஆசனத்தைத் தாண்
துவக்கிப் பெர்சேபா மட்டுமுள்ள இஸ்ர
வேலின்மேலும் யூதாவின்மேலும் நிலை
10 நிறுத்தும்படிக்கு,-யெகோவா தாவீதுக்
கு ஆணையிட்டபடியே நான் அவனுக்கு
ச் செய்யாதிருந்தால்,தேவன் அப்னேருக்
கு இப்படியும் அப்படியுஞ் செய்யக் கட
11 வரென்றான்.—அப்போது அவன் அப்
னேருக்குப் பயப்படுகிறதினால் அப்புற
ம் ஒரு மறுமொழியை அவனுக்குச் சொ
ல்ல அவனுக்குக் கூடாதிருந்தது.
12 அப்னேரோ தன் நாமத்திலே தாவீ
தண்டைக்குத் தானாபதிகளை அனுப்பித்
தேசம் ஆருடையதென்றும், என்னோடு
உடம்படிக்கைபண்ணும், இதோ, இஸ்ர
வேலை எல்லாம் உம்மண்டைக்குத் திருப்

ப் என் கை உம்மோடிருக்குமென்று
சொல்லச் சொன்னான்.—அதற்கவன் நல் 13
லது, உன்னோடே நான் உடம்படிக்கை
பண்ணுவேன். ஆனாலும் ஒரே காரியத்
தை உன்னைக் கேட்கிறேன். என்னவெனி
ல், நீ என் முகத்தைப் பார்க்க வரும்
போது, சவுலின் குமாரத்தியாகிய மீகா
ளை நீ அழைத்து வர வேண்டும். அதற்கு
முன் நீ என் முகத்தைப் பார்ப்பதில்லை
யென்று சொல்லச்சொல்லி,—தாவீது ச 14
வுலின் குமாரனாகிய இஸ்போசேத்தண்
டைக்குத் தானாபதிகளை அனுப்பி, நான்
பெலிஸ்தருடைய நூறு நுனித்தோற்க
ளைப் பரிசாகக் கொடுத்து விவாகம்பண்
ணின என் பெண்சாதியாகிய மீகாளை எ
னக்குக் கொடுத்துவிடுமென்று சொல்லச்
சொன்னான்.- அப்போது இஸ்போசே 15
த் அவளை இலாயிசின் குமாரனாகிய பல
த்தியேல் என்ற புருஷனை விட்டு அழைத்
துவர ஆட்களை அனுப்பினான்.-அவள் பு 16
ருஷன் அவளோடே கூரீம் மட்டும் அழு
து நடந்து அவளைப்பின்சென்றான். அப்
னேர் அவனுடனே, நீ திரும்பிப் போ

வென்ருன். அப்போது திரும்பிப்போ
17 ௗன்.—அப்னேர் இஸ்ரவேலின் மூப்ப
ரோடே பேசிக்கொண்டு சொன்னதாவ
து, நீங்கள் தாவீதை உங்கள்மேல் இரா
சாவாக வைக்கும்படிக்கு அநேக நாளா
18 யித் தேடுகிறவர்களாமே;—இப்போதும்
அப்படிச் செய்யுங்கள். ஏனெனில் நம்
முடைய தாசனுகிய தாவீதின் கையினுலே
நம்முடைய சனமாகிய இஸ்ரவேலைப் பெ
லிஸ்தரின் கைக்கும் அவர்களுடைய எ
ல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலா
க்கி இரட்சிப்போமென்று யெகோவா
தாவீதைக் குறித்துச் சொன்னுரென்ருன்.
19 —இந்தப்பிரகாரமாக அப்னேர் பென்
யமின் மனுஷர் காதுகளிலும் விழப் பே
சினுன். பின்பு அப்னேர் இஸ்ரவேலர்
பார்வைக்கும் பென்யமினுடைய எல்லா
வீட்டாரின் பார்வைக்குஞ் சம்மதியான
தை எல்லாம் எபிரோனிலே தாவீதின்
காதுகளுங் கேட்கப் பேசுகிறதற்குப்
20 போனுன்.-அப்னேரும் அவனோடே இ
ருபது பேரும் எபிரோனில்இருக்கிற தா
வீதண்டைக்கு வந்தபோது, தாவீது அப்

னேருக்கும் அவனோடே வந்த மனுஷரு
க்கும் விருந்துசெய்வித்தான்.— பின்பு 21
அப்னேர் தாவீதுடனே, நான் எழுந்து
போய், இஸ்ரவேலை எல்லாம் உம்மோ
டே உடம்படிக்கைபண்ணும்படிக்கு இ
ராசாவாகிய என் ஆண்டவன் அண்டையி
லே சேர்த்துகொண்டுவருகிறேன். அப்
படியே உம்முடைய ஆத்துமம் இச்சிக்கி
றதின் மேல் எல்லாம் இராச்சியபாரம்ப
ண்ணுவீரென்றான். அப்படியே தாவீது
அப்னேரை அனுப்பிவிட்டான். அவன்
சமாதானத்தோடே போனான்.

யோவாப் அப்னேரை மடிப்பாய்க் கொன்
றது.

ஆனாலும் இதோ, தாவீதின் சேவகரும் 22
யோவாபும் அநேகங் கொள்ளைகளைக்
கொள்ளையிட்டுத் தண்டில் இருந்து கொ
ண்டுவந்தார்கள். அப்போது அப்னேர் எ
பிரோனில் தாவீதண்டையில் இல்லை. எ
னெனில் அவனை அனுப்பிவிட்டான். அ
வன் சமாதானத்தோடே போய்விட்டா
ன்.—யோவாபும் அவனோடிருந்த எல்லா 23
இராணுவமும்வந்த போது, நேரின் கு

மாரனாகிய அப்னேர் இராசாவண்டைக்கு வந்தானென்றும், அவர் அவனைச் சமாதானமாய்ப் போக அனுப்பிவிட்டாரென்றும் யோவாபுக்கு அறிவித்தார்கள்.—
24 அப்போது யோவாப் இராசாவண்டைக்குட் பிரவேசித்துச் சொன்னதாவது, என்ன செய்தீர்? இதோ, அப்னேர் உம்மண்டைக்கு வந்தபோது நீர் அவனைப்
25 போகவிட்டதென்ன?-நேரின் குமாரனாகிய அப்னேரை அறிவீரே. அவன் உம்மை மோசம் போக்கவும் உம்முடைய போக்குவரத்தை அறியவும் நீர் செய்கிறதை எல்லாம் ஆராயவும் வந்தானென்று
26 சொல்லி,—யோவாப் தாவீதை விட்டுப் புறப்பட்டுத் தாவீது அறியாமற் சீராத் துரவுமட்டும் போன அப்னேரைத் திரும்ப வரச் சொல்ல, அவன் பிறகாலே ஆட்
27 களை அனுப்பினான்.—அப்னேர் எபிரோனுக்குத் திரும்ப வருகிற போதோ, யோவாப் அவனோடே இரகசியமாய்ப் பேசப் போகிறவன் போல் அவனை ஒலிமுக வாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப் போய்த் தன் தம்பி ஆசகேலுடை

ய இரத்தப்பழியை வாங்க அங்கே அவ
னை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்
டான்.

பிறகு தாவீது அதைக் கேட்டபோது 28
சொன்னதாவது, நேரின் குமாரனாகிய
அப்னேரின் இரத்தத்திற்காக என்மேலு
ம் என் இராச்சியத்தின் மேலும் யெகோ
வாவுக்கு முன்பாக என்றைக்கும் பழி இ
ல்லை.—அது யோவாபுடைய தலையின் 29
மேலும் அவன் தகப்பன் வீடு அனைத்தின்
மேலுஞ் சுமந்திருப்பதாக. யோவாபின்
வீட்டாரிலே பிரமியக்காரனுங் குஷ்ட
ரோகியுந் தடிபிடித்து நடக்கிறவனும் ப
ட்டயத்தால் விழுகிறவனும் அப்பங் கு
றைச்சலுள்ளவனும் ஒருக்காலுங் குறை
யாதிருக்கக்கடவதென்றான்.-அப்படியே 30
அப்னேர் கிபெயோனில் யுத்தத்திலே த
ங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்ற
தின் நிமித்தம் யோவாபும் அவன் சகோத
ரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம்ப
ண்ணினார்கள்.—தாவீது யோவாபோடு 31
ம், அவனோடிருந்த எல்லாச் சனத்தோ
டும், நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழி

த்துக்கொண்டு இரட்டுடுத்து, அப்னேரு
க்கு முன்னாலே நடந்து துக்கங் கொண்
டாடுங்களென்று சொல்லித் தாவீது இரா
சா தானும் பாடையைப் பின்சென்றான்.
32 —அவர்கள் அப்னேரை எபிரோனிலே அ
டக்கம்பண்ணுகையில், இராசா அப்னே
ரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு
33 அழுதான். சகல சனமும் அழுதது.—இ
ராசா அப்னேருக்காகப் புலம்பிச் சொ
ன்னதாவது, மதியில்லாதவன் சாகிறது
34 போல அப்னேர் மடிந்தானோ!— உன்
னுடைய கைகள் கட்டப்பட்டிருந்தது
ம் இல்லை. உன்னுடைய கால்கள் விலங்கு
போடப்பட்டிருந்ததும் இல்லை. அக்கிர
மக்காரர் கையில் மடிகிறது போல, மடிந்
தாயென்றான். அப்போது சனம் எல்லா
ம் பின்னையும் அதிகமாய் அவனுக்காக
35 அழுதது.—பகல் இன்னம் உண்டாயிரு
க்கச் சனம் எல்லாம் வந்து அப்பம்
புசியுமென்று தாவீதுக்குச் சொல்லு
கிற போது, தாவீது சூரியன் அஸ்த
மியாததற்கு முன்னே நான் அப்பத்
தையாகிலும் வேறெதையாகிலும் உருசி

பார்த்தால் தேவன் எனக்கு இப்படியும்
அப்படியுஞ்செய்யக் கடவரென்றாணை
யிட்டுச் சொன்னான்.—சனம் எல்லாம் அ 36
தை அறிந்தது.அது அவர்கள் பார்வைக்கு
நன்றாய் இருந்தது. இராசா செய்ததெல்
லாம் எல்லாச்சனத்திற்கும் நன்றாய்க் கண்
டது. -அப்படியே நேரின் குமாரனாகிய 37
அப்னேரைக் கொன்றுபோட்டது இரா
சாவினால் வந்ததல்லவென்று அந்நாளிலே
சகல சனமும் இஸ்ரவேல் அனைத்தும்
அறிந்துகொண்டது.-இராசா தன் ஊழி 38
யக்காரரோடே சொன்னதாவது, இன்
றையித்தினம் இஸ்ரவேலில் ஒரு பிரபும்
பெரிய மனுஷனும் விழுந்தானென்று அ
றியீர்களோ?-இராசாவாக அபிஷேகம்ப 39
ண்ணப்பட்ட நானோ இன்னம் புதியவ
ன். ஆனாலுஞ் செருயாவின் குமாரராகி
ய இந்த மனுஷர் என்னை விடக் கெட்டி
யானவர்களாய் இருக்கிறார்கள். அந்தப்
பொல்லாங்கைச் செய்தவனுக்கு யெகோ
வா அவன் பொல்லாங்குக்குத் தக்கதாய்
ச் சரிக்கட்டுவாராகவென்றான்.

௪. அதிகாரம்.

இஸ்போசேத்தைக் கொன்றவர்களைத் தாவீது
ஆக்கினைபிட்டது.

1 அப்னேர் எபிரோனிலே செத்துப்
போனதைச் சவுலின் குமாரன் கேட்ட
போது, அவன் கைகள் திடனற்றுப்போ
2 ய் இஸ்ரவேல் எல்லாருங் கலங்கிற்று —ஆ
னாலுஞ் சவுலின் குமாரனுக்குத் தண்டு
சேவகரின் தலைவரான இரண்டு மனுஷர்
இருந்தார்கள். ஒருவனுக்குப் பானாவெ
ன்றும் மற்றவனுக்கு ரேகாக்கென்றும்
பேர் இருந்தது. அவர்கள் பென்யமீன்
புத்திரரிற் பேரோத்தியனாகிய ரிம்மோ
னின்குமாரரானவர்கள். ஏனெனிற் பே
ரோத்தும் பென்யமீனுக்கடுத்ததாய் எ
3 ண்ணப்பட்டது.-பேரோத்தியரோ கித்
தாயீமுக்கு ஓடிப்போய், இந்நாள்வரை
க்கும் அங்கே பரதேசிகளாய்த் தங்கியி
4 ருக்கிறார்கள்.—சவுலின் குமாரன் யோ
னத்தானுக்கோ இரண்டு காலும் முட
மான ஒரு குமாரன் இருந்தான். சவுலு
ம் யோனத்தானும் மடிந்த செய்தி இஸ்

ரேயேவில் இருந்து வருகிற போது, அவ
ன்ஐந்து வயதுள்ளவனாய் இருந்தான். அப்
போது அவனுடைய தாதி அவனை எடுத்
து ஓடிப்போனாள். அவள் ஓடத் தீவிரிக்
கையில், அவன் விழுந்து சப்பாணியானா
ன். அவன் பேர் மேவிபோசேத்தென்ப
து.—பேரோத்தியனான அந்த ரிம்மோ 5
னின் குமாரராகிய ரேகாபும் பானாவும்
போய் இஸ்போசேத் மத்தியானத்திலே
படுக்கையின் மேலே சயனித்திருந்த வெ
ய்யில் வேளையிலே அவன் வீட்டிற்கு
ட் பிரவேசித்து,—கோதும்பையை வா 6
ங்க வருகிறவர்கள் போல நடு வீடுமட்டும்
வந்து, அவனை வயிற்றிலே குத்திப்போ
ட்டார்கள். பின்பு ரேகாபும் அவன்
சகோதரன் பானாவுந் தப்பிக்கொண்டு
போனார்கள்.— அவன் தன் படுக்கை வீ 7
ட்டிலே தன் கட்டிலின் மேலே படுத்
திருக்கத்தானே இவர்கள் உள்ளே போ
ய், அவனைக் குத்திக் கொன்றுபோட்
டு, அவன் தலையை வெட்டிப்போட்
டார்கள். பிறகு அவன் தலையை அவர்
கள் எடுத்துக்கொண்டு, இராமுழுதும்

அந்தர வெளி வழியாய் நடந்து,—எபி
8 ரோனில் இருக்கிற தாவீதண்டைக்கு
இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு
வந்து இராசாவுடனே, இதோ உம்மு
டைய பிராணனை வாங்கத் தேடின உம்
முடைய சத்துருவாய் இருந்த சவுலின்
குமாரனான இஸ்போசேத்தின் தலை. இ
ன்றையித்தினம் யெகோவா இராசாவா
கிய எங்கள் ஆண்டவனுக்காகச் சவுலின்
கையிலும் அவன் வித்தாரின் கையிலும்
9 பழிவாங்கினாரென்றார்கள். — ஆனாலுந்
தாவீது பேரோத்தியனான ரிம்மோனின்
குமாரராகிய ரேகாபுக்கும் அவன் ச
கோதரன் பானாவுக்கும் பிரத்தியுத்தார
மாகச் சொன்னதாவது, என் ஆத்துமத்
தை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி
மீட்ட யெகோவாவுடைய சீவனைக் கொ
ண்டு நான் சொல்லுகிறதைக் கேளுங்க
10 ள்.—இதோ, சவுல் செத்துப்போனா
னென்று எனக்கு அறிவித்துத் தன் பா
ர்வைக்குச் சுகசெய்தியைச் சொல்லுகிற
வனாய் இருந்து,அதற்காகத் தனக்கு வெ
குமானங் கொடுப்பேனென்று நினைத்த

அவனை நான் பிடித்துச் சிக்லாகிலே கொ
ன்றுபோட்டேனே,—தமது வீட்டிற்கு 11
ள் தமது படுக்கையின்மேலே படுத்தி
ருந்த நீதிமானைக் கொலைசெய்த பொல்
லாத மனுஷரை எத்தனை அதிகம்? இப்
போதும் நான் அவருடைய இரத்தப்ப
ழியை உங்கள் கைகளில் வாங்கி உங்களை
ப் பூமியில் இருந்து கழித்துப் போடா
திருப்பேனோவென்று சொல்லி,—அவர் 12
களைக் கொன்றுபோடவும், அவர்கள் கை
களையுங் கால்களையுந் தறித்து எபிரோனி
ல் இருக்கிற குளத்தண்டையிலே தூக்கி
ப்போடவுந் தாவீது வாலிபருக்குக் கற்
பித்தான். ஆனாலும் இஸ்போசேத்தின்
தலையை எடுத்து எபிரோனில் இருக்கிற
அப்னேரின் கல்லறையிலே அடக்கம்ப
ண்ணினார்கள்.

ரு. அதிகாரம்.

தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் இராசாவாக அபிஷேகம்பண்ணப்பட்டு எருசலேமைப் பிடித்து அங்கே சுகசீராக வாசம்பண்ணினது.

அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்தி 1

ரங்கள் எல்லாம் எபிரோனில் இருக்கிற தா
வீதண்டைக்கு வந்து சொன்னதாவது,
இதோ, நாங்கள் வந்திருக்கிறோம். நாங்க
ள் உம்முடைய எலும்பும் உம்முடை
2 ய மாம்சமுமானவர்கள்.—சவுல் எங்கள்
மேல் இராசாவாய் இருக்கிற அப்போது
தானும் நீர் இஸ்ரவேலோடே போக்கு
ம் வரத்துமாய் இருந்தீர். நம்முடைய சன
மாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ர
வேலின் மேலே தலைவனாய் இருப்பாயெ
ன்று உம்மோடே யெகோவா சொன்
3 னாரென்றார்கள்.—இஸ்ரவேலின் மூப்பர்
எல்லாரும் எபிரோனிலே இராசாவண்
டைக்கு வந்தார்கள். தாவீது இராசா எ
பிரோனிலே யெகோவாவுக்கு முன்பாக
அவர்களோடே உடன்படிக்கை பண்ணி
னபிறகு அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்
மேல் இராசாவாக அபிஷேகம் பண்ணி
4 னார்கள்.—தாவீது இராசாவாகிற போது,
முப்பது வயதாய் இருந்தான். அவன் நா
ற்பது வருஷம் இராச்சியபாரம்பண்ணி
5 னான்.—அவன் எபிரோனிலே யூதாவின்
மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும் எரு

சலேமிலே எல்லா இஸ்ரவேலின்மேலு
ம் யூதாவின்மேலும் முப்பத்து மூன்
று வருஷமும் இராச்சியபாரம்பண்ணி
னான்.
தேசத்திலே குடியிருக்கிற எபூசியர் 6
மேல் யுத்தம்பண்ண இராசாவானவன்
தன் மனுஷரோடும் எருசலேமுக்குப்
போனான். அவர்கள் தாவீதுக்கு, நீ இ
தற்குட் பிரவேசிப்பதில்லை. குருடருஞ்
சப்பாணிகளும் உன்னை விலக்குவார்களெ
ன்று சொல்லித் தாவீது இதிலே உட்பிர
வேசிப்பதில்லையென்றார்கள்.—ஆனாலுந் 7
தாவீது சீயோன் கோட்டையைப் பிடி
த்தான். அது தாவீதின் பட்டணம்.—
ஏனெனில், எவன் எபூசியரை முறியடி 8
த்துச் சாலகத்திலுந் தாவீதின் ஆத்துமம்
பகைக்கிற சப்பாணிகள் குருடரிடத்தி
லுஞ் சேர்ந்தேறுகிறானோ அவன் தலைவ
னாய் இருப்பானென்று தாவீது அன்றை
யித்தினஞ் சொல்லியிருந்தான். குருடனு
ஞ் சப்பாணியும் வீட்டிலேவர வேண்டா
மென்றதைத் தொட்டுச் சொல்லுகிறார்
கள்.—அந்தக் கோட்டையிலே தாவீது 9

வாசம்பண்ணி, அதற்குத் தாவீதின் பட்
டணமென்று பேரிட்டு, மில்லோவென்
ற தலந் துவக்கி உட்புறம் மட்டுஞ் சுற்றி
10 லும் இருக்கிறதைக் கட்டுவித்தான்.—தாவீ
து நாளுக்கு நாள் பெரியவனாய்ப் போ
னான். ஏனென்றாற் சேனைகளின் தேவ
னாகிய யெகோவா அவனோடே இருந்
11 தார்.—தீருவின் இராசாவாகிய ஈராந்
தாவீதண்டைக்குத் தானாபதிகளையுங் கே
துரு மரங்களையுந் தச்சரையுங் கற்றச்சு
ரையும் அனுப்பினான். இவர்கள் தாவீ
துக்கு ஒரு வீட்டைக் கட்டினார்கள்.—
12 யெகோவா தன்னை இஸ்ரவேலின் மேல்
இராசாவாகத் திடப்படுத்தித் தம்முடை
ய சனமாகிய இஸ்ரவேலின் நிமித்தந் தன்
னுடைய இராச்சியத்தை உயர்த்தினாரெ
ன்று தாவீது கண்டு அறிந்த போது,—
13 அவன் எபிரோனில் இருந்து வந்த பிறகு,
எருசலேம் ஊராராகிய இன்னம் அதிக
மான வைப்பாட்டிகளையும் ஸ்திரிகளையு
ம் படைத்தான். இன்னம் அதிக குமார
ருங் குமாரத்திகளுந் தாவீதுக்குப் பிறந்
14 தார்கள்.— எருசலேமில் அவனுக்குப்

ய இரத்தப்பழியை வாங்க அங்கே அவ
னை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்
டான்.
பிறகு தாவீது அதைக் கேட்டபோது 28
சொன்னதாவது, நேரின் குமாரனாகிய
அப்னேரின் இரத்தத்திற்காக என் மேலு
ம் என் இராச்சியத்தின் மேலும் யெகோ
வாவுக்கு முன்பாக என்றைக்கும் பழி இ
ல்லை.—அது யோவாபுடைய தலையின் 29
மேலும் அவன் தகப்பன் வீடு அனைத்தின்
மேலுஞ் சுமந்திருப்பதாக. யோவாபின்
வீட்டாரிலே பிரமியக்காரனுங் குஷ்ட
ரோகியுந் தடிபிடித்து நடக்கிறவனும் ப
ட்டயத்தால் விழுகிறவனும் அப்பங் கு
றைச்சலுள்ளவனும் ஒருக்காலுங் குறை
யாதிருக்கக்கடவதென்றான்.-அப்படியே 30
அப்னேர் கிபெயோனில் யுத்தத்திலே த
ங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்ற
தின் நிமித்தம் யோவாபும் அவன் சகோத
ரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம்ப
ண்ணினார்கள்.—தாவீது யோவாபோடு 31
ம், அவனோடிருந்த எல்லாச் சனத்தோ
டும், நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழி

த்துக்கொண்டு இரடுடுத்து, அப்னேரு
க்கு முன்னாலே நடந்து துக்கங் கொண்
டாடுங்களென்று சொல்லித் தாவீது இரா
சா தானும் பாடையைப் பின்சென்றான்.
32 —அவர்கள் அப்னேரை எபிரோனிலே அ
டக்கம்பண்ணுகையில், இராசா அப்னே
ரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு
33 அழுதான். சகல சனமும் அழுதது.—இ
ராசா அப்னேருக்காகப் புலம்பிச் சொ
ன்னதாவது, மதியில்லாதவன் சாகிறது
34 போல அப்னேர் மடிந்தானே!— உன்
னுடைய கைகள் கட்டப்பட்டிருந்தது
ம் இல்லை. உன்னுடைய கால்கள் விலங்கு
போடப்பட்டிருந்ததும் இல்லை. அக்கிர
மக்காரர் கையில் மடிகிறது போல, மடிந்
தாயென்றான். அப்போது சனம் எல்லா
ம் பின்னையும் அதிகமாய் அவனுக்காக
35 அழுதது.—பகல் இன்னம் உண்டாயிரு
க்கச் சனம் எல்லாம் வந்து அப்பம்
புசியுமென்று தாவீதுக்குச் சொல்லு
கிற போது, தாவீது சூரியன் அஸ்த
மியாததற்கு முன்னே நான் அப்பத்
தையாகிலும் வேறெதையாகிலும் உருசி

பார்த்தால் தேவன் எனக்கு இப்படியும்
அப்படியுஞ்செய்யக் கடவரென்றுஆணை
யிட்டுச் சொன்னான்.—சனம் எல்லாம் அ 36
தை அறிந்தது.அது அவர்கள் பார்வைக்கு
நன்றாய் இருந்தது. இராசா செய்ததெல்
லாம் எல்லாச்சனத்திற்கும் நன்றாய்க் கண்
டது. -அப்படியே நேரின் குமாரனாகிய 37
அப்னேரைக் கொன்றுபோட்டது இரா
சாவினால் வந்ததல்லவென்று அந்நாளிலே
சகல சனமும் இஸ்ரவேல் அனைத்தும்
அறிந்துகொண்டது.-இராசா தன் ஊழி 38
யக்காரரோடே சொன்னதாவது, இன்
றையித்தினம் இஸ்ரவேலில் ஒரு பிரபும்
பெரிய மனுஷனும் விழுந்தானென்று அ
றியீர்களோ?- இராசாவாக அபிஷேகம்ப 39
ண்ணப்பட்ட நானோ இன்னம் புதியவ
ன். ஆனாலுஞ் செருயாவின் குமாரராகி
ய இந்த மனுஷர் என்னை விடக் கெட்டி
யானவர்களாய் இருக்கிறார்கள். அந்தப்
பொல்லாங்கைச்செய்தவனுக்கு யெகோ
வா அவன் பொல்லாங்குக்குத் தக்கதாய்
ச் சரிக்கட்டுவாராகவென்றான்.

௪. அதிகாரம்.

இஸ்போசேத்தைக் கொன்றவர்களைத் தாவீது ஆக்கினைபிட்டது.

1 அப்னேர் எபிரோனிலே செத்துப்
போனதைச் சவுலின் குமாரன் கேட்ட
போது, அவன் கைகள் திடனற்றுப்போ
2 யி இஸ்ரவேல் எல்லாங் கலங்கிற்று.—ஆ
னாலுஞ் சவுலின் குமாரனுக்குத் தண்டு
சேவகரின் தலைவரான இரண்டு மனுஷர்
இருந்தார்கள். ஒருவனுக்குப் பானாவெ
ன்றும் மற்றவனுக்கு ரேகாக்கென்றும்
பேர் இருந்தது. அவர்கள் பென்யமின்
புத்திரரிற் பேரோத்தியனாகிய ரிம்மோ
னின்குமாரரானவர்கள். ஏனெனிற் பே
ரோத்தும் பென்யமினுக்கடுத்ததாய் எ
3 ண்ணப்பட்டது.-பேரோத்தியரோ கித்
தாயிமுக்கு ஓடிப்போய், இந்நாள்வரை
க்கும் அங்கே பரதேசிகளாய்த் தங்கியி
4 ருக்கிறார்கள்.—சவுலின் குமாரன் யோ
னத்தானுக்கோ இரண்டு காலும் முட
மான ஒரு குமாரன் இருந்தான். சவுலு
ம் யோனத்தானும் மடிந்த செய்தி இஸ்

ரெயேலில் இருந்து வருகிற போது, அவ
ன் ஐந்து வயதுள்ளவனாய் இருந்தான். அப்
போது அவனுடைய தாதி அவனை எடுத்
து ஓடிப்போனாள். அவள் ஓடத்தீவிரிக்
கையில், அவன் விழுந்து சப்பாணியானா
ன். அவன் பேர் மேவிபோசெத்தென்ப
து.—பேரோத்தியனான அந்த ரிம்மோ 5
னின் குமாரராகிய ரேகாபும் பானாவும்
போய் இஸ்போசேத் மத்தியானத்திலே
படுக்கையின் மேலே சயனித்திருந்த வெ
ய்யில் வேளையிலே அவன் வீட்டிற்கு
ட் பிரவேசித்து,—கோதும்பையை வா 6
ங்க வருகிறவர்கள் போல நடு வீடுமட்டும்
வந்து, அவனை வயிற்றிலே குத்திப்போ
ட்டார்கள். பின்பு ரேகாபும் அவன்
சகோதரன் பானாவுந் தப்பிக்கொண்டு
போனார்கள்.— அவன் தன் படுக்கை வீ 7
ட்டிலே தன் கட்டிலின் மேலே படுத்
திருக்கத்தானே இவர்கள் உள்ளே போ
ய், அவனைக் குத்திக் கொன்றுபோட்
டு, அவன் தலையை வெட்டிப்போட்
டார்கள். பிறகு அவன் தலையை அவர்
கள் எடுத்துக்கொண்டு, இராமுழுதும்

அந்தர வெளி வழியாய் நடந்து,—எபி
8 ரோனில் இருக்கிற தாவீதண்டைக்கு
இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு
வந்து இராசாவுடனே, இதோ உம்மு
டைய பிராணனை வாங்கத் தேடின உம்
முடைய சத்துருவாய் இருந்த சவுலின்
குமாரனை இஸ்போசேத்தின் தலை. இ
ன்றையித்தினம் யெகோவா இராசாவா
கிய எங்கள் ஆண்டவனுக்காகச் சவுலின்
கையிலும் அவன் வித்தாரின் கையிலும்
9 பழிவாங்கினாரென்றார்கள்.— ஆனாலுந்
தாவீது பேரோத்தியனான ரிம்மோனின்
குமாரராகிய ரேகாபுக்கும் அவன் ச
கோதரன் பானாவுக்கும் பிரத்தியுத்தார
மாகச் சொன்னதாவது, என் ஆத்துமத்
தை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி
மீட்ட யெகோவாவுடைய சீவனைக் கொ
ண்டு நான் சொல்லுகிறதைக் கேளுங்க
10 ள்.—இதோ, சவுல் செத்துப்போனா
னென்று எனக்கு அறிவித்துத் தன் பா
ர்வைக்குச் சுகசெய்தியைச் சொல்லுகிற
வனாய் இருந்து,அதற்காகத் தனக்கு வெ
குமானங் கொடுப்பேனென்று நினைத்த

அவனை நான் பிடித்துச் சிக்லாகிலே கொ
ன்றுபோட்டேனே,—தமது வீட்டிற்கு 11
ள் தமது படுக்கையின்மேலே படுத்தி
ருந்த நீதிமானைக் கொலைசெய்த பொல்
லாத மனுஷரை எத்தனை அதிகம்? இப்
போதும் நான் அவருடைய இரத்தப்ப
ழியை உங்கள் கைகளில் வாங்கி உங்களை
ப் பூமியில் இருந்து கழித்துப் போடா
திருப்பேனோவென்று சொல்லி,—அவர் 12
களைக் கொன்றுபோடவும், அவர்கள் கை
களையுங் கால்களையுந் தறித்து எபிரோனி
ல் இருக்கிற குளத்தண்டையிலே தூக்கி
ப்போடவுந் தாவீது வாலிபருக்குக் கற்
பித்தான். ஆனாலும் இஸ்போசேத்தின்
தலையை எடுத்து எபிரோனில் இருக்கிற
அப்னேரின் கல்லறையிலே அடக்கம்ப
ண்ணினார்கள்.

ரு. அதிகாரம்.

*தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் இராசா
வாக அபிஷேகம்பண்ணப்பட்டு எருசலேமைப் பி
டித்து அங்கே சுக சீராக வாசம்பண்ணினது.*

அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்தி 1

ரங்கள் எல்லாம் எபிரோனில் இருக்கிற தா
வீதண்டைக்கு வந்து சொன்னதாவது,
இதோ, நாங்கள் வந்திருக்கிறோம். நாங்க
ள் உம்முடைய எலும்பும் உம்முடை
2 ய மாமிசமுமானவர்கள்.—சவுல் எங்கள்
மேல் இராசாவாய் இருக்கிற அப்போது
தானும் நீர் இஸ்ரவேலோடே போக்கு
ம் வரத்துமாய் இருந்தீர். நம்முடைய சன
மாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ர
வேலின் மேலே தலைவனாய் இருப்பாயெ
ன்று உம்மோடே யெகோவா சொன்
3 னாரென்றார்கள்.—இஸ்ரவேலின் மூப்பர்
எல்லாரும் எபிரோனிலே இராசாவண்
டைக்கு வந்தார்கள். தாவீது இராசா எ
பிரோனிலே யெகோவாவுக்கு முன்பாக
அவர்களோடே உடன்படிக்கை பண்ணி
னபிறகு அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்
மேல் இராசாவாக அபிஷேகம் பண்ணி
4 னார்கள்.—தாவீது இராசாவாகிற போது,
முப்பது வயதாய் இருந்தான். அவன் நா
ற்பது வருஷம் இராச்சியபாரம்பண்ணி
5 னான்.—அவன் எபிரோனிலே யூதாவின்
மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும் எரு

சலேமிலே எல்லா இஸ்ரவேலின்மேலு
ம் யூதாவின்மேலும் முப்பத்து மூன்
று வருஷமும் இராச்சியபாரம்பண்ணி
னான்.

தேசத்திலே குடியிருக்கிற எபூசியர் 6
மேல் யுத்தம்பண்ண இராசாவானவன்
தன் மனுஷரோடும் எருசலேமுக்குப்
போனான். அவர்கள் தாவீதுக்கு, நீ இ
தற்குட் பிரவேசிப்பதில்லை. குருடருஞ்
சப்பாணிகளும் உன்னை விலக்குவார்களெ
ன்று சொல்லித் தாவீது இதிலே உட்பிர
வேசிப்பதில்லையென்றார்கள்.—ஆனாலுந் 7
தாவீது சீயோன் கோட்டையைப் பிடி
த்தான். அது தாவீதின் பட்டணம்.—
எனெனில், எவன் எபூசியரை முறியடி 8
த்துச் சாலகத்திலுந் தாவீதின் ஆத்துமம்
பகைக்கிற சப்பாணிகள் குருடரிடத்தி
லுஞ் சேர்ந்தேறுகிறானோ அவன் தலைவ
னாய் இருப்பானென்று தாவீது அன்றை
யித்தினஞ் சொல்லியிருந்தான். குருடனு
ஞ் சப்பாணியும் வீட்டிலேவர வேண்டா
மென்றதைத் தொட்டுச் சொல்லுகிறார்
கள்.—அந்தக் கோட்டையிலே தாவீது 9

வாசம்பண்ணி, அதற்குத் தாவீதின் பட்
டணமென்று பேரிட்டு, மில்லோவென்
ற தலந் துவக்கி உட்புறம் மட்டுஞ் சுற்றி
10 லும் இருக்கிறதைக் கட்டுவித்தான்.—தாவீ
து நாளுக்கு நாள் பெரியவனாய்ப் போ
னான். ஏனென்றாற் சேனைகளின் தேவ
னாகிய யெகோவா அவனோடே இருந்
11 தார். —தீறுவின் இராசாவாகிய ஈராந்
தாவீதண்டைக்குத் தானுபதிகளையுங் கே
துரு மரங்களையுந் தச்சரையுங் கற்றச்ச
ரையும் அனுப்பினான். இவர்கள் தாவீ
துக்கு ஒரு வீட்டைக் கட்டினார்கள்.—
12 யெகோவா தன்னை இஸ்ரவேலின் மேல்
இராசாவாகத் திடப்படுத்தித் தம்முடை
ய சனமாகிய இஸ்ரவேலின் நிமித்தந் தன்
னுடைய இராச்சியத்தை உயர்த்தினரெ
ன்று தாவீது கண்டு அறிந்த போது,—
13 அவன் எபிரோனில் இருந்து வந்த பிறகு,
எருசலேம் ஊராராகிய இன்னம் அதிக
மான வைப்பாட்டிகளையும் ஸ்திரிகளையு
ம் படைத்தான். இன்னம் அதிக குமார
ருங் குமாரத்திகளுந் தாவீதுக்குப் பிறந்
14 தார்கள்.— எருசலேமில் அவனுக்குப்

பிறந்த குமாரரின் நாமங்களாவன, சம்
மூவா, சொவாப், நாத்தான், சாலோ
மோன்,—இப்கார், எலிசூவா, நெப்பேக் 15
அப்பியா,—எலிசாமா, எலியாதா, எலிப் 16
பேலேத் என்றவர்கள்.

அவன் பெலிஸ்தரை இரண்டுதரஞ் செயித்தது.

தாவீதை இஸ்ரவேலின் மேல் இராச 17
சாவாக அபிஷேகம் பண்ணினார்களெ
ன்று பெலிஸ்தர் கேட்ட போது, அ
வர்கள் எல்லாருந் தாவீதைத் தேடவந்து
எறினார்கள். அதைத் தாவீது கேட்கிற
போது, ஒரு அரணிப்பான இடத்திலே
போய் இறங்கினான்.—பெலிஸ்தரோ வந் 18
து ரேப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவி
யிருந்தார்கள்.—பெலிஸ்தரின் மேலே 19
போய் எறுவேனோ? அவர்களை என்கை
யில் ஒப்புக்கொடுப்பீரோவென்று தா
வீது யெகோவாவைக் கேட்ட போது,
யெகோவா தாவீதுடனே, எறு, எனெ
னில் பெலிஸ்தரை உன் கையில் ஒப்புக்
கொடுக்கவே ஒப்புக்கொடுப்போமென்
றார்.—தாவீது பால்பிராச்சீமுக்கு வந்து 20
அங்கே அவர்களை முறியடித்துத் தன்

ணீர்கள் வடிகிறப்போலே யெகோவா
என் சத்துருக்களை எனக்கு முன்பா
க வடியறுத்துக்கொண்டுபோனாரென்று
சொல்லி அது நிமித்தம் அந்த இஸ்தலத்
திற்குப் பால்பிருச்சீமென்று பேரிட்
21 டான்.—அங்கே பெலிஸ்தர் தங்கள் விக்
கிரகங்களை விட்டுப் போனார்கள். அவைக
ளைத் தாவீதும் அவன் மனுஷரும் எடுத்
22 துக்கொண்டார்கள்.—பெலிஸ்தர் திரும்
பவும் வந்தேறி, ரேப்பாயீம் பள்ளத்தா
க்கிலே விசாலத்தில் இறங்கினார்கள்.—
23 தாவீது யெகோவாவைக் கேட்டதற்கு
அவர், நீ நேராய் ஏறிப்போகாமல், அவ
ர்களுக்குப் பின்னாலே சுற்றி முசுக்கட்
டைச்செடிகளுக்கு எதிரே இருந்து அவர்
24 கள் மேல்வந்து,-முசுக்கட்டைச்செடிக
ளின் நுனிகளிலே நடந்து வருகிற இரை
ச்சலை நீ கேட்கையில், அப்போது சீக்கி
ரமாய்ப் போவாயாக. ஏனெனில் அப்
போது பெலிஸ்தரின் பாளயத்தை முறி
யடிக்க யெகோவா உனக்கு முன்னாகப்
25 புறப்பட்டிருப்பாரென்றார்.—யெகோ
வா தனக்குக் கற்பித்த பிரகாரமாகத்

தானே தாவீது செய்து பெலிஸ்தரைக்
கேபா துவக்கிக் கேசேரைச் சேரும் எ
ல்லை மட்டும் முறியடித்தான்.

---

௬. அதிகாரம்.

*உடம்படிக்கையின் பெட்டி தாவீதின் பட்டண
த்திற்குக் கொண்டுவரப்பட்டது.*

பின்னையுந் தாவீது இஸ்ரவேலில் எல் 1
லாந் தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதி
னாயிரம் பேரைக் கூட்டி,—கேருபீன்களி 2
ன் நடுவே வாசமாய் இருக்கிற சேனைக
ளுடைய யெகோவாவின் நாமந் தொழு
து கொள்ளப்படுகிற தேவனுடைய பெ
ட்டியைப் பாலே யூதாவில் இருந்து ஏறிவ
ரப்பண்ணும்படிக்கு அவனும் அவனோ
டிருந்த அத்தலத்துச் சகலரும் எழுந்
து போய்,—தேவனுடைய பெட்டியை 3
ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி அதை
க் கிபெயாவில் இருக்கிற அபினதாபின் வீ
ட்டில் இருந்து கொண்டுவந்தார்கள். அ
பினதாபின் குமாரராகிய ஊசாவும், அகி
யோவும் அந்தப் புது இரதத்தை நடத்

4 தினார்கள்.-அவர்கள் தேவனுடைய பெட்
டி ஏற்றியிருந்த அதைக் கிபெயாவில் இரு
க்கிற அபினதாபின் வீட்டில் இருந்து நட
த்திக்கொண்டு வருகிற போது, அகியோ
5 பெட்டிக்கு முன்னாலே நடந்தான்.—தா
வீதும் இஸ்ரவேல் வீட்டார் அனைவருந்
தேவதாரிமரத்தாற் பண்ணப்பட்ட சகல
வித கீத வாத்தியங்களாகிய சுரமண்டலங்
களையுந் தம்பூருகளையும் மேளங்களையும்
வீணைகளையுங் கைத்தாளங்களையுந் யெ
கோவாவுக்கு முன்பாகச் சேவித்துக்கொ
6 ண்டுபோனார்கள்.-அவர்கள் நாகோனின்
களம் இருக்கிற இடம் மட்டும் வந்தபோ
துமாடுகள்மிரண்டோடுகிறபடியினாலே,
ஊசா தேவனுடைய பெட்டியண்டைக்
குத் தன் கையை நீட்டி அதைப் பிடித்தா
7 ன்.—அப்போது தேவனாகிய யெகோ
வா ஊசாவின் மேலேகோபம் மூண்டவ
ராகி, அவனுடைய சாவதானமில்லாமை
யின் நிமித்தம் அங்கே அவனை அழித்தார்.
அங்கே தேவனுடைய பெட்டியண்டை
8 யிலே அவன் செத்தான்.—அப்போது
யெகோவா ஊசாவை இடித்த இடிக்காகத்

தாவீது மனஸ்தாபப்பட்டு அந்த ஸ்தலத்
திற்கு இந்நாள் மட்டும் இருக்கிற ஊ
சாவின் இடியென்று பேரிட்டு,—தாவீது 9
அன்றையத்தினம் யெகோவாவுக்குப் ப
யந்து யெகோவாவுடைய பெட்டி எ
ன்னண்டைக்கு வருவதெப்படியென்று
சொல்லி,— அதைத் தன்னண்டைக்குத் 10
தாவீதின் பட்டணத்திலே கொண்டுவர
மனதில்லாமற் கேத்தியனாகிய ஓபேத்
ஏதோமின் வீட்டிலே சேர்த்தான்.
யெகோவாவுடைய பெட்டி கேத்திய 11
னாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூ
ன்று மாதம் இருக்க, யெகோவா ஓபே
த்ஏதோமையும் அவன் வீடு அனைத்தை
யும் ஆசீர்வதித்தார்.— தேவனுடைய 12
பெட்டியின் நிமித்தம் யெகோவா ஓ
பேத்ஏதோமின் வீட்டையும், அவனுக்
கு உண்டானதெல்லாவற்றையும் ஆசீர்
வதித்தாரென்று தாவீது இராசாவுக்கு அ
றிவிக்கப்பட்டது. அப்போது தாவீது
தேவனுடைய பெட்டியை ஓபேத்ஏதோ
மின் வீட்டில் இருந்து தாவீதின் பட்டண
த்திலே மகிழ்ச்சியுடனே ஏறிவரப்பண்

13 ணினான்.—யெகோவாவுடைய பெட்டி
யைச் சுமந்துபோகிறவர்கள் ஆறுதப்ப
டி நடந்தபோது மாடுகளையுங் கொழுத்
த ஆட்டுக்கடாய்களையும் பலியிட்டான்.
14 —தாவீது சணல் நூற் சால்வையைத் த
ரித்துக்கொண்டு சகல பலத்தோடும் யெ
கோவாவுக்கு முன்பாக நடனம்பண்ணி
15 க்கொண்டிருந்தான்.—அப்படியே தா
வீதும், இஸ்ரவேல் வீட்டார் அனைவரும்
யெகோவாவுடைய பெட்டியைக் கெம்பீ
ரத்தோடும், எக்காளத்தொனியோடும்,
16 எறிவரப்பண்ணினார்கள்.—யெகோவாவு
டையபெட்டி தாவீதின் பட்டணத்திற்கு
ட் பிரவேசிக்கிறபோது, சவுலின் குமா
ரத்தியாகிய மீகாள் பலகணி வழியாய்ப்
பார்த்துத், தாவீது இராசா யெகோவா
வுக்கு முன்பாகக் குதித்து, நடனம்பண்
ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே
17 அவனை அசட்டைபண்ணினாள்.—அவர்க
ள் யெகோவாவுடைய பெட்டியை உள்
ளே கொண்டுவந்து, தாவீது அதற்குப்
போட்ட கூடாரத்துக்குள் இருக்கிற அ
தின் தானத்திலே அதை வைத்தபோது,

தாவீது யெகோவாவுடைய சன்னிதியிலே
சருவாங்கத் தகனங்களையும், சமாதானப்
பலிகளையும் பலியிட்டான்.—தாவீது அ 18
வைகளைப் பலியிட்ட பிறகு சேனைகளு
டைய யெகோவா நாமத்திலே சனத்தை
ஆசீர்வதித்து,—இஸ்ரவேலின் திரள் கூ 19
ட்டமாகிய எல்லாச் சனத்திற்கும் புருஷ
ருக்கும் ஸ்திரீகளுக்கும் அவரவருக்கு
ஒரு பணிகாரத்தையும், ஒரு இறைச்சித்
துண்டத்தையும், ஒரு படி திராட்சப்பழ
இரசத்தையும் பங்கிட்டான். பிறகு சன
ம் எல்லாம் அவரவர் தங்கள் வீட்டிற்குப்
போனார்கள்.
தாவீது தன் வீட்டை ஆசீர்வதிக்கிறத 20
ற்குத் திரும்புகிற போது, சவுலின் குமார
த்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொ
ண்டு வந்து, அற்ப மனுஷரில் ஒருவன் வ
ஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறது போ
ல, இன்று தம்முடைய ஊழியக்காரரு
டைய சிறுக்கிகளின் கண்களுக்கு முன்பா
கத் தமது வஸ்திரங்களைக் கழற்றிப்போட்
டிருந்த இஸ்ரவேலின் இராசா இன்று எ
த்தனை மகிமைப்பட்டிருந்தாரென்றாள்.

21 —ஆனாலுந் தாவீது மீகாளோடே சொ
ன்னது, உன் தகப்பனைப் பார்க்கிலும் அ
வருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலு
ம் என்னை இஸ்ரவேலாகிய யெகோவா
வுடைய சனத்தின் மேலே தலைவனாகக் க
ட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்
ட யெகோவாவுடைய சமுகத்திற்கு முன்
22 பாக ஆடிப் பாடினேன்.—இன்னம் இ
தைப் பார்க்கிலும், நான் நீசனும் என் பா
ர்வைக்குப் பணிந்தவனுமாகி இப்படியே
நீ சொன்ன சிறுக்கிகளோடுங் கூடத்தா
23 னே மகிமைப்படுவேனென்றான்.—சவு
லின் குமாரத்தியாகிய மீகாள் மரணம
டையும் நாள் மட்டும் அவளுக்குப் பிள்
ளை இல்லாதிருந்தது.

---

௭. அதிகாரம்.

தாவீது ஒரு தேவாலயத்தைக் கட்ட மனதாய் இருக்கிற போது யெகோவா அவனுக்கு அருளின வாக்குத்தத்தம்.

1 இராசா தன் வீட்டில் வாசமாயிருந்து
யெகோவா அவனைச் சுற்றிலும் இருந்த

அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கு
ம் அவனை நீங்கலாக்கி இளைப்பாறப்பண்
ணின போது, சம்பவித்ததேதென்றால்,
—இராசா தீர்க்கதரிசியாகிய நாத்தானு 2
டனே, நான் கேதுரு மரங்களுடைய
வீட்டிலே வாசம்பண்ணத், தேவனு
டைய பெட்டி திரைகளின் நடுவே வா
சமாய்இருக்கிறதை நீ பாரென்றான். —அ 3
ப்போது நாத்தான் இராசாவுடனே உ
ம்முடைய இருதயத்தில் இருக்கிறதை எல்
லாம் நீர் போய்ச் செய்யும். ஏனெனில்
யெகோவா உம்மோடிருக்கிறாரென்றான்.
— அன்றிராத்திரியிலே சம்பவித்ததே 4
தென்றால் யெகோவாவுடைய வார்த்தை
நாத்தானுக்கு உண்டாகி அவர் சொன்ன
தாவது,—நீ போய் நம்முடைய தாசனா 5
கிய தாவீதுடனே சொல்லவேண்டியது,
யெகோவா சொல்லுகிறதேதெனில் நா
ம் வாசமாய் இருக்கத்தக்கவீட்டை நீ நம
க்குக் கட்டுவாயோ?—ஏனென்றால் நாம் 6
இஸ்ரவேல் புத்திரரை எகிப்த்தில் இருந்
து எறிவரப்பண்ணின நாள்முதற்கொண்
டு இந்நாள்வரைக்கும் நாம் ஒரு வீட்டிலே

வாசம்பண்ணுமற் கூடாரத்திலும் வாசஸ்
7 தலத்திலும் உலாவியிருந்தோமே.—நா
ம் இஸ்ரவேலாகிய நம்முடைய சனத்தை
மேய்க்கக் கற்பித்த இஸ்ரவேல் கோத்தி
ரங்களில் ஒன்றோடாகிலும், நீங்கள் நம
க்குக் கேதுரு மரங்களுடைய வீட்டைக்
கட்டாதிருக்கிறதென்னவென்று நாம் இ
ஸ்ரவேல் புத்திரரோடெல்லாம் உலாவி
வந்த எவ்விடத்திலாகிலும் இருந்து இயா
தொரு வார்த்தையைச் சொன்னோமோ?
8 —இப்போதும் நீ நம்முடைய தாசனாகி
ய தாவீதுக்குச் சொல்வது சேனைகளு
டைய யெகோவா சொல்லுகிறதேதெ
னில் நீ இஸ்ரவேல் என்ற நம்முடைய ச
னத்தின் மேலே தலைவனாய் இருக்க நாம்
ஆடுகள் பிறகாலே நடந்த உன்னை ஆட்
டுமந்தையை விட்டெடுத்துக்கொண்டு,
9 —நீ நடந்த எவ்விடத்திலும் உன்னோ
டே இருந்து உன் சத்துருக்களை எல்லா
ம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கிப்
பூமியில் இருக்கிற பெரியவர்களின் நாம
த்திற்கொத்த பெரிய நாமத்தை உனக்கு
10 உண்டாக்கினோம்.— நாம் நம்முடைய ச

னமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை
எற்படுத்தி அது தன் தானத்திலே குடியி
ருக்கவும், அது இனி அலைக்கப்படாமலு
ம் முன் போலும், நாம் நம்முடைய சன
மாகிய இஸ்ரவேல்மேலே நியாயாதிபதிக
ளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்த
து போலும், அக்கிரமப் புத்திரர் அதை
இனிச் சிறுமைப்படுத்தாமலும் இருக்
கவுமாக அதை நாட்டினேம்.— உன்னு 11
டைய எல்லாச் சத்துருக்களுக்கும் உன்
னை நீங்கலாக்கி இளைப்பாறவும்பண்ணி
னேம். இப்போதும் யெகோவா உனக்
கு வீட்டை உண்டு பண்ணுவாரென்கிற
தை அறிவிக்கிறார்.—உன்னுடைய நா 12
ட்கள் நிறைவேறி நீ உன் பிதாக்களோ
டே நித்திரைபண்ணியிருக்கும் போ
து, நாம் உனக்குப் பிறகு உன் கருப்பப்
பிறப்பாகிய உன் வித்தை எழும்பப்பண்
ணி அவன் இராச்சியத்தைத் திடப்படுத்து 13
வோம்.—அவன் நம்முடைய நாமத்திற்
கென்று ஒரு வீட்டைக் கட்டுவான். அவ
ன் இராச்சியபாரத்தின் ஆசனத்தை என்
றைக்கும் நிலைக்கப்பண்ணுவோம்.—நாம் 14

அவனுக்குப் பிதாவாயிருப்போம். அவ
ன் நமக்குக் குமாரனாயிருப்பான். அவ
ன் அக்கிரமஞ்செய்தால், அவனை மனுஷர்
மிலாறினாலும் மனுப் புத்திரர் அடிகளா
15 லுந் தண்டிப்போம்.—ஆனாலும் உனக்
கு முன்பாக நான் தள்ளிப்போட்ட சவு
லை விட்டு நம்முடைய கிருபையை விலக
ப்பண்ணினது போல, அது அவனை விட்
16 டுவிலகுவதில்லை.— உன்னுடைய வீடும்
உன்னுடைய இராச்சியமும் என்றென்
றைக்கும் உனக்கு முன்பாக நிலைவரமாயி
ருக்கும். உன்னுடைய இராசாசனம் என்
றென்றைக்குந் திடப்பட்டிருக்குமென்
17 கிறாரென்று சொல்லச் சொன்னார்.—நா
த்தான் இந்த எல்லா வார்த்தைகளுக்கும்
இந்த எல்லாத் தரிசனத்திற்குஞ் சரியாய்
த் தாவீதுக்குச் சொன்னான்.
18 அப்போது தாவீது இராசா உட்பிர
வேசித்து, யெகோவாவுக்கு முன்பாகத்
தரித்திருந்து சொன்னதாவது, யெகோ
வாவாகிய ஆண்டவரே, தேவரீர் என்னை
இந்த மட்டுங் கொண்டுவந்ததற்கு நான் எ
ம்மாத்திரம்! என்னுடைய வீடும் எம்மா

த்திரம்!— யெகோவாவாகிய ஆண்டவ 19
ரே, இது இன்னம் உம்முடைய பார்வைக்
குக் கொஞ்சக் காரியமாய் இருக்கின்றதெ
ன்று யெகோவாவாகிய ஆண்டவராய் இரு
க்கிற தேவரீர் உமதடியானுடைய வீட்டை
க் குறித்து இதற்குத் தூரமாய் இருக்குங்
காலத்துச் செய்தியை முதலாய் மனுஷ மா
ர்க்கமாய்த் தானுஞ் சொன்னீர்.—அப்பு 20
றந் தாவீது, உம்மோடே சொல்லிக்கொ
ண்டிருப்பதென்ன? யெகோவாவாகிய ஆ
ண்டவராய் இருக்கிற தேவரீர் உமதடியா
னை அறிவீர்.—உம்முடைய வாக்குத்தத் 21
தத்தின் நிமித்தமும், உம்முடைய சித்
தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரி
யங்களை எல்லாம் உமதடியானுக்கு அ
றிவிக்கும்படிக்குத் தயவுபண்ணினீர்.—
ஆகையால், தேவனாகிய யெகோவாவே, 22
நீர் பெரியவரென்று விளங்குகின்றது. எ
னெனில், நாங்கள் எங்கள் காதுகளாலே
கேட்ட சகல காரியங்களின்படியே தே
வரீரைப் போல் ஒத்தவர் இல்லை. உம்மை
த் தவிர வேறே தேவனும் இல்லை.-உம்மு 23
டைய சனமாகிய இஸ்ரவேலைப் போல் ஒ

த்த சனமும் எது! பூலோகத்துச் சாதிக
ளில் இந்த ஒரே சாதிக்காகத் தேவன் அ
தைத் தமக்குச் சனமாக மீட்கிறதற்கும்
தமக்குக் கீர்த்தியை உண்டாக்குகிறதற்கு
ம் போனாரே; தேவரீர் எகிப்த்தில் இருந்
து மீட்டுவந்த உம்முடைய சனத்திற்கு மு
ன்பாக இந்தப் பயங்கரமான பெரிய கா
ரியங்களை உம்முடைய தேசத்திற்கும் அ
தில் இருந்த சாதிகளுக்கும், அவர்கள் தே
24 வர்களுக்கும் உமக்காகச் செய்து,—உம்
முடைய சனமாகிய இஸ்ரவேல் என்றை
க்கும் உம்முடைய சனமாய் இருப்பதற்கு
அதை உமக்குத் திடப்படுத்திக்கொண்டு
யெகோவாவாகிய நீர்தாமே அவர்களுக்
25 குத் தேவனானீர்.- இப்போதுந் தேவனாகி
ய யெகோவாவே! தேவரீர் உமதடியானை
யும் என் வீட்டையுங் குறித்துச் சொன்
ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலை
வரப்படுத்தித் தேவரீர் சொன்னபடியே
26 செய்யும்.- அப்படியே சேனைகளுடைய
யெகோவா இஸ்ரவேலின் மேலே தேவன்
என்பதினால், உமமுடைய நாமம் என்றெ
ன்றைக்கும் பெரிதாய் இருந்து, உமதடி

யானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பா
க நிலைநிற்கும்.—ஏனென்றால், உனக்கு வீ 27
டு கட்டுவோமென்று இஸ்ரவேலின் தே
வனாகிய சேனைகளின் யெகோவாவாயி
ருக்கிற தேவரீர் உமதடியானின் செவிக்
கு வெளிப்படுத்தினீர். ஆகையால் உம்
மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச்
செய்ய உமதடியானுக்கு மனத்தைரி
யங் கிடைத்தது.—இப்போது யெகோ 28
வாவாகிய ஆண்டவரே! தேவரீர் தே
வனானவர் உம்முடைய வார்த்தைகள் சத்
தியமாய் இருக்கும். தேவரீர் உமதடி
யானோடே இந்த நல் விசேஷங்களைச்
சொன்னீர்.—இப்போதும் உமதடியானி 29
ன் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக
இருக்கும்படிக்கு அதை ஆசீர்வதித்தரு
ளும். யெகோவாவான ஆண்டவராகிய தே
வரீர் அதைச் சொன்னீர். உம்முடைய ஆ
சீர்வாதத்தினாலே உமதடியானின் வீடு
என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கு
மென்றான்.

அ. அதிகாரம்.

தாவீதின் சயங்களும் அவன்பண்ணின இராச்சியபாரமும்.

1 இதற்குப் பிறகு சம்பவித்ததேதெனில், தாவீது பெலிஸ்தரை முறியடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, மெத்தேக் அம்மாவை அவர்கள் கையிலே வாங்கினான்.
2 அவன் மோவாபியரையும் முறியடித்து, அவர்களைத் தரைமட்டும் பணியப்பண்ணி, அவர்கள்மேல் நூற்போட்டு, இரண்டு பங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோடே வைத்தான். அப்படியே மோவாபியர் தாவீதைச் சேவித்து அவனுக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள்.
3 ரேக்கோப்பின் குமாரனாகிய ஆதாதேசரென்ற சோபாவின் இராசா ஐபிராத் நதியண்டையில் இருக்கிற சீமையைத் திரும்பத் தன் வசமாக்கிக்கொள்ளப் போகையில், தாவீது அவனையும் முறி
4 யடித்து,—அவனுக்கு இருந்த இராணுவத்தில் ஆயிரத்து எழுநூறு குதிரைக்கா

ரரையும் இருபதினாயிரங் காலாட்களையு
ம் பிடித்து, இரதங்களில் நூறு இரதங்க
ளை வைத்து, மற்றவைகளை எல்லாந் து
ண்டாடிப்போட்டான்.—சோபாவின் இ 5
ராசாவாகிய ஆதாதேசருக்கு ஒத்தாசை ப
ண்ணத் தமஸ்கு பட்டணத்துச் சூரிய
ர் வந்தார்கள். ஆனாலுந் தாவீது சூரியரி
ல் இருபத்தீராயிரம் பேரை வெட்டிப்
போட்டு,— தமஸ்குக்கடுத்த சூரியாவி 6
லே தாணையங்களை வைத்தான். அப்படி
யே சூரியர் தாவீதைச் சேவித்துக் கப்ப
ங்கட்டுகிறவர்களானார்கள். ஏனென்றால்
தாவீது போன இடத்தில் எல்லாம் யெ
கோவா அவனை இரட்சித்தார்.—ஆதா 7
தேசரின் சேவகருக்கு இருந்த பொற்ப
ரிசைகளைத் தாவீது எடுத்து அவைகளை
எருசலேமுக்குக் கொண்டுவந்தான்.—ஆ 8
தாதேசரின் பட்டணங்களாகிய பெத்தா
கிலும், பேரோத்தாயியாகிலும் இருந்து
தாவீது இராசா மகா திரளான வெண்கல
த்தையும் எடுத்து வந்தான்.

தாவீது ஆதாதேசருடைய எல்லா இ 9
ராணுவத்தையும் முறியடித்த செய்தியை

ஆமாத்தின் இராசாவாகிய தோயீ கேட்ட
10 போது,—இராசாவாகிய தாவீதின் சக
செய்தியை விசாரிக்கவும், அவன் ஆதாரேதே
சரோடே யுத்தம்பண்ணி, அவனை முறி
யடித்ததற்காக அவனுக்கு வாழ்த்துதல்
சொல்லவுந் தோயீ தன் குமாரனாகிய
யோராமை இராசாவண்டைக்கு அனுப்
பினான். ஏனென்றால் ஆதாரேதேசர் தோயீ
ன்மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக்
கொண்டிருந்தான். அவன் கையிலே வெ
ள்ளியும், பொன்னும், வெண்கலமுமா
11 ன தட்டுமுட்டுகள் வந்தன.—தாவீது இ
ராசா கீழ்ப்படுத்தின சூரியர், மோவாபி
யர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், ஆ
மலேக்கியர் என்ற சகல சாதிகளிடத்தி
12 லும்,—ரேகோபின் குமாரனாகிய ஆதா
ரேதேசர் என்ற சோபாவின் இராசாவைக்
கொள்ளையிடத்திலும் எடுத்து யெகோ
வாவுக்கு நியமித்த வெள்ளியோடும், பொ
ன்னோடும், அவைகளையும் அவன் யெ
கோவாவுக்கு நியமித்தான்.
13 தாவீது உப்புப் பள்ளத்தாக்கிலே பதி
னெண்ணாயிரஞ் சூரியரை முறியடித்துத்

திரும்பினதினாலுங் கீர்த்திபெற்றான்.—
ஏதோமிலுந் தாணயங்களை வைத்தான். 14
ஏதோமெங்கும் அவன் தாணயங்களை
வைத்ததினால், ஏதோமியர் எல்லாருந் தா
வீதைச் சேவிக்கிறவர்களானார்கள். ஏனெ
ன்றால், தாவீது போன எல்லாவிடத்தி
லும் யெகோவா அவனை இரட்சித்தார்.
இப்படியே தாவீது இஸ்ரவேல் அனை 15
த்தின் மேலும் இராசாவாய் இருந்தான்.
அவன் தன்னுடைய எல்லாச் சனத்திற்கு
ம் நியாயமும் நீதியுஞ் செய்து வந்தான்.
—செருயாவின் குமாரனாகிய யோவா
ப் இராணுவத்தலைவனாய் இருந்தான். ஆகி 16
லூதின் குமாரனாகிய யோசபாத்து மந்
திரியாய் இருந்தான்.—ஆகித்துபின் குமா 17
ரன் சாதோக்கும் அப்பியத்தாரின் குமா
ரன் அகிமேலேக்கும் ஆசாரியராய் இருந்
தார்கள். செராயா சம்பிரதியாய் இருந்
தான்.—யோய்தாவின் குமாரன் பெனா 18
யா, கிரேத்தியருக்கும் பிலேத்தியருக்குந்
தலைவனாய் இருந்தான். தாவீதின் குமார
ரோ பிரபுக்களாய் இருந்தார்கள்.

௯. அதிகாரம்.

தாவீது மேவிபோசேத்திற்குச் செய்த தயவு.

1 சவுலின் வீட்டாரில் யாதொருவன் நா
ன் யோனத்தான் நிமித்தம் அவனுக்குத்
தயவு செய்யும்படிக்கு இன்னம் மீதியாய்
இருக்கிறானோவென்று தாவீது கேட்டா
2 ன்.—அப்போது சவுலின் வீட்டு வேலைக்
காரனாகிய சீபாவென்று பேருள்ளவனை
த் தாவீதண்டைக்கு அழைத்து வந்தார்க
ள். அவனை இராசா, நீ சீபாவோவென்
று கேட்டான். அவன் அடியேன் தானெ
3 ன்றான்.—அப்போது இராசா, சவுலின்
வீட்டாரில் யாதொருவன் நான் அவனுக்
குத் தேவன் நிமித்தந் தயவு செய்யும்ப
டிக்கு இன்னம் இருக்கவில்லையோவென்
று கேட்டதற்குச் சீபா இராசாவுடனே, இ
ன்னம் யோனத்தானுக்கு இரண்டு கால்
களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறா
4 னென்றான்.-அவன் எங்கேயென்று இரா
சா அவனைக் கேட்டதற்குச் சீபா இராசா
வுடனே, இதோ அவன் லோதேபாரிலே

அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீ
ட்டில் இருக்கிறானென்றான்.--அப்போது 5
தாவீது இராசா அவனை லோதேபாரில்
இருக்கிற அம்மியேலின் குமாரனாகிய மா
கீரின் வீட்டில் இருந்து அழைப்பித்தான்.
சவுலின் குமாரனாகிய யோனத்தானி 6
ன் மகன் மேவிபோசேத் தாவீதண்டை
க்கு வந்த போது, முகங் குப்புற விழுந்
து வணங்கினான். அப்போது தாவீது,
மேவிபோசேத்தே, என்றான். அவன் இ
தோ, உமதடியானென்றான்.—தாவீது 7
அவனுக்கு, நீ பயப்படாதே. ஏனெனில்
உன் தகப்பனாகிய யோனத்தானின் நிமித்
தம் நான் உனக்குத் தயவுசெய்யவே செ
ய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களை
எல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பே
ன். நீயோ என்னுடைய பந்தியில் நித்தம்
அப்பத்தைப் புசிப்பாயென்றான்.—அப் 8
போது அவன் வணங்கிக்கொண்டு, செ
த்த நாயைப் போலான என்னை நீர் நோ
க்கிப் பார்க்கிறதற்கு உமதடியான் எம்மா
த்திரம் என்றான்?—இராசா சவுலின் வே 9
லைக்காரனான சீபாவை அழைப்பித்து அ

வனோடே சொன்னது, சவுலுக்கும் அவ
ர் வீட்டார் எல்லாருக்கும் இருந்த யாவை
யும் உன் எசமானுடைய குமாரனுக்குக்
10 கொடுத்தேன்.—ஆகையால் நீ உன் குமா
ரரையும் உன் வேலைக்காரரையுங் கூட்டி
க்கொண்டு, உன் எசமானுடைய குமார
னுக்குப் புசிக்கிறதற்கு அப்பம் உண்டா
யிருக்கும் படிக்கு, அந்த நிலத்தைப் பயி
ரிட்டு அதின் பலனைச் சேர்ப்பாயாக. உ
ன் எசமானுடைய குமாரன் மேவிபோ
சேத்தோ நித்தம் என் பந்தியிலே அப்
பம் புசிப்பானென்றான். சீபாவுக்கு
ப் பதினைந்து குமாரரும் இருபது வே
11 லைக்காரரும் இருந்தார்கள்.—சீபா இரா
சாவுடனே, இராசாவாகிய என் ஆண்டவ
ன் தமதடியானுக்குக் கற்பித்தபடி எல்
லாம் உமதடியான் செய்வானென்றான்.
இராசாவின் குமாரரில் ஒருவனைப்போ
லே மேவிபோசேத் என் பந்தியிலே அச
னம்பண்ணுவானென்று இராசா சொன்
னான்.
12 மேவிபோசேத்திற்கு மீகாவென்று
பேருள்ள ஒரு சின்னக் குமாரன் இருந்தா

ன். போவின் வீட்டிலே குடியிருந்த யாவ
ரும் மேவிபோசேத்திற்கு வேலைக்காரரா
ய் இருந்தார்கள்.—மேவிபோசேத்தோ 13
இராசாவின் பந்தியில் நித்தம் அசனம்ப
ண்ணுகிறபடியினலே எருசலேமிலே கு
டியிருந்தான். அவனுக்கு இரண்டு காலு
ம் முடமாய் இருந்தது.

௰. அதிகாரம்.

*தாவீது அம்மோனியரையுஞ் சூரியரையுஞ் ச
யித்தது.*

இதற்குப் பிறகு சம்பவித்ததேதெனி 1
ல், அம்மோன் புத்திரரின் இராசா மரித்
தான். அவன் குமாரனுகிய ஆனோன் அ
வன் பட்டத்திற்கு இராசாவானன்.—அ 2
ப்போது தாவீது, ஆனோனின் தகப்ப
னுகிய நாகாஸ் எனக்குத் தயவுசெய்தது
போலே, அவன் குமாரனுகிய இவனுக்கு
த் தயவுசெய்வேனென்று சொல்லி, அ
வன் தகப்பனுக்காக அவனுக்கு ஆறுதல்
சொல்லத் தன் ஊழியக்காரரை அனுப்
பினன். தாவீதின் ஊழியக்காரர் அம்மோ

ன். புத்திரரின் தேசத்திலே வந்த பொழு
3 து,—அம்மோன் புத்திரரின் பிரபுக்கள்
தங்கள் ஆண்டவனாகிய ஆனோனுடனே,
தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை
உமக்கு அனுப்பினதினாலே, உம்முடை
ய தகப்பனைக் கனம்பண்ணுகிறதாய் உம்
முடைய பார்வைக்குக் காணுகின்றதோ?
இந்தப் பட்டணத்தை ஆராய்ந்து, உளவு
பார்த்து, அதைக் கவிழ்த்துப்போடவல்
லவோ தாவீது தன் ஊழியக்காரரை உ
ம்மண்டைக்கு அனுப்பினானென்றார்கள்.
4 —அப்போது ஆனோன் தாவீதின் ஊழி
யக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒ
ரு பக்கத்துத் தாடியைச் சிரைத்து, அவர்
களுடைய சட்டைகளில் அவர்கள் இருப்பி
டமட்டும் இருந்த பாதியைக் கத்திரித்து
ப்போட்டு, அவர்களை அனுப்பிவிட்டான்.
5 —அவர்கள் அதைத் தாவீதுக்கு அறிக்
கைபண்ணின போது, அவன் அந்த மனு
ஷர் மிகவும் நிஸ்காரம்பண்ணப்பட்டப
டியினாலே அவர்களுக்கு எதிராக ஆட்க
ளை அனுப்பி, உங்கள் தாடி முளைக்குமட்
டும் நீங்கள் எரிகோவில் இருந்து, பிறகு தி

ரும்பிவாருங்களென்று இராசா சொல்ல
ச்சொன்ஞன்.—அம்மோன்புத்திரர் தா 6
ங்கள் தாவீதுக்கு நாற்றமெடுத்தவர்களா
னதைக் கண்ட போது, அவர்கள் தாறு
பதிகளை அனுப்பிப் பெத்ரேகோப் தே
சத்துச் சூரியரிலுஞ் சோபாவில் இருக்கி
ற சூரியரிலும் இருபதினுயிரங் காலாட்க
ளையும், மாக்கா சீமையின் இராசாவினிட
த்திலே ஆயிரம் பேரையுந் தோபில் இரு
க்கிற மனுஷரிற் பன்னீராயிரம் பேரையு
ங் கூலிக்குப் பொருந்திக்கொண்டார்க
ள்.—அதைத் தாவீது கேட்ட போது, 7
யோவாபையும் பலசாலிகளோடே எல்
லா இராணுவத்தையும் அனுப்பினுன்.—
அம்மோன்புத்திரர் புறப்பட்டு ஒலிமுக 8
வாசலண்டையிலே போர்செய்ய ஆயத்
தம்பண்ணினுர்கள். ஆறுலுஞ் சோபாவி
லும் ரேகோபிலும் இருந்து வந்த சூரிய
ருந் தோபின் மனுஷரும் மாக்கா மனுஷ
ரும் வெளியிலே தனித்திருந்தார்கள்.—
யோவாபோ இராணுக்களின் படைமு 9
கந் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிற
தைக் காண்கையில், அவன் இஸ்ரவேலி

லே தெரிந்துகொள்ளப்பட்ட எல்லா இ
ராணுக்களிலும் ஒரு பங்கைப் பிரித்தெ
டுத்து அதைச் சூரியருக்கு எதிராக நிறுத்
10 தி,—மற்றச் சனத்தைத் தன் சகோதர
னாகிய அபிசாயிக்கு அம்மோன் புத்திரரு
க்கு எதிராக நிறுத்தும்படிக்கு ஒப்புவித்
11 துச் சொன்னதாவது,—சூரியர் என்னை
ப்பார்க்கிலும் பலத்தால் நீ எனக்கு ஒ
த்தாசையாய் இரு. அம்மோன் புத்திரர் உ
ன்னைப் பார்க்கிலும் பலத்தால், நான் உ
12 னக்கு ஒத்தாசையாக வருவேன்.--திட
னாய் இரு. நாம் நம்முடைய சனத்திற்கா
கவும் நம்முடைய தேவனுடைய பட்
டணங்களுக்காகவுந் திடன்கொண்டிருப்
போம். யெகோவா தமது பார்வைக்கு ந
லமானதைச் செய்வாராகவென்று சொ
13 ல்லி,—யோவாபும் அவனோடிருந்த சன
மும் சூரியர் மேல் யுத்தம்பண்ணச் சே
ர்ந்தார்கள். அவர்கள் அவனுக்கு முன்பா
14 க முறிந்து ஓடினார்கள்.—சூரியர் முறிந்
து ஓடுகிறதை அம்மோன் புத்திரர் கண்
டபோது அவர்களும் அபிசாயிக்கு முன்
பாக முறிந்து ஓடிப் பட்டணத்திற்குட்

பட்டார்கள். அப்போது யோவாப் அம்
மோன் புத்திரரை விட்டுத் திரும்பி, எரு
சலேமுக்கு வந்தான்.
தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக 15
முறியடிக்கப்பட்டதைச் சூரியர் கண்ட
போதோ, ஒருமிக்கக் கூடினார்கள். —ஆதா 16
ரேசர் நதிக்கு அப்பால் இருந்த சூரியரை
யும் அழைத்து அனுப்பினான். அவர்கள்
ஏலாமுக்கு வந்தார்கள். ஆதாரேசருடைய
படைத்தலைவனாகிய சோபாக் அவர்களு
க்கு முன்னாலே நடந்தான். —அது தாவீ 17
துக்கு அறிவிக்கப்பட்ட போது, அவன்
இஸ்ரவேலை எல்லாரங் கூட்டிக்கொண்டு,
யோர்தானைக் கடந்து ஏலாமுக்கு வந்தா
ன். சூரியர் தாவீதுக்கு எதிராக இராணுக்
களை நிறுத்தி, அவனோடு யுத்தம்பண்ணு
கிற போதோ, —சூரியர் இஸ்ரவேலுக்கு 18
முன்பாக முறிந்து ஓடினார்கள். தாவீது
சூரியரில் எழுநூறு இரதங்களின் மனுஷ
ரையுந் நாற்பதினாயிரங் குதிரைக்காரரை
யுங் கொன்று, அவர்களுடைய படைத்த
லைவனாகிய சோபாகையும் வெட்டிப்போ
ட்டான். அவன் அங்கே செத்தான். —அ 19

ப்போது ஆதாரேசரைச் சேவிக்கிற சகல இராசாக்களுந் தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறியடிக்கப்பட்டதைக் கண்டு, இஸ்ரவேலரோடே சமாதானம்பண்ணி அவர்களைச் சேவித்தார்கள். ஏனெனில் அப்புறம் அம்மோன் புத்திரருக்கு ஒத்தாசை செய்யச் சூரியர் பயப்பட்டார்கள்.

௰௧. அதிகாரம்.

தாவீது செய்த கன பாவங்கள்.

1 மறு வருஷம் இராசாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங் காலம் வந்த போது, சம்பவித்ததேதென்றால், தாவீது யோவாபையும் அவனோடே கூடத் தன் சேவகரையும் இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், இரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான். ஆனாலுந் தாவீது எருசலேமில் இருந்துவிட்டான்.

2 ஒரு சாயங்காலத்திலோ தாவீது தன் படுக்கையில் இருந்து எழுந்து, இராச

அரண்மனையினுடைய உப்பரிகையின்
மேல் உலாத்திக்கொண்டு, சலக்கம்ப
ண்ணிக்கொண்டிருக்கிற ஒரு பெண்சா
தியை உப்பரிகையின்மேல் இருந்து பா
ர்த்தான். அந்தப் பெண்சாதி வெகு சவு
ந்தரியரூபமாய் இருந்தாள்.—அப்போ 3
து தாவீது அந்தப் பெண்சாதி ஆரெ
ன்று விசாரிக்க ஆளனுப்பினான். அவள் எ
லியாமின் குமாரத்தியாகிய பற்சேபாள்
என்ற எத்தியனான உரியாவின் பெண்சா
தி அல்லவோவென்றார்கள்.—அப்போ 4
து தாவீது அவளை அழைத்துவரச்சொ
ல்லி ஆட்களை அனுப்பினான். அவள் அவ
னண்டைக்கு வந்தபோது, தன் தீட்டை
க் கழிக்கச் சுத்திகரித்துக்கொண்டிருந்த
அவளோடே சயனித்தான். பிறகு அவ
ள் தன் வீட்டுக்குப் போனாள்.—ஆனாலு 5
ம் அந்தப் பெண்சாதி கருப்பந்தரித்தி
ருந்து, தான் கருப்பவதியென்று தாவீ
துக்கு அறிவிக்கத்தக்கதாக ஆள் அனுப்பி
னாள்.–அப்போது தாவீது எத்தியனாகிய 6
உரியாவை என்னண்டைக்கு அனுப்பென்
யோவாப் அண்டைக்கு ஆள் அனுப்பி

றான். அப்படியே யோவாப் உரியாவைத்
7 தாவீதண்டைக்கு அனுப்பினான்.- உரியா
அவனண்டைக்கு வந்த போது, தாவீது
அவனை, யோவாப் சுகமாய் இருக்கிறா
னோ? சனஞ் சுகமாய் இருக்கின்றதோ? யு
த்தத்தின் செய்தி நற் செய்தியாயிருக்கி
8 ன்றதோவென்றுகேட்டான்.—பிறகு தா
வீது உரியாவுடனே, நீ உன் வீட்டுக்குப்
போய் இறங்கி உன் கால்களைக் கழுவென்
றான். உரியா இராசாவின் வீட்டில் இருந்
து புறப்பட்ட போது, இராசாவின் உச்சி
9 தம் அவன் புறகாலே போயிற்று.—ஆனா
லும் உரியா தன் வீட்டுக்குப்போய் இறங்
காமல், இராசா அரண்மனையின் வாசலி
லே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவ
கரோடும் படுத்துக்கொண்டிருந்தான்.-
10 உரியா தன் வீட்டுக்குப்போய் இறங்கினதி
ல்லையென்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்
ட போது, தாவீது உரியாவுடனே, நீ ப
யணத்தில் இருந்து வந்ததில்லையோ? நீ உ
ன் வீட்டுக்குப் போய் இறங்காதிருக்கிற
11 தென்னவென்றதற்கு,—உரியா தாவீது
டனே, பெட்டியானதும் இஸ்ரவேலும்

யூதாவுங் கூடாரங்களிலே தங்கி, என் ஆ
ண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவ
னின் சேவகரும் வெளியிலே பாளயமிற
ங்கி இருக்க, நான் புசிக்கிறதற்குங் கு
டிக்கிறதற்கும் என் பெண்சாதியோடே
சயனிக்கிறதற்கும், என் வீட்டுக்குட் பி
ரவேசிப்பேனோ? நான் இப்படிச்செய்
கிறதில்லையென்று உம்முடைய சீவனைக்
கொண்டும் உம்முடைய ஆத்துமத்தின்
சீவனைக் கொண்டுஞ் சொல்லுகிறேனெ
ன்றான்.—அப்போது தாவீது உரீயாவு 12
டனே இன்றைக்கும் இங்கே இரு. நா
ளை உன்னை அனுப்புவேனென்றான். அ
ப்படியே உரீயா அன்றும் மறு நாளும்
எருசலேமில் இருந்தான்.—தாவீது அவ 13
னைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடி
க்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்க
ப்பண்ணினான். ஆனாலும் அவன் தன் வீ
ட்டுக்குப்போய் இறங்காமற் சாயங்காலத்
திலே தன் ஆண்டவனின் சேவகரோடே
தன் படுக்கையிலே படுத்துக்கொள்ளப்
போனான்.—காலமேயோ தாவீது யோ 14
வாபுக்கு ஒரு நிருபத்தை எழுதி உரீயாவி

15 ன் கையில் அனுப்பினான்.—அந்த நிருப
த்திலே அவன், பலத்த படை முகத்தி
ற்கு நேராக உரியாவை நிறுத்தி, அவன்
வெட்டுண்டு சாகும்படிக்கு அவனை விட்
டுப் பின் வாங்குங்களென்று எழுதியிருந்
16 தான்.—அப்படியே யோவாப் அந்தப்
பட்டணத்துக் காவற்காரர் கையில் நல்ல
சேவகர் இருக்கிறார்களென்று தான் அறிந்
17 த இடத்தில் உரியாவை நிறுத்தினான்.—ப
ட்டணத்து மனுஷர் புறப்பட்டு யோவா
ப்போடே யுத்தம் பண்ணுகையில், தா
வீதின் சேவகராகிய சனத்திற் சிலர் பட்
டார்கள். ஏத்தியனாகிய உரியாவுஞ் செ
18 த்தான்.—அப்போது யோவாப் அந்த
யுத்தத்தின் செய்திகளை எல்லாந் தாவீ
19 துக்கு அறிவிக்க ஆளனுப்பி,—தான் அ
னுப்புகிற ஆளுக்குக் கற்பித்ததாவது, நீ
இந்த யுத்தத்தின் செய்திகளை எல்லாம் இ
ராசாவுக்குச் சொல்லித் தீர்ந்த போது,
20 —இராசாவுக்குக் கோபம் எழும்பி அவர்
யுத்தம் பண்ண நீங்கள் பட்டணத்திற்கு
இத்தனை கிட்டிச் சேர்ந்ததென்ன? அலங்
கத்தில் நின்று எய்வார்களென்று அறியீர்

களோவென்றும்,-எருப்பேசேத்தின் கு 21
மாரன் அபிமேலேக்கைக் கொன்றவன் ஆ
ர்? தேபேசிலே ஒரு பெண்சாதி அலங்க
த்தில் இருந்து ஒரு எந்திரக் கல்லின் துண்
டை அவன் மேலே போட்டதினால் அல்
லோ அவன் செத்தான்? நீங்கள் அலங்கத்
திற்கு இத்தனை கிட்டிப்போனதென்ன
வென்றும் உன்னோடே சொன்னால், அப்
போது நீ உம்முடைய சேவகனாகிய உரீ
யாவென்ற எத்தியனுஞ் செத்தானென்
றுசொல்லென்றான்.—அந்த ஆள் போ 22
ய், உட்பிரவேசித்து, யோவாப் தன்னை
அனுப்பின செய்திகள் எல்லாந் தாவீதுக்
கு அறிவித்து,—தாவீதோடே சொன்ன 23
தாவது, அந்த மனுஷர் எங்கள் மேலே
பலத்துக்கொண்டு, வெளியே எங்களுக்
கு எதிராகப் புறப்பட்டு வருகிறபோது,
நாங்கள் பட்டண வாசல் மட்டும் அவர்க
ளைத் துரத்தினோம்.—அப்போது அம் 24
பெய்கிறவர்கள் அலங்கத்திலிருந்து
உம்முடைய சேவகரின்மேல் எய்கிறதினா
லே, இராசாவின் சேவகரிற் சிலர் செத்தா
ர்கள். உம்முடைய சேவகனாகிய உரீயா

வென்ற ஏத்தியனுஞ் செத்தானென்று
25 ன்.—அப்பொழுது தாவீது அந்த ஆளோ
டே சொன்னதாவது, நீ யோவாபுடனே,
இந்தக் காரியம் உனக்கு ஆகாததாகக் கா
ண வேண்டாம். எனெனில் பட்டயம் ஒரு
வேளை அவனையும் ஒருவேளை இவனையும்
அழிக்கும். நீ பட்டணத்தை இடிக்கும் ப
டிக்கு அதின்மேல் உன் யுத்தத்தைப்ப
லக்கப் பண்ணென்று அவனுக்குத் திட
ன்சொல்லென்றான்.
26 தன் புருஷனாகிய உரியாச் செத்தானெ
ன்று அவன் பெண்சாதி கேட்டபோது,
அவள் தன் வீட்டுக்காரனுக்காக இழவு
27 கொண்டாடினாள்.—துக்க நாட் சென்ற
பிறகு, தாவீது அவளை அழைத்தனுப்பி
த் தன் வீட்டிலே சேர்த்துக்கொண்டா
ன். அவள் அவனுக்குப் பெண்சாதியாகி,
அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். ஆ
னாலுந் தாவீது செய்த இந்தக் காரியம்
யெகோவாவின் பார்வைக்குப் பொல்லா
ததாய் இருந்தது.

௰௨. அதிகாரம்.

தாவீது செய்த பாவத்துக்காகச் சுறுக்காய்க் கடிந்துகொள்ளப்பட்டது.

யெகோவா நாத்தானை தாவீதண்டை 1
க்கு அனுப்பினார். இவன் அவனண்டைக்
கு வந்து அவனுக்குச் சொன்னதாவது, ஒ
ரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்
தார்கள். ஒருவன் ஐசுவரியவானும் மற்ற
வன் தரித்திரனுமாய் இருந்தான்.—ஐசுவ 2
ரியவானுக்கு ஆடுமாடுகள் வெகுதிரளாய்
இருந்தன.—தரித்திரனுக்கோ தான் கொ 3
ண்டு வளர்த்த ஒரே சின்ன ஆட்டைத் த
விர வேறொன்றும் இல்லாதிருந்தது. அ
து அவனோடும் அவன் பிள்ளைகளோடும்
இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்ப
த்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே கு
டித்து, அவன் மடியிலே படுத்துக்
கொண்டு, அவனுக்கு ஒரு குமாரத்தியை
ப் போல் இருந்தது.-ஐசுவரியமுள்ள அ 4
ந்த மனுஷனுக்கு ஒரு வழிப்பயணக்கார
ன் வந்த போது, அவன் தன்னண்டைக்கு
வந்த வழிப்போக்கனுக்குச் சமைப்ப

ண்ணுவிக்கத் தன்னுடைய ஆடுமாடுகளி
ல் எதையாகிலும் பிடிக்க மனதில்லாமல்,
அந்தத் தரித்திர மனுஷனுடைய ஆட்
டைப் பிடித்து, அதைத் தன்னண்டைக்
கு வந்த மனுஷனுக்குச் சமையற்பண்ணு
வித்தானென்றான்.
5 அப்போது தாவீது அந்த மனுஷன்
மேல் மிகவுங் கோபமூண்டவனாகி, நா
த்தானோடே சொன்னதாவது, இதைச்
செய்த அந்த மனுஷன் மரணத்திற்கேது
வானவனென்று யெகோவாவுடைய ஜீவ
6 னைக் கொண்டு சொல்லுகிறேன்.—அவன்
இரக்கமாய் இராமல் இந்தக் காரியத்தைச்
செய்தபடியினாலே, அந்த ஆட்டுக்காக
நாலத்தனையுந் திரும்பச் செலுத்த வே
7 ண்டுமென்றான்.—அப்போது நாத்தான்
தாவீதுடனே சொன்னதாவது, நீர் தா
னே அந்த மனுஷன். இஸ்ரவேலின் தே
வனாகிய யெகோவாச் சொல்லுகிறது,
நாம் உன்னை இஸ்ரவேலின் மேல் இரா
சாவாக அபிஷேகம்பண்ணுவித்து, நா
ம் உன்னைச் சவுலின் கைக்குத் தப்பு
8 வித்து;— உன் ஆண்டவனுடைய வீட்

டையும் உன் ஆண்டவனுடைய ஸ்திரீக
ளையும் உன் மடியிலே கொடுத்து, இஸ்ரா
வேல் வீட்டையும் யூதாவின் வீட்டையும்
உனக்குக் கொடுத்தோம். இது போதாத
திருந்தால், இன்னின்னதை உனக்குப் பி
ன்னையுங் கூட்டிக் கொடுப்போமே.—நீ 9
யெகோவாவுடைய பார்வைக்குப் பொல்
லாங்கான அந்தக் காரியத்தைச் செய்யு
ம்படிக்கு அவருடைய வார்த்தையை அ
சட்டைபண்ணினதென்ன? நீ ஏத்தியனா
கிய உரீயாவைப் பட்டயத்தால் மடிவித்
து, அவன் பெண்சாதியை உனக்குப் பெ
ண்சாதியாக எடுத்துக்கொண்டு, அவனை
அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே
கொன்றுபோட்டாய்.—இப்போதும் நீ 10
நம்மை அசட்டைபண்ணி, ஏத்தியனாகி
ய உரீயாவின் பெண்சாதியை உனக்குப்
பெண்சாதியாக எடுத்துக் கொண்டபடி
யினாலே, பட்டயம் என்றைக்கும் உன்
வீட்டை விட்டு விலகாதிருக்கும்.— யெ 11
கோவா சொல்லுகிறது, இதோ நாம் உ
ன் வீட்டிலே பொல்லாங்கை உன்மே
ல் எழும்பப்பண்ணி; உன் கண்கள் பா

ர்க்கு உன் ஸ்திரீகளை எடுத்து உன் தோ
ழனுக்குக் கொடுப்போம். அவன் இந்த
ச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன்
12 ஸ்திரீகளோடே சயனிப்பான். ஏனென்
றால் நீ ஒளிப்பிடத்திலே அதைச் செய்
தாய்; நாமோ இந்தக் காரியத்தை இஸ்ர
வேலர் எல்லாருக்கும் முன்பாகவுஞ் சூரி
யனுக்கு முன்பாகவுஞ் செய்வோமென்
13 றாரென்று சொன்னான்.—அப்போது தா
வீது நாத்தானுடனே, நான் யெகோவா
வுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தே
னென்றான். நாத்தான் தாவீதோடே
சொன்னதாவது, நீர் சாகாதபடிக்கு யெ
கோவா உம்முடைய பாவத்தை நீங்கவு
14 ம்பண்ணினார்.—ஆனாலும் இந்தக் காரிய
த்தினாலே யெகோவாவுடைய சத்துருக்
கள் தூஷிக்க நீர் இடம்பண்ணவைப
ண்ணினபடியினாலும், உமக்குப் பிறந்த
பிள்ளை சாகவே சாகுமென்று சொல்லி,—
15 நாத்தான் தன் வீட்டுக்குப் போய்வி
ட்டான். அப்போது யெகோவா உரீயாவி
ன் பெண்சாதி தாவீதுக்குப் பெற்ற ஆ
ண்பிள்ளையை அது கேவலமாய் வியாதி

ப்பட அழுத்தார்.—அப்போது தாவீது 16
அந்தப் பிள்ளைக்காகத் தேவனைத் தேடி,
உபவாசம்பண்ணி, உள்ளே போய், இரா
வெல்லாந் தரையிலே கிடந்தான்.-அவனை 17
த் தரையில் இருந்து எழுந்திருக்கப் பண்
ண அவனுடைய வீட்டின் மூப்பான பே
ர்கள் எழுந்து,அவனண்டையில் வந்தாலு
ம், அவன் மாட்டேனென்று சொல்லி,
அவர்களோடே அப்பஞ் சாப்பிடாமலு
ம் போனான்.—ஏழாம் நாளிலோ பிள் 18
ளை செத்துப் போயிற்று. அப்போது
பிள்ளை செத்துப்போயிற்றென்று தா
வீதின் ஊழியக்காரர் அவனுக்கு அறி
விக்க ஐயப்பட்டார்கள். ஏனெனில் இ
தோ பிள்ளை உயிரோடிருக்க, நாம் அவ
ரோடே பேசுகிற போது, அவர் நம்
முடைய சொற் கேட்கவில்லை. பிள்ளை
செத்துப்போயிற்றென்று அவரோடே
எப்படிச் சொல்லுவோம்? அதிகமாய் வி
யாகுலப்படுவாரென்று சொல்லிக்கொ
ண்டார்கள். — ஆனாலும் தாவீது தன் 19
ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசுகிற
தைக் காண்கிறதினாற், பிள்ளை செத்துப்

போயிற்றென்று அறிந்துகொண்டு, தன்
ஊழியக்காரரைப் பிள்ளை செத்துப்போ
யிற்றோவென்று கேட்டான். செத்துப்
20 போயிற்றென்றார்கள்.—அப்போது தா
வீது தரையை விட்டு எழுந்திருந்து, தன்
னைக் கழுவி, எண்ணெய் பூசிக்கொண்டு,
தன் வஸ்திரங்களை மாற்றி, யெகோவாவு
டைய வீட்டுக்குட் பிரவேசித்துப் பணிந்
துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போ
சனங் கேட்டு, அதை அவன் முன்னே
21 வைத்த போது புசித்தான்.-அப்போது
அவன் ஊழியக்காரர் அவனுடனே, நீர்
செய்கிற இந்தக் காரியம் என்ன? உயி
ரோடிருக்கிற பிள்ளைக்காக உபவாசித்து
அழுதுகொண்டீர். ஆனாலும் பிள்ளை ம
ரித்த பிறகு, எழுந்திருந்து அசனம்பண்
22 ணுகிறீரென்றார்கள்.—அதற்கவன் சொ
ன்னது, பிள்ளை இன்னம் உயிரோடிரு
க்கப், பிள்ளை பிழைக்கும் படிக்கு தே
ன்வ இரங்குவாரோ ஆருக்குத் தெரி
யுமென்று உபவாசித்து அழுதுகொண்
23 டேன்.— அது மரித்திருக்கிற இப்போ
து நான் உபவாசிப்பதென்ன? இனி நா

ன் அவனைத் திரும்பி வரப் பண்ணக் கூடு
மோ? நான் அவனண்டைக்குப் போவே
னேயல்லாமல் அவன் என்னண்டைக்குத்
திரும்பி வரப்போகிறதில்லையென்றான்:

பிறகு தாவீது தன் பெண்சாதியான 24
பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவ
ளண்டைக்குப் போய், அவளோடே சய
னித்தான். அவள் ஒரு குமாரனைப் பெ
ற்றாள். அவனுக்குச் சாலொமோனென்
று பேரிட்டான்: அவனை யெகோவா சி
நேகித்தார்:—அவனைத் தீர்க்கதரிசியாகி 25
ய நாத்தான் வசமாய் விட்டான். இவனை
யெகோவாவின் நிமித்தம் அவனுக்கு யதி
தியாவென்று பேரிட்டான்.

இரப்பா பட்டினத்தைப் பிடித்தது.

அதற்குள்ளே யோவாப் அம்மோன் பு 26
த்திரருடைய இரப்பா பட்டணத்தின்
மேலே யுத்தம்பண்ணி, இராசதானியைப்
பிடித்துத், தாவீதண்டைக்கு ஆளனுப் 27
பி, நான் இரப்பாவின்மேல் யுத்தம்பண்
ணித், தண்ணீர் ஓரமான பட்டணத்தை
ப் பிடித்துய் இருக்கிறேன். இப்போது 28

நீ நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால்,
என் பேர் விளங்காதபடிக்கு நீர் மற்றச் ச
னத்தைக் கூட்டிக்கொண்டு வந்து பட்ட
ணத்தை முத்திக்கை போட்டுப் பிடியுமெ
29 ன்று சொல்லச்சொன்னான்.-அப்படியே
தாவீது சனத்தை எல்லாங் கூட்டிக்கொ
ண்டு, இரப்பாவுக்குப் போய், அதின்மே
30 ல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து.-அவ
ர்களுடைய இராசாவுடைய தலையின் மே
ல் இருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டா
ன். அது ஒரு தாலந்து பொன் நிறையும்
இரத்தினங்கள் பதித்ததுமாய் இருந்தது,
அது தாவீதுடைய தலையில் வைக்கப்பட்
டது. பட்டணத்தின் கொள்ளையை மகா
விஸ்தாரமுமாய் அதில் இருந்துகொண்டு
31 போனான்.-ஆனாலும் அதில் இருந்த சன
த்தை அவன் வெளியே கொண்டுபோய்,
அவர்களை வாளறுக்கிற வேலைக்கும் இரு
ப்புப்பாறைகளின் வேலைக்கும் இருப்புக்
கோடாலிகளின் வேலைக்கும் வைத்து அ
வர்களை மோளேகின் சூளையையுங் கட
க்கப் பண்ணினான். இப்படி அம்மோன்
புத்திரரின் பட்டணங்களுக்கு எல்லாஞ்

செய்து, தாவீது எல்லாச் சனத்தோடு
ம் எருசலேமுக்குத் திரும்பினான்.

௰௩. அதிகாரம்.

அம்னோன் முறைகேடான காரியஞ்செய்து
அப்சலோமினாற் கொலைசெய்யப்பட்டது.

அதற்குப் பிறகு சம்பவித்ததேதெ 1
னில் தாவீதின் குமாரனாகிய அப்சலோ
முக்குத் தாமார் என்று பேருள்ள சவுந்
தரியமுள்ள சகோதரி இருந்தாள். அவள்
பேரிலே தாவீதின் குமாரன் அம்னோ
ன் இச்சை வைத்துத்,—தன் சகோதரி 2
யாகிய தாமாரின் நிமித்தம் வியாதி அடை
யத்தக்கவனாய் ஏக்கமெடுத்தான். ஏ
னெனில் அவள் கன்னியாஸ்திரியாய் இ
ருந்தாள். அவளுக்கு ஒரு பொல்லாங்கு
செய்ய அம்னோனின் பார்வைக்கு வருத்
தமாய் இருந்தது.—ஆனாலும் அம்னோ 3
னுக்குத் தாவீதுடைய அண்ணன் சிமே
யாவின் குமாரனாகிய யோனதாபென்று
பேருள்ள ஒரு சினேகிதன் இருந்தான்.
அந்த யோனதா வெகு தந்திரவாதியாய்

4 இருந்தான்.—இவன் அவனோடே, இராச
குமாரனாகிய நீ நாளுக்கு நாள் எதினாலே
இப்படி இளைத்துப் போகிறாய்? எனக்கு
அறிவியாயோவென்றான். அம்னோன் அவ
னோடே, என் சகோதரன் அப்சலோமின்
சகோதரியாகிய தாமாரின் மேல் நான் ஆ
5 சை வைத்திருக்கிறேனென்றான்.—அப்
போது யோனதாப் அவனுடனே, நீ வி
யாதிக்காரனைப்போல, உன் படுக்கையின்
மேலே படுத்துக்கொள். உனைப் பார்
க்கிறதற்கு உன் தகப்பன் வரும் பொழு
து, நீ அவருடனே, என் சகோதரியாகிய
தாமார் வந்து என்னைப் போசனம் புசிக்
கப்பண்ணி நான் பார்த்து அவள் கையி
னாலே சாப்பிடும்படிக்கு, என் கண்களுக்
கு முன்பாகப் போசனத்தைச் சமைக்க
6 ட்டுமேயென்று சொல்லென்றான்.—அப்
படியே அம்னோன் வியாதிக்காரனைப்
போலப் படுத்துக்கொண்டு, இராசா த
ன்னைப் பார்க்க வந்தபோது இராசாவுட
னே, என் சகோதரியாகிய தாமார் வந்து
நான் அவள் கையினாலே சாப்பிடும்படிக்
கு என் கண்களுக்கு முன்பாக இரண்டு

நல்லபண்ணிகாரங்களைப் பண்ணட்டுமெ
யென்றான்.-அப்போது தாவீது தாமாரி 7
ண்டையில் வீட்டிற்குள் ஆளனுப்பி, நீ உ
ன் சகோதரனாகிய அம்னோன் வீட்டுக்கு
ப் போய், அவனுக்கு ஒரு சமையற்பண்
ணென்று சொல்லச் சொன்னான்.—தா 8
மார் தன் சகோதரனாகிய அம்னோன் படு
த்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போ
ய், மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்
களுக்கு முன்பாகத் தட்டிப் பண்ணிகார
ங்களைச் சுட்டு,—சட்டியை எடுத்து அவ 9
னுக்கு முன்பாக அவைகளை வைத்தாள்.
ஆனாலும் அவன் சாப்பிட மாட்டேனெ
ன்றான். பின்பு அம்னோன் எல்லாரையும்
என்னை விட்டு வெளியே போகப் பண்
ணுங்களென்றான். எல்லாரும் அவனை விட்
டு வெளியே போனார்கள்.-அப்போது அ 10
ம்னோன் தாமாரிடனே நான் உன் கையி
னாலே சாப்பிடும்படிக்கு அந்தப் போச
னத்தை அறைவீட்டிலே கொண்டுவாவெ
ன்றான். அப்படியே தாமார் தான் செ
ய்த பண்ணிகாரங்களை அறைவீட்டில் இ
ருக்கிற தன் சகோதரனாகிய அம்னோனு

11 குக்கொண்டுபோனாள்.-ஆனாலும் அவன்
சாப்பிடும்படிக்கு அவள் அவைகளைச் சே
ர்க்கக்கொண்டுவருகையில், அவன் அவளை
ப் பிடித்து அவளுடனே, என் சகோதரி
யே, நீ வந்து என்னோடே சயனியென்
12 றான்.—அவள் அவனோடே சொன்னதா
வது, அப்படி அல்ல என் சகோதரனே!
என்னைக் கற்பழியாதே! இஸ்ரவேலிலே
அப்படிச் செய்யப்பட ஒண்ணாது. இப்
படிக்கொத்த மதிகேடான காரியத்தைச்
13 செய்யாயாக.-மற்றப்படி நான் என் வெ
ட்கத்தோடே எங்கே போவேன்? நீயும்
இஸ்ரவேலிலே மதிகெட்டவர்களில் ஒருவ
னைப்போல் இருப்பாய். இப்போதும் நீ
இராசாவோடே பேசு, அவர் என்னை உன்
பேச்சுக்குத் தடைபண்ணுவதில்லையெ
14 ன்றாள்.—அவனோ அவள் சொற் கேட்க
மாட்டோமென்று அவளைப் பலபந்தமா
ய்ப் பிடித்து, அவளோடே சயனித்து அ
15 வளைக் கற்பழித்தான்.—பிறகு அம்னோ
ன் அவளை மகா பெரிய பகையாய்ப் பகை
த்தான். அதேதென்றால், அவன் அவளைச்
சினேகித்த சினேகத்தைப் பார்க்கிலும்

அவளைப் பகைக்கிற பகை பெரிதாய்
இருந்தது. ஆகையால் நீ எழுந்துபோ
வென்று அம்னோன் அவளோடே சொ
ன்னான்.—அப்போது அவள் அவனுட 16
னே, நீ எனக்குச் செய்த அந்தப் பொ
ல்லாங்கைப் பார்க்கிலும் நீ என்னைத் த
ள்ளிவிடுகிற இந்தப் பொல்லாங்கு பின்
னையும் அதிகமாய் இருக்கின்றதென்றா
ள். ஆனாலும் அவன் அவளைக் கேட்க ம
னதில்லாமல்,—தன்னைச் சேவிக்கிற தன் 17
வேலைக்காரனைக் கூப்பிட்டு, நீ இவளை
என்னை விட்டு வெளியே துரத்தி, அவள்
போனபின் கதவைப் பூட்டென்றான்.— 18
அவள் பலவர்ன்னமான வஸ்திரத்தை உ
டுத்துக்கொண்டிருந்தாள். ஏனெனில் இ
ராசாவின் குமாரத்திகளாகிய கன்னியா
ஸ்திரிகள் இப்படிக்கொத்த சால்வைக
ளைத் தரித்துக்கொள்ளுவார்கள். அப்
படியே அவனைச் சேவிக்கிறவன் அவளை
வெளியே துரத்தி, அவள் போனபின் க
தவைப் பூட்டினான்.—அப்போது தாமா 19
ர் தன் தலையின் மேற் சாம்பலை வாரிப்
போட்டுக்கொண்டு, தான் தரித்த பலவர்

ன்னமான வஸ்திரத்தைக் கிழித்துத், தன்
கையைத் தன் தலையின்மேல் வைத்துக்
20 கூப்பிட்டுக்கொண்டே நடந்தாள்.—அ
ப்போது அவள் சகோதரனாகிய அப்ச
லோம் அவளுடனே, உன் சகோதரனா
கிய அம்னோன் உன்னோடிருந்தானோ?
இப்போதும் என் சகோதரியே, மவுன
மாய் இரு. அவன் உன்னுடைய சகோதர
ன், இந்தக் காரியத்தை உன் மனதிலே வை
யாயாகவென்றான். அப்படியே தாமார்
தன் சகோதரனாகிய அப்சலோமின் வீ
21 ட்டில் ஒண்டியாய் இருந்தாள்.—தாவீது
இராசா இந்தச் செய்திகளை எல்லாங் கே
ட்ட போது, வெகு கோபமாய் எரிந்
22 தான்.— அப்சலோம் அம்னோனோடே
நன்மையாகிலுந் தீமையாகிலும் பேசி
னதில்லை. ஏனெனில் தன் சகோதரியாகி
ய தாமாரை அம்னோன் கற்பழித்த கா
ரியத்தின் நிமித்தம் அப்சலோம் அவ
23 னைப் பகைத்தான்.—இரண்டு வருஷஞ்
சென்ற போது அப்சலோம் எப்பிராயீ
முக்குச் சமீபமான பாலாத்சோரிலே ஆ
டுகளை மயிர்க்கத்திரிக்கிறவர்களை வைத்

திருந்து இராசாவின் குமாரரை எல்
லாம் விருந்துக்கு அழைத்தான்.—அவன் 24
இராசாவண்டைக்குப் போய், இதோ ஆ
டுகளை மயிர்க்கத்திரிக்கிறவர்களை அடியே
ன் வைத்திருக்கிறேன். இராசாவும் அவ
ருடைய ஊழியக்காரரும் உமதடியாளோ
டே வர வேண்டிக்கொள்ளுகிறேன் எ
ன்றான்.— இராசா அப்சலோமோடே, 25
அப்படி வேண்டாம், என் மகனே! உனக்
குப் பாரமாயிராதபடிக்கு நாங்கள் எல்
லாரும் வராமலிருப்போமாகவென்றான்.
அவனை வருந்திக்கொண்டாலும், அவன்
போக மனதில்லாமல் அவனை ஆசீர்வ
தித்தான்.—அப்போது அப்சலோம் இ 26
ல்லாவிட்டால் என் சகோதரனாகிய அ
ம்னோன் எங்களோடே வரட்டுமென்
றதற்கு இராசா அவனுடனே, அவ
ன் உன்னோடே வர வேண்டியதென்ன
வென்றான்!— பின்னையும் அப்சலோம் 27
அவனை வருந்திக்கொண்டபடியினாலே, அ
வன் அம்னோனையும் இராசாவின் குமா
ரர் அனைவரையும் அவனோடே போக
விட்டான்.— ஆனாலும் அப்சலோந் தன் 28

வேலைக்காரருக்குக் கற்பித்துச் சொன்ன
து, நன்றாய்ப் பாருங்கள். அம்னோன் திரா
ட்சப் பழ இரசத்தினால் சந்தோஷமா
யி இருக்க நான் உங்களுடனே, அம்
னோனை அடித்துக் கொல்லுங்களென்று
சொல்லும் போது, நீங்கள் பயப்ப
டாமல் அவனைக் கொன்றுபோடுங்கள்.
நான் அல்லோ அந்த உங்களுக்குக் க
ற்பிக்கிறவன், திடனான சேவகராய் இருங்
29 களென்று சொல்லியிருந்தான். — அப்
சலோங் கற்பித்தபடியே அப்சலோமின்
வேலைக்காரர் அம்னோனுக்குச் செய்தா
ர்கள். அப்போது இராசாவின் குமாரர்
எல்லாரும் எழுந்திருந்து அவரவர் தன்
தன் கோவேறு கழுதையின் மேல்
30 ஏறி ஓடிப்போனார்கள். — அவர்கள் வ
ழியில் இருக்கிற போது, அப்சலோ
ம் இராசாவின் குமாரரை எல்லாம்
அடித்துக் கொன்றான். அவர்களில் ஒ
ருவனும் மீதியானதில்லை என்கிறதாய்த்
31 தாவீதுக்குச் செய்தி வந்தது. — அப்
போது இராசா எழுந்திருந்து, தன் வ
ஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தரை

யிலே விழுந்து கிடந்தான். அவன் ஊழியக்காரர் எல்லாருந் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நின்றார்கள்.— 32
ஆனாலுந் தாவீதின் அண்ணனாகிய சீமேயாவின் குமாரன் யோனதாப் மறுவுத்தரவுகொடுத்துச் சொன்னதாவது, இராசாவின் குமாரரான வாலிபரை எல்லாருங் கொன்றுபோட்டார்களென்று என் ஆண்டவன் நினைக்க வேண்டாம். அம்னோன் மாத்திரஞ் செத்துப்போனான். ஏனெனில் இவன் அவன் சகோதரியாகிய தாமாரைக் கற்பழித்த நாள் முதற்கொண்டு, அது அப்சலோமின் நெஞ்சில் இருந்தது.—இப்போதும் இராசாவி 33
ன் குமாரர்கள் எல்லாருஞ் செத்தார்களென்ற பேச்சை இராசாவாகிய என் ஆண்டவன் தம்முடைய மனதிலே வைக்க வேண்டாம். ஏனென்றால் அம்னோன் ஒருவனே செத்தானென்றான்.—அப்ச 34
லோம் ஓடிப்போனான். சாமக்காரச் சேவகன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறபோது, இதோ அநேகஞ் சனம் அவனை விட்டு வருகிற வழியாகிய் மலையின்

மறைவில் இருந்துவருகிறதைக் கண்டான்.
35 —அப்போது யோனதாப் இராசாவுட
னே, இதோ இராசாவின் குமாரர் வருகிறா
ர்கள். உமதடியான் சொன்னபடியே ஆ
36 யிற்றென்றான்.—அவன் பேசி முடிந்த
போது, இதோ இராசாவின் குமாரர்
வந்து சத்தமிட்டு அழுதார்கள். இரா
சாவும் அவனுடைய எல்லா ஊழியக்கா
ரரும் மகா பெரிய புலம்பலாய் அழுதா
ர்கள்.
37 அப்சலோமோ, அம்மியூரின் குமா
ரனாகிய தல்மாய் என்ற கேசூரின் இரா
சா அண்டைக்கு ஓடிப் போனான். ஆ
னாலுந் தாவீது அந்த எல்லா நாளுந்
தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொ
38 ண்டிருந்தான்.— அப்சலோங் கேசூருக்
கு ஓடிப்போய் அங்கே மூன்று வருஷ
39 ம் இருந்தான்.— தாவீது இராசா அம்
னோன் செத்தபடியினாலே அவனுக்கா
கத் துக்கித்துத் தேறிக்கொண்ட போ
தோ, அப்சலோமைப் பின்றொடரும் நி
னைவை விட்டுவிட்டான்.

௰௪. அதிகாரம்.

அப்சலோம் தன் தகப்பனோடே ஒப்புரவாக்கப்பட்டது.

இராசாவின் இருதயம் அப்சலோமின் 1
மேல் இன்னந் தாங்கலாய் இருக்கிறதை
ச் செருயாவின் குமாரன் யோவாப் அறி
ந்தபடியினாலே,—அவன் தெக்கோவாவி 2
ல் இருக்கிற ஞானமுள்ள ஒரு ஸ்திரீயை
அழைத்தனுப்பி, அவளோடே சொன்ன
தாவது, நீ இழவு கொண்டாடுகிறவளைப்
போலத் துக்க வஸ்திரங்களை உடுத்திக்
கொண்டு, எண்ணெய் பூசிக்கொள்ளாம
ல் செத்துப் போனவனுக்காக அநேக
நாளாய்த் துக்கித்திருக்கிற பெண்சாதி
யைப் போலக் காண்பித்து,— இரா 3
சாவண்டைக்குப் பிரவேசித்து, அவ
ரோடே இன்னின்ன பிரகாரமாகப் பே
சென்று அவள் சொல்ல வேண்டிய வா
ர்த்தைகளை யோவாப் அவள் வாயிலே
போட்டான்.—அப்படியே தெக்கோவா 4
ஊராளான அந்த ஸ்திரீ இராசாவோடே

பேசப் போய்த் தரையிலே முகங்குப்பு
ற விழுந்து வணங்கி, இராசாவே, இரட்
5 சியுமென்றாள்.—இராசா அவளுடனே,
உனக்கு என்ன வேண்டுமென்றதற்கு
அவள் சொன்னதாவது, ஆ! நான் வித
வையான பெண்சாதி. ஏனென்றால் என்
6 புருஷன் செத்துப்போனான்.—ஆனாலும்
உமதடியாளுக்கு இரண்டு குமாரர் இருந்
தார்கள். அவர்கள் இருவரும் வெளியி
லே சண்டைபண்ணி, அவர்களை விலக்க
ஒருவரும் இல்லாதபடியினாலே, ஒருவன்
மற்றவனை அடித்துக்கொன்றுபோட்டா
7 ன்.—ஆகையால் இதோ, வமிசம் எல்லாம்
உமதடியாள் மேல் எழும்பித் தன் சகோ
தரனைக் கொன்றுபோட்டவனை அவன்
கொன்ற அவன் சகோதரனுடைய பிரா
ணனுக்காக நாங்கள் கொன்றுபோட்டு,
அந்தச் சுதந்தரவாளனாகிய அவனையும் அ
ழித்துப் போடும்படிக்கு அவனை ஒப்பு
வியென்று சொல்லி, என் புருஷனுக்குப்
பூமியின்மேலே பேரும் மீதியும் வைக்கப்
படாதபடிக்கு எனக்கு இன்னம் இருக்கிற
பொறியையும் விற்றுப்போட மனதா

ய் இருக்கிறார்களென்றாள்.- அப்போது இ 8
ராசா அந்த ஸ்திரியோடே, நீ உன் வீட்
டுக்குப் போ. நான் உனக்காகக் கட்டளை
பண்ணுவேனென்றான்.—பின்னையும் அ 9
ந்தத் தெக்கோபாவூர் ஸ்திரி இராசாவு
டனே, இராசாவாகிய என் ஆண்டவனே,
இராசாவின் மேலும் அவர் ஆசனத்தின்
மேலுங் குற்றமில்லாதபடிக்கு, அந்தப்
பழி என் மேலும் என் தகப்பன் வீட்டி
ன் மேலுஞ் சுமரக் கடவதென்றாள்.—அ 10
தற்கு இராசா உனக்கு விரோதமாய்ப்
பேசுகிறவனை என்னண்டைக்கு அழைத்
து வா. அப்போது அவன் இனி உன்னை
த் தொடாதிருப்பானென்றான்.—பின் 11
னையும் அவள் இரத்தப்பழி வாங்குகிறவர்
கள் அழிம்பு செய்து என் குமாரனை அ
தம்பண்ணைப் பெருகிப்போகாதபடிக்
கு இராசாவானவர் தம்முடைய தேவ
னாகிய யெகோவாவை நினைப்பாராகவெ
ன்றாள். அதற்கு இராசா உன் குமாரனு
டைய மயிரில் ஒன்றுந் தரையில் விழுவ
தில்லையென்று யெகோவாவின் சீவனைக்
கொண்டு சொல்லுகிறேனென்றான். —

12 அப்போது அந்த ஸ்திரீ இராசாவாகிய
என் ஆண்டவனோடே உமதடியாள் ஒ
ரு வார்த்தையைச் சொல்லட்டுமேயெ
13 ன்றாள். அவன் சொல்லென்றதற்கு — அ
ந்த ஸ்திரீ சொன்னதாவது, பின்னை எ
ன் தேவனுடைய சனத்திற்கு விரோதமா
ய் அப்படிக்கொத்த நினைவை வைத்திரு
க்கிறீர்! துரத்துண்ட தம்முடையவனை
இராசா திரும்ப அழைத்தாலொழிய இ
ராசா இப்போது சொன்ன வார்த்தையி
னாலே குற்றமுள்ளவரைப்போல் இருக்
14 கிறீர். — ஏனென்றால் மரிக்கவே மரித்து
த் திரும்பச் சேராதபடிக்குத் தரையி
லே கவருகிற தண்ணீரைப்போல் இரு
க்கிறோம். தேவனோ சீவனை எடுத்துக்
கொள்ளாமல், துரத்துண்டவன் அப்பு
றந் தம்மை விட்டு விலக்கப்படாதிருக்
15 கும் நினைவுகளை நினைக்கிறார். — இப்போ
தும் நான் என் ஆண்டவனாகிய இராசா
வோடே இந்த வார்த்தையைப் பேச எ
ன்னத்தினாலே வந்தேனென்றால், சனம்
எனக்குப் பயமுண்டாக்கினதினாலே தா
னே. ஆகையால்நான்இராசாவோடேபே

க்கேக்கூக், ஒருவேளை இராசா தம்தடியா
ளுடைய வார்த்தையின்படி செய்வாரெ
ன்று உம்தடியாளாகிய நான் சொன்னே
ன்.—ஏனெனில் என்னையும் என் குமா 16
ரனையும் ஏகமாய்த் தேவனுடைய சுதந்
திரத்துக்குப் புறம்பாக்கி அழிக்க நினை
க்கிற மனுஷனுடைய கைக்குத் தமது
அடியாளை நீங்கலாக்கி விடும்படிக்கு இ
ராசா கேட்பார்.—இராசாவாகிய என் ஆ 17
ண்டவனுடைய வார்த்தை எனக்கா று
தலாய் இருக்குமென்று உம்து அடியா
ளாகிய நான் எண்ணினேன். ஏனெனில்
நன்மையையுந் தீமையையுங் கேட்கத்த
க்கதாக இராசாவாகிய என் ஆண்டவன்
தேவனுடைய தூதனைப் போல இருக்கி
றார். இதற்காக உம்முடைய தேவனாகிய
யெகோவா உம்மோடே கூட இருக்கிறா
ரென்றாள்.—அப்போது இராசா அந்த 18
ஸ்திரீக்குப் பிரத்தியுத்தரமாக, நான்
உன்னைக் கேட்குங் காரியத்தை எனக்கு
மறையாயாகவென்றதற்கு, அந்த ஸ்திரீ
இராசாவாகிய என் ஆண்டவர் சொல்வா
ராகவென்றாள்.—அப்போது இராசா இ 19

திலெல்லாம் யோவாபின் கை உன்னோடி
ருக்கின்றதோவென்று கேட்டான். அதற்
கு ஸ்திரீ பிரத்தியுத்தரமாகச் சொன்ன
து, இராசாவாகிய என் ஆண்டவன் சொன்
ன படி எல்லாம் இருக்கின்றது. வலது ப
க்கத்திலும் இடது பக்கத்திலும் இதிலே
யேவொருவர் இல்லையென்று இராசாவா
கிய என் ஆண்டவனுடைய ஜீவனைக் கொ
ண்டு சொல்லுகிறேன். அதேதென்றால்
உமதடியானாகிய யோவாப்தானே இதை
எனக்குக் கற்பித்து, அவனே இந்த எல்
லா வார்த்தைகளையும் உமதடியாளின் வா
20 யிலே போட்டான்.- நான் இந்தக் காரிய
த்தின் ரூபை இப்படி மாற்றுகிறதற்கு உ
மதடியானாகிய யோவாப் அதற்குக் கார
ணமாயி இருந்தான். ஆனாலும் தேசத்தின்
நடக்கிறதைத் எல்லாம் அறிய என் ஆண்
டவனுடைய ஞானந் தேவனுடைய தூ
தனின் ஞானத்தைப் போலே இருக்கின்ற
21 தென்றான்.—அப்போது இராசா யோ
வாபுடனே, இதோ இந்தக் காரியத்தைச்
செய்கிறேன். நீ போய் வாலிபனாகிய அ
ப்சலோமைத் திரும்ப அழைத்து வாவெ

ன்றான்.—அப்போது யோவாப் தரை 22
யிலே முகங் குப்புற விழுந்து வணங்
கி, இராசாவை உபசரணைபண்ணி இரா
சா தமதடியானுடைய வார்த்தையின்ப
டி செய்ததினாலே, என் ஆண்டவனாகிய
இராசாவின் கண்களில் எனக்குத் தயவு
கிடைத்ததென்கிறது இன்று உமதடியா
னுக்குத் தெரிய வந்ததென்றான்.—பிற 23
கு யோவாப் எழுந்து கேசூருக்குப் போ
ய், அப்சலோமை எருசலேமுக்கு அழை
த்து வந்தான்.—இராசாவோ அவன் த 24
ன் வீட்டுக்குத் திரும்பிக்கொள்ளக் கடவ
ன், என் முகத்தை அவன் பார்ப்பதில்லை
என்றான். அப்படியே அப்சலோந் தன்
வீட்டுக்குத் திரும்பிக்கொண்டு இராசாவி
ன் முகத்தைப் பார்க்கவில்லை.

ஆனாலும் இஸ்ரவேல் அனைத்திலும் அ 25
ப்சலோமைப் போல் ஒத்த சவுந்தரியமு
ள்ளவனும் மிகவும் மெச்சிக்கொள்ளப்
பட்டவனுமான மனுஷன் இருக்கவில்லை.
அவன் உள்ளங்கால் துவக்கி, உச்சந்தலை ம
ட்டும், அவனில் ஒரு மறுவும் இல்லாதிரு
ந்தது.—அவன் தன் தலையின் மயிரை அ 26

து தனக்குப் பாரமாய் இருக்கிறதென்
று வருஷாந்தரஞ் சிரைத்துக்கொள்வா
ன். சிரைக்கும்போது அவன் தலைமயி
ர் இராசாவுடைய நிறையின்படி இருநூ
27 று சேக்கல் நிறையாய் இருக்கும்.—அப்
சலோமுக்கு மூன்று குமாரருந் தாமா
ரென்று பேர்கொண்ட ஒரு குமார
த்தியும் பிறந்திருந்தார்கள். இவள் ரூபவ
தியான பெண்ணாய் இருந்தாள்.
28 அப்சலோம் இராசாவின் முகத்தைக்
காணாமல், இரண்டு வருஷமாய் எருசலே
29 மிலே குடியிருந்தான்.—ஆகையால் அ
ப்சலோம் யோவாபை இராசாவண்டை
க்கு அழைத்து அனுப்பினான். அவனோ
அவனண்டைக்கு வர மாட்டேனென்றா
ன். இரண்டாம் விசையும் அவன் அழைத்
தனுப்பினாலும், வர மாட்டேனென்றான்.
30 —அப்போது அவன் தன் வேலைக்கார
ரோடே, இதோ என் நிலத்திற்கு அருகான
யோவாபின் நிலம். அதிலே அவனுக்கு
வாற்கோதும்பை விளைந்திருக்கின்றது.
நீங்கள் போய், அதை அக்கினியாற் கொ
ளுத்திப்போடுங்களென்றான். அப்படியே

அப்சலோமின் வேலைக்காரர் அந்த நில
த்தை அக்கினியாற் கொளுத்திப்போட்
டார்கள்.—அப்போது யோவாப் எழு 31
ந்திருந்து, அப்சலோமண்டைக்கு வீட்டு
க்குட் போய், எனக்கு இருக்கிற நிலத்தை
உம்முடைய வேலைக்காரர் அக்கினியாலே
கொளுத்திப்போட்டதென்னவென்று அ
வனைக் கேட்டான்.—அப்சலோம் யோ 32
வாபோடே சொன்னதாவது, இதோ உ
ம்மை இராசாவண்டைக்கு அனுப்பி நா
ன் கெசூரில் இருந்து என்னத்திற்காக வ
ந்தேன்! நான் இன்னம் அங்கே இருந்தா
ல் தாவிலையென்று அவருக்குச் சொல்லு
ம்படிக்கு, உம்மை இங்கே வாருமென்று
அழைத்தனுப்பினேன். இப்போதும் நா
ன் இராசாவின் முகத்தைப் பார்க்கட்டும்,
அல்லவென்று என்மேற் குற்றம் இருந்தா
ல், அவர் என்னைக் கொல்லக் கடவரெ
ன்றான்.—யோவாப் இராசாவண்டைக்கு 33
ட் பிரவேசித்து, அதை அவனுக்கு அறிவி
த்தபோது, அப்சலோமை அழைப்பித்
தான். அப்போது அவன் இராசாவண்
டைக்குட் பிரவேசித்து, இராசாவுக்கு மு

ன்பாகத் தரையிலே முகங்குப்புறப் ப
ணிந்தான். அப்போது இராசா அப்ச
லோமை முத்திசெய்தான்.

௰௫. அதிகாரம்.

கலகம்பண்ணின தன் குமாரனாகிய அப்சலோமுக்
குத் தாவீது தப்பிக்கொண்டு ஓடிப்போனது.

1 இதற்குப் பிறகு சம்பவித்ததேதென்
றால் அப்சலோம் இரதங்களையுங் குதிரை
களையுந் தனக்கு முன் ஓடுகிற ஐம்பது
சேவகரையுந் தனக்குச் சம்பாதித்தான்.
2 —இதல்லாமல் அப்சலோங் காலமே எ
ழுந்திருந்து, வாசல் வழி ஓரத்திலே நி
ன்றுகொண்டு, எவனாகிலுந் தனக்கு இரு
க்கிற வழக்கின் நிமித்தம் இராசாவண்டை
க்கு நியாயத்திற்காக உட்பிரவேசிக்கப்
போனால், அவனை அவன் அழைத்து, நீ எ
ந்த ஊரானென்று கேட்பான். இவன் உம
தடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில்
ஒன்றுக்கு அடுத்த இன்ன ஊரானென்று
3 ல், —அப்போது அப்சலோம் அவனோடே, இதோ, உன் காரியங்கள் நன்மையு

ஞ் செம்மையுமானவைகள்தான். ஆனா
லும் இராசாவிடத்திலே உனக்குக் கே
ள்விகொடுப்பாரில்லை என்பான்.— பின் 4
னையும் அப்சலோம், ஆ! வழக்குக் காரிய
ங்களுக்குண்டானவைகள் எல்லாரும் என்
அண்டைக்கு வந்து நான் அவர்களுக்கு
நியாயஞ் செய்யும்படிக்கு, என்னைத் தே
சத்திலே நியாயாதிபதியாக வைப்பவன்
ஆரென்பான்.- யாதொருவன் அவனை வ 5
ணங்கிக்கொள்ளச் சேரும் போது, அவ
ன் தன் கையை நீட்டி அவனைப் பிடித்து
முத்திசெய்வான்.—இந்தப் பிரகாரமாக 6
அப்சலோம் இராசாவண்டைக்கு நியாய
த்திற்காக வரும் இஸ்ரவேலுக்கெல்லாஞ்
செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இ
ருதயத்தைத் திருடிக்கொண்டான்.—நா 7
ற்பது வருஷமாகிற போதோ, அப்ச
லோம் இராசாவோடே சொன்னது, நான்
யெகோவாவுக்குப் பண்ணின என் பொ
ருத்தனையை எபிரோனிலே செலுத்தும்
படிக்கு, நான் போகட்டுமேன்.-ஏனெனி 8
ல், யெகோவா என்னை எருசலேமுக்குத் தி
ரும்பவே திரும்பப் பண்ணினால், யெகோ

வாவுக்கு ஆராதனை செய்வேனென்று உ
மதடியானாகிய நான் சூரிய தேசத்திற் கே
சூரிலே குடியிருக்கிற போது, பொருத்
9 தனைபண்ணினேனென்றான்.—இராசா அ
வடனுனே, சமாதானத்தோடனே போ
வென்றான். அப்போது அவன் எழுந்து
10 எபிரோனுக்குப் போனான்.—ஆனாலும்
அப்சலோம் இஸ்ரவேல்கோத்திரங்களில்
எல்லாம் வேவாட்களை அனுப்பி, நீங்கள்
எக்காளத் தொனியைக் கேட்கும் போ
து, அப்சலோம் எபிரோனிலே இராசா
வானானென்று சொல்லுவீர்களாகவென்
11 று சொல்லச் சொல்லியிருந்தான்.— அ
ப்சலோமோடே எருசலேமில் இருந்
து இருநூறுபேரும் அழைக்கப்பட்டுப்
போனார்கள். ஆனாலும் அவர்கள் ஒன்றும்
அறியாமல் தங்கள் உத்தம குணத்தோ
12 டே போனார்கள்.—அப்சலோம் பலிக
ளைச் செலுத்துகையில், தாவீதின் ஆலோ
சனைக்காரனாகிய அகித்தோப்பேல் என்
ற கிலோனியனையும் அவன் ஊராகிய கி
லோவில் இருந்து வரவழைப்பித்தான்.
அப்படியே ஒப்பந்தம் பலத்துச் சனம்

அப்சலோமண்டைக்குத் திரளாய் வந்து
கூடிற்று.

அதை அறிவிக்கிற ஒருவன் தாவீதண் 13
டைக்கு வந்து, இஸ்ரவேலில் அவரவரு
டைய இருதயம் அப்சலோமைப் பின்
பற்றிப்போகின்றதென்றான்.—அப்போ 14
து தாவீது எருசலேமிலே தன்னோடே
இருக்கிற தன்னுடைய எல்லா ஊழிய
க்காரரோடும் எழுந்து, ஓடிப்போவோ
மாக. மற்றப்படி நாம் அப்சலோமுக்கு
த் தப்ப இடம் இல்லை. அவன் தீவிரித்து
நம்மைச் சேர்ந்து பிடித்து, நம்முடை
ய மேலே பொல்லாங்கை வரப்பண்ணிப்
பட்டணத்தைப் பட்டயக் கருக்கினா
ல் அடியாத படிக்குப் போகத் தீவிரம்
பண்ணுங்கள் என்றான்.—இராசாவின் ஊ 15
ழியக்காரர் இராசாவுடனே, இதோ இ
ராசாவாகிய எங்கள் ஆண்டவன் தெரிந்
துகொள்ளுங் காரியத்திற்கெல்லாம் உம
தடியாராகிய நாங்கள் ஆயத்தமாய் இரு
க்கிறோமென்றார்கள்.—அப்படியே இ 16
ராசாவும் அவனுடைய எல்லா வீட்டாரு
ம் கால் நடையாய்ப் புறப்பட்டார்கள்.

ஆனாலும் வீட்டைக் காக்க இராசா வை
ப்பாட்டிகளாகிய பத்து ஸ்திரிகளைப் பி
17 ன் வைத்தான்.—இராசாவும் எல்லாச் ச
னமுங் கால் நடையாய்ப் புறப்பட்டுப்
போய்த் தூரமான ஒரு இடத்திலே தரி
18 த்திருந்தார்கள்.— அவனுடைய எல்லா
ஊழியக்காரரும் எல்லாக் கிரேத்தியரும்
எல்லாப் பிலேத்தியரும் அவன் பக்கத்தி
லே நடந்து போனார்கள். காத்தூரில் இ
ருந்து கால் நடையாய் வந்திருந்த அறுநூ
று பேராகிய எல்லாக் கேத்தியரும் இரா
19 சாவுக்கு முன்பாக நடந்தார்கள்.— அப்
போது இராசா கேத்தியனாகிய ஈத்தாயு
டனே சொன்னதாவது, நீயும் எங்களு
டனே வருவானேன்? நீ திரும்பிப்போ
ய், இராசாவுடனே இரு. ஏனெனில் நீ
மறு தேசத்தான், நீ உன் தானத்திற்கு
20 த் திரும்பப் போவாயே,— நீ நேற்
றே வந்தாய், இன்று நான் உன்னை எங்
களோடே நடக்கும்படிக்கு அலைத்
துப் போவேனோ! நானோ போகக் கூ
டிய இடத்திற்குப் போகிறேன், நீ திரு
ம்பி உன்னோடே உன் சகோதரரையுந்

திரும்ப அழைத்துக்கொண்டு போ. கி
ருபையும் உண்மையும் உன் மேல் இரு
ப்பதாகவென்றான்.-ஆனாலும் இத்தாய் 21
இராசாவுக்குப் பிரத்தியுத்தாரமாக, இரா
சாவாகிய என் ஆண்டவன் எங்கே இரு
ப்பாரோ அங்கே உமதடியானுஞ் சாவுக்
கும் பிழைப்புக்கும் இருப்பானென்று
யெகோவாவுடைய சீவனையும்இராசாவாகி
ய என் ஆண்டவனுடைய சீவனையுங்கொ
ண்டு சொல்லுகிறேனென்றான்.—அப் 22
போது தாவீது இத்தாயுடனே, நடந்
துபோவென்றான். அப்படியே கேத்
தியனாகிய இத்தாயும் அவனுடைய எ
ல்லா மனுஷரும் அவனோடிருக்கிற எல்
லாப் பிள்ளைகளும் நடந்துபோனார்கள்.
-ஆனாலும் சனம் எல்லாம் நடந்துபோகி 23
ற போது, தேசத்தார் எல்லாரும் மகா
சத்தமாய் அழுதார்கள். இராசா கீதரோ
ன் ஆற்றைக் கடந்தான். சனம் எல்லாம்
வனாந்தரத்திற்குப் போகிற வழியே ந
டந்துபோனார்கள்—இதோ, சாதோக்கு 24
தேவனுடைய உடம்படிக்கையின் பெ
ட்டியைச் சுமக்கிற அவனோடே இரு

க்கிற எல்லா இலேவியரும் வந்து தேவ
னுடைய பெட்டியை அங்கே வைத்தா
ர்கள். சனம் எல்லாம் பட்டணத்தில் இ
ருந்து கடந்து தீருமட்டும் அப்பியத்தா
25 ர் பலியிட்டான்.—ஆனாலும் இராசா சா
தோக்குக்குச் சொன்னதாவது, தேவனு
டைய பெட்டியைப் பட்டணத்திற்குத் தி
ரும்பக் கொண்டுபோ. யெகோவாவுடை
ய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்
ததானால், நான் அதையும் அவர் வாசஸ்
தலத்தையும் பார்க்கிறதற்கு என்னைத் தி
26 ரும்ப வரப் பண்ணுவார்.- உன் மேல் ந
மக்குப் பிரியம் இல்லையென்றாரேயாகில்,
இதோ, இங்கே இருக்கிறேன், அவர் தம்
முடைய பார்வைக்கு நலமானபடி என
27 க்குச் செய்வாராக என்றான்.-பின்னையும்
இராசா ஆசாரியனாகிய சாதோக்கோடே
சொன்னது, நீ ஞானதிஷ்டியுள்ளவன் அ
ல்லவோ? நீ சமாதானத்தோடே பட்
டணத்திற்குத் திரும்பு. உங்கள் இரண்டு
குமாரராகிய உன் மகன் அகிமாசும் அ
ப்பியத்தாரின் மகன் யோனத்தானும் உ
28 ங்களோடே திரும்பிப் போகட்டும்.—இ

தோ, எனக்கு அறிவிக்கிறதற்கு உங்களிட
த்தில் இருந்து செய்தி வருமட்டும், நா
ன் வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்
திருப்பேனென்றான்.— அப்படியே சா 29
தோக்கும் அப்பியத்தாருந் தேவனுடை
ய பெட்டியை எருசலேமுக்குத் திரும்
பக் கொண்டுபோய் அங்கே இருந்தார்க
ள்.

தாவீது அழுகிறவனுமாய், முக்காடிட் 30
டவனுமாய், வெற்றுக் காலால் நடக்கிறவ
னுமாய் ஒலிவ மலையின் மேல் ஏறிக்கொ
ண்டே போனான். அவனோடிருக்கிற எல்
லாச் சனமும் அவரவர் முக்காடிட்டு அ
ழுகிறவர்களாய் உயர ஏறினார்கள்.— அகி 31
த்தோப்பேலும் அப்சலோமோடே ஒ
ப்பந்தம்பண்ணினவர்களில் ஒருவனென்
று தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட போது,
தாவீது, யெகோவாவே! அகித்தோப்பே
லின் ஆலோசனையைப் பயித்தியமாக்கிப்
போடுமேயென்றான்.— தாவீது மலையி 32
ன் உயர்த்தி மட்டும் வந்து, அங்கே தேவ
னைப் பணிந்துகொண்ட போது, சம்ப
வித்ததேதென்றால், இதோ, அற்கியனு

கிய ஊளசாய் தன் வஸ்திரத்தைக் கிழி
த்துக்கொண்டு, தன் தலையின் மேலே பு
ழுதியைப் போட்டுக்கொண்டவனாய் அ
33 வனுக்கு எதிர்ப்பட்டான்.—அவனோடே
தாவீது சொன்னதாவது, நீ என்னோ
டே நடந்துவந்தால், எனக்குப் பார
34 மாய் இருப்பாய்.—நீ பட்டணத்திற்கு
த் திரும்பிப் போய், அப்சலோமுக்கு இ
ராசாவே! உம்முடைய ஊழியக்காரனாய்
இருப்பேன், முதல் நான் உம்முடைய த
கப்பனுடைய ஊழியக்காரனாய் இருந்தே
ன், இப்போதோ நானும் உம்முடைய
ஊழியக்காரனென்றாயேயாகில், எனக்
காக அகித்தோப்பேலின் ஆலோசனையை
35 அபத்தமாக்குவாய்.—உன்னோடே அங்
கே சாதோக் அப்பியத்தார் என்ற ஆசா
ரியர் இருக்கிறார்கள் அல்லவோ? இராசா
வின் வீட்டிலே பிறக்கிற என்னென்ன
செய்தியைக் கேட்கிறாயோ அதை சா
தோக் அப்பியத்தார் என்ற ஆசாரியருக்கு
36 அறிவிப்பாய்.— இதோ அங்கே அவர்க
ளோடே அவர்கள் இரண்டு குமாரரா
கிய சாதோக்கின் மகன் அகிமாசும்

அப்பியத்தாரின் மகன் யோனத்தானு
ம் இருக்கிறார்கள். நீங்கள் கேட்கிறசெ
ய்தியை எல்லாம் அவர்கள் கையில் என
க்கு அனுப்புவீர்களாகவென்றான்.—அ 37
ப்படியே தாவீதின் சிநேகிதனாகிய ஊ
சாய் பட்டணத்திற்கு வந்தான். அப்ச
லோமும் எருசலேமுக்கு வந்தான்.

௰௬. அதிகாரம்.

சீபா மேவிபோசேத்தை அபதூறுபண்ணினது.

தாவீது மலைச் சிகரத்தில் இருந்து சற் 1
றப்புறம் நடந்து போனபோது, இதோ
மேவிபோசேத்தின் வேலைக்காரனாகிய சீ
பா பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழு
தைகளை ஒட்டிக்கொண்டு வந்து அவ
னைச் சந்தித்தான். அவைகளில் இருநூ
று அப்பங்களும் வற்றலான நூறு திரா
ட்சப் பழக் குலைகளும் வசந்த காலத்துப்
பலனான நூறு குலைகளும் ஒரு துருத்தி
த் திராட்சப் பழ இரசமும் இருந்த
து.—இராசா சீபாவை இவைகள் என்ன 2
த்திற்கென்று கேட்டதற்குச் சீபாவென்

றவன், கழுதைகள் இராசாவின் வீட்டா
ர் ஏறுகிறதற்கும், அப்பங்களும் பழங்
களும் வாலிபர் புசிக்கிறதற்குந் திராட்
சப் பழ இரசம் வனாந்தரத்தில் விடாய்
த்துப் போனவர்கள் குடிக்கிறதற்குந்
3 தானென்றான்.—அப்போது இராசா உ
ன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே
யென்று கேட்டதற்குச் சீபா இராசா
வுடனே, இதோ எருசலேமில் இருக்
கிறான். ஏனெனில் இன்று இஸ்ரவேல் வீ
ட்டார் என் தகப்பனுடைய இராச்சிய
த்தை என் வசமாய்த் திரும்பப் பண்
ணுவார்களென்றானென்று சொன்னான்.
4 —அப்போது இராசா சீபாவுக்கு இ
தோ மேவிபோசேத்திற்கு உண்டான
எல்லாம் உன்னுடையதாகக் கடவதெ
ன்றான். அதற்குச் சீபா, இராசாவாகிய
என் ஆண்டவனே! நான் பணிந்து கொ
ள்ளுகிறேன். உம்முடைய கண்களில் எ
னக்குத் தயவு கிடைக்கக்கட்டுமென்றான்.

சிமேயி தாவீதைத் தூஷணித்தது.

5 தாவீது இராசா பகூரிம் மட்டும் வந்த

போது, இதோ சவுல் வீட்டு வமிசத்தா
னாய் இருக்கிற கோராவின் குமாரனாகி
ய சீமேயியென்று பேருள்ள ஒரு மனு
ஷன் அங்கே இருந்து புறப்பட்டுத் தூ
ஷணித்துக்கொண்டே நடந்து வந்து,-
எல்லாச் சனமும் எல்லாப் பலசாலிகளும் 6
தாவீதின் வலது புறமாகவும் இடது புற
மாகவும் நடக்க, தாவீதின்மேலும், தா
வீது இராசாவுடைய எல்லா ஊழியக்
காரர் மேலுங் கல்லுகளை எறிந்தான்.—
சீமேயி அவனைத் தூஷணிக்கையிற் சொ 7
ன்ன வார்த்தைகளாவன, இரத்தப் பிரிய
னே, பேலியாளின் மனுஷனே, புறப்பட்
டுப் போ, புறப்பட்டுப் போ.-சவுலின் ஸ் 8
தலத்தில் இராசாவான உன்பேரிலே யெ
கோவா சவுல் வீட்டாரின் இரத்தப் பழி
யைத் திரும்பப் பண்ணினார். யெகோவா
இராச்சியபாரத்தை உன் குமாரனாகிய அ
ப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்.
இப்பவும் இதோ உன் நிற்பாக்கியத்தோ
டிருக்கிறாய். ஏனெனில் நீ இரத்தப்பிரி
யனான மனுஷனென்றான்.—அப்போது 9
செருயாவின் குமாரன் அபிசாய் இரா

சாவுடனே அந்தச் செத்த நாய் இராசா
வாகிய என் ஆண்டவனைத் தூஷிணிப்பா
னேன்? நான் போய் அவன் தலையை வா
10 ங்கட்டுமே என்றான்.— இராசாவோ செ
ருயாவின் குமாரரே! எனக்கும் உங்க
ளுக்கும் கவ்வை என்ன? அவன் என்னை
த் தூஷிணிக்கட்டும். ஏனெனில் தாவீ
தைத் தூஷிணியென்று யெகோவா அவ
னுக்குச் சொன்னார். ஆகையால் ஏன் இ
ப்படிச் செய்கிறாயென்று சொல்லத்தக்க
11 வன் ஆர் என்றான்.-பின்னையுந் தாவீது அ
பிசாயோடுந் தன்னுடைய எல்லா ஊழி
யக்காரரோடுஞ் சொன்னது, இதோ எ
ன் கருப்பப் பிறப்பான என்னுடைய
குமாரன் என் பிராணனை வாங்கத் தேடு
கிறானே. இந்த எமினியின் குமாரன் இப்
போது எத்தனை அதிகம்? அவன் தூஷி
ணிக்கட்டும். ஏனெனில் யெகோவா அ
12 வனுக்கு அப்படிச் சொன்னார்.—ஒரு
வேளை யெகோவா என் சிறுமையைப்
பார்த்து இந்த நாளில் நடந்த அவன் நி
ந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மை
13 யைச் சரிக்கட்டுவார் என்றான்.—அப்ப

டியே தாவீதும் அவன் மனுஷரும் வழி
யிலே நடந்துபோனார்கள். சீமேயியும் ம
லையின் பக்கத்திலே அவனுக்கு எதிராக ந
டந்து தூஷணித்து அவனுக்கு எதிராக
க் கல்லுகளை எறிந்து, மண்ணைத் தூற்
றிக்கொண்டே வந்தான்.-இராசாவும் அ 14
வனோடிருக்கிற எல்லாச் சனமும் விடா
யித்தவர்களாகத் தங்குமிடத்திலே சேர்
ந்து தேறினார்கள்.

அப்சலோம் எருசலேமுக்கு வந்துசெய்த கா
ரியம்.

அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷரா 15
கிய எல்லாச் சனமும் அவனோடே அ
கித்தோப்பேலும் எருசலேமுக்கு வந்
தார்கள்.— அற்கியனாகிய ஊசாய் எ 16
ன்ற தாவீதின் சினேகிதனே அப்ச
லோமண்டைக்கு வந்தபோது, ஊசா
யி அப்சலோமுடனே, இராசாவே!
வாழ்க. இராசாவே வாழ்கவென்றான்.—
அப்போது அப்சலோம் ஊசாயுடனே, 17
உன் சினேகிதன் மேல் உனக்கு இருக்கிற
தயவு இதுதானே? உன் சினேகிதனோ
டே நீ போகாதே,போனதென்னவென்

18 றதற்கு,— ஊசாய் அப்சலோமோடே
சொன்னது, அப்படி அல்ல, யெகோவா
வும் இந்தச் சனமும் இஸ்ரவேல் மனு
ஷிர் அனைவருந் தெரிந்துகொள்ளுகிறவ
ரையே நான் சேர்ந்து அவரோடே இரு
19 ப்பேன்.—இதுவுமல்லாமல் ஆருக்கு நா
ன் ஊழியக்காரனாய் இருப்பேன்? அவ
ருடைய குமாரனுக்கல்லவோ? உம்முடை
ய தகப்பனாருக்கு முன்பாக எப்படி ஊ
ழியஞ் செய்தேனோ அப்படி உமக்கு
முன்பாகச் செய்துகொண்டிருப்பேன்
என்றான்.
20 அப்சலோம் அகித்தோப்பேலுடனே,
நாங்கள் செய்வதென்னவென்று ஆலோ
21 சனை கொடுங்களென்றான்.— அப்போ
து அகித்தோப்பேல் அப்சலோமுட
னே, வீட்டைக் காக்க உம்முடைய தகப்
பன் பின் வைத்த அவருடைய வைப்பா
ட்டிகளிடத்தில் உட்பிரவேசியும். அப்
போது உம்முடைய தகப்பனுக்கு நா
ற்றமானீர் என்பதை இஸ்ரவேல் எல்லா
ங்கேட்டு, உம்மோடிருக்கிற எல்லாருடை
22 ய கைகளும் பலக்குமென்றான்.—அப்

படியே அப்சலோமுக்கு உப்பரிகையி
ன்மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்க
ள். அங்கே அப்சலோம் எல்லா இஸ்ர
வேலின் கண்களுக்கு முன்பாகத் தன் த
கப்பனுடைய வைப்பாட்டிகளிடத்தில்
உட்பிரவேசித்தான்.—அந்நாட்களில் அ 23
கித்தோப்பேல் சொல்லும ஆலோச
னை தேவனுடைய வாக்கைக் கேட்டது
போல் இருந்தது. அப்படி அகித்தோப்
பேலின் ஆலோசனை எல்லாந் தாவீது
க்கும் இருந்தது. அப்சலோமுக்கும் இ
ருந்தது.

௰௭. அதிகாரம்.

தாவீதின் மேல் இன்னபடியாய்ப் போக வேண்டு
மென்று அகித்தோப்பேல் அப்சலோமுக்குச் சொ
ன்ன யோசனையை ஊசாய் அபத்தமாக்கினது.

பின்னையும் அகித்தோப்பேல் அப்ச 1
லோமோடே சொன்னது, நான் பன்னி
ராயிரம் பேரைத் தெரிந்துகொண்டு எழு
ந்து இன்று இராவைக்குத் தாவீதைப்
பின்றொடரட்டுமேன்.—அவன் விடாய்த் 2

தவனுங்கை தளர்ந்தவனுமாய் இருக்க,நா
ன் அவன்மேலே போய் அவனைத் திடுக்
கிடப் பண்ணுவேன் அப்போது அவனோ
டிருக்குஞ் சனம் எல்லாம் ஓடிப்போவ
தினால், நான் இராசா ஒருவனையே வெ
3 ட்டி,-சனத்தை எல்லாம் உம்முடைய வ
சமாய்த் திரும்பப் பண்ணுவேன். இப்ப
டிச் செய்ய நீர் வகை தேடுகையால் எல்
லாருந் திரும்பின பின் சனம் எல்லாஞ் ச
4 மாதானத்தோடிருக்குமென்றான். —இந்
த வார்த்தை அப்சலோமின் பார்வைக்கு
ம் இஸ்ரவேலுடைய எல்லா மூப்பரின்
5 பார்வைக்கும் நன்றாய் இருந்தது.—ஆ
கிலும் அப்சலோம் அற்கியனாகிய ஊசா
யைக் கூப்பிட்டு அவன் வாய் மொழியை
6 யுங் கேட்போமேயென்றான்.—ஊசாய்
அப்சலோமண்டைக்கு வந்த போது,அ
ப்சலோம் அவனுடனே, இந்தப் பிரகார
மாக அகித்தோப்பேல் சொன்னான். அ
வன் வார்த்தையின் படி செய்வோம்.அல்ல
7 வென்றால் நீ சொல் என்றான்.-அப்போ
து ஊசாய் அப்சலோமோடே, அகித்
தோப்பேல் இந்த விசை கொடுத்த ஆ

லோசனை நல்லதல்லவென்றான். —பின் 8
னையும் ஊசாய் சொன்னதாவது, உம்மு
டைய தகப்பனும் அவன் மனுஷரும் பல
சாலிகளென்றும், வெளியிலே குட்டிக
ளைப் பறிகொடுத்த கரடியைப் போல் ம
னதெரிகிறவர்களென்றும் நீர் அவர்களை
அறிவீர். உம்முடைய தகப்பன் நல்ல சே
வகனுமாய் இருக்கிறான். அவன் இராக் கா
லத்திலே சனத்தோடே தங்குவதில்லை.—
இதோ, அவன் இப்போது யாதொரு 9
கெபியிலாகிலும் வேறே யாதொருவிடத்
திலாகிலும் ஒளித்திருப்பான். துவக்கத்தி
லே தானே இவர்களிற் சிலர் பட்டார்க
ளேயானால் அதைக் கேட்கிற யாவரும்
அப்சலோமைப் பின்செல்லுகிற சனத்
தில் முறிவுண்டாயிற்றென்பார்கள்.—அ 10
ப்போது சிங்கத்தின் இருதயத்திற்கொ
த்த இருதயமுள்ள பலவானாய் இருக்
கிறவனுங் கூட முனையற்றுப் போகவே
போவான். ஏனெனில் உம்முடைய த
கப்பன் சவுரியவானென்றும், அவனோடி
ருக்கிறவர்கள் பலசாலிகளென்றும் இஸ்
ரவேல் எல்லாம் அறியும்.—நான் சொல் 11

லுகிற யோசனை என்னவெனில், தாண்
துவக்கிப் பேர்சேபா மட்டும் இருக்கிற
கடற்கரை மணல் அத்தனை திரட்சியான
இஸ்ரவேல் எல்லாம் உம்மண்டைக் கூட்
வே கூட்டப்பட்டு, நீர்தானே கூட யு
த்தத்திற்குப் போகவேண்டும் என்பது
12 தானே. அப்போது அவன் கண்டுபிடிக்
கப்படுகிற எவ்விடத்திலாகிலும் நாம் அ
வனண்டை போய்ப், பனி பூமியின்மே
லே பெய்கிற அத்தன்மையாய் அவன்மே
ல் விழுவோம். அப்படியே அவனோடி
ருக்கிற எல்லா மனுஷிரிலும் ஒருவனும்
13 அவனுக்கு இருக்கப் போகிறதில்லை. —
ஒரு பட்டணத்திற்குட் புகுந்தானேயா
ளுல், இஸ்ரவேல் எல்லாம் அந்தப் பட்ட
ணத்தின் மேலே கயிறுகளைப் போட்டு,
அங்கே ஒரு பொடிக்கல்லுங் காணப்ப
டாதே போகுமட்டும், அதை ஆற்றிலே
இழுத்துப் போடுவார்களாகவென்றான்.
14 - அப்போது அப்சலோமும் இஸ்ரவேல்
மனுஷிர் அனைவரும் அகித்தோப்பேலி
ன் ஆலோசனையைப் பார்க்க அற்கியனு
கிய ஊசாயின் ஆலோசனை நல்லதென்

ரர்கள். இப்படி யெகோவா அப்சலோ
மின் மேலே பொல்லாங்கை வரப் பண்
ணும்படிக்கு, அகித்தோப்பேலின் நல்ல
ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்கு
யெகோவா கட்டளையிட்டார்.
பிறகு ஊசாய் சாதோக் அப்பியத்தா 15
ர் என்ற ஆசாரியர்களோடே சொன்ன
து, இன்னின்னபடி அகித்தோப்பேல்
அப்சலோமுக்கும் இஸ்ரவேலின் மூப்
பருக்கும் ஆலோசனை சொன்னான். நா
னோ இன்னின்னபடி ஆலோசனை சொன்
னேன்.- இப்போதும் நீங்கள் சீக்கிரமாய் 16
த் தாவீதுக்கு அறிவிக்கும்படிக்குச், செ
ய்தியை அனுப்பி, நீர் இராவைக்கு வனாந்
த்தரத்தின் வெளிகளிலே தங்க வேண்டா
ம். இராசாவும் அவரோடிருக்கிற எல்லா
ச் சனமும் விழுங்கப்படாதபடிக்கு அக்
கரைக்குத் தானும் போகவே போமென்
று சொல்லச் சொல்லுங்களென்றான்.-
யோனத்தானும் அகிமாசும் ரோகேல் எ 17
ன்ற துரவண்டை நின்றிருந்தார்கள். அ
வர்கள் போய்த் தாவீது இராசாவுக்கு அ
தை அறிவிக்கும்படிக்கு, ஒருவேலைக்கா

றிபோய் அதை அவர்களுக்குச் சொன்
னாள், ஏனெனில் அவர்கள் தங்களைக் கா
ண்பிக்கிறதற்குப் பட்டணத்திற்குள் வரக்
18 கூடாதிருந்தது.—ஆனாலும் ஒரு பிள்ளை
யாண்டான் அவர்களைக் கண்டு அப்சலோ
முக்கு அறிவித்தான். ஆகையால் அவர்கள்
இருவருஞ் சீக்கிரமாய்ப் போய்ப் பகூரி
மில் இருக்கிற ஒரு மனுஷன் வீட்டிற்குட்
பிரவேசித்து, அவனுக்கு அவன் முற்ற
த்தில் ஒரு கிணறு இருக்கையால் அதில்
19 இறங்கினார்கள்.—வீட்டுக்காரி ஒரு பாயை
எடுத்துக் கிணற்று வாயின்மேலே விரி
த்துக் காரியம் அறியவராதபடிக்கு அ
தின்மேல் நொய்யுத் திராவி வைத்தாள்.
20 —அப்சலோமின் சேவகர் அந்த ஸ்திரி
யண்டைக்கு வீட்டிற்குள் வந்து, அகிமா
சும் யோனத்தானும் எங்கேயென்று கே
ட்டார்கள். அவர்களுக்கு அந்த ஸ்திரீ
வாய்க்காலுக்கு அப்பாலே போய்விட்
டார்களென்றாள். இவர்கள் தேடிக்காணா
தேபோய் எருசலேமுக்குத் திரும்பினா
21 ர்கள்.—இவர்கள் போனபிறகு, அவர்க
ள் கிணற்றில் இருந்து ஏறிப்போய்த், தா

வீது இராசாவுக்கு அறிவித்துத் தாவீது
டனே, சீக்கிரமாய் எழுந்து ஆற்றைக்
கடந்துபோங்கள், ஏனெனில் இன்னப
டி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோ
தமாய் ஆலோசனை சொன்னானென்றார்
கள்.— அப்போது தாவீதும் அவனோ 22
டிருக்கிற எல்லாச் சனமும் எழும்பி யோ
ர்தானைக் கடந்தார்கள். பொழுதுவிடியு
மட்டும் யோர்தானைக் கடவாத ஒருவரும்
பின்வைக்கப்பட்டதில்லை.

அகித்தோப்பேலோ தன் யோசனை 23
யின்படி நடந்ததில்லையென்று கண்ட
போது, தன் கழுதையின்மேலே சேண
ம் வைத்துத், தன் ஊரில் இருக்கிற தன்
வீட்டுக்குப் போய்த், தன் வீட்டாருக்கு
த் திட்டம்பண்ணி, நான்றுகொண்டு செ
த்துத் தன் தகப்பன் கல்லறையில் அட
க்கம் பண்ணப்பட்டான்.

தாவீது மக்னாயிமுக்கு வந்தான். அ 24
ப்சலோமும் தன்னுடைய சனமாகிய எ
ல்லா இஸ்ரவேலோடும் யோர்தானைக் க
டந்தான்.- அப்சலோம் அமாசாவை யோ 25
வாபுக்குப் பதிலாக இராணுவத் தலைவனு

க வைத்திருந்தான். இந்த அமாசா நாகா
சின் குமாரத்தியுஞ் சேருயாவின் சகோ
தரியும் யோவாபின் அத்தையாருமாகிய
அபிகாளைப் படைத்த இஸ்ரவேலனாகிய
யெத்திரா என்று பேருள்ள ஒரு மனுஷனு
26 டைய குமாரனாயிருந்தான்.—இஸ்ர
வேலும் அப்சலோமுங் கீலேயாத் தேச
27 த்திலே பாளயமிறங்கினார்கள்.— தாவீ
து மக்னாயிமுக்குச் சேர்ந்த போது, அ
ம்மோன் புத்திரரின் தேசத்து இரப்
பா பட்டணத்தானாகிய சோபியென்ற
நாகாசின் குமாரனும் லோதேபார் ஊ
ரான அம்மியேலின் குமாரன் மாகீரு
ம் ரொகிலும் ஊரானுங் கீலெயாத்தி
28 யனுமாகிய பர்சிலாயும்,—மெத்தைக
ளையும், கலங்களையும், மண்பாண்டங்க
ளையும், கோதும்பையையும், வாற் கோ
தும்பையையும், மாவையும், வறுத்த ப
யற்றையும், பெரும் பயற்றையுஞ், சிறு
பயற்றையும், வறுத்த சிறுபயற்றையும்,
29 —தேனையும் வெண்ணெய்யையும் ஆடுக
ளையும் பசுவின் கேஸ்கட்டிகளையுந் தா
வீதுக்கும் அவனோடிருக்கிற சனத்திற்கு

ஞ் சாப்பிடுகிறதற்குக் கொண்டுவந்தார்க
ள். ஏனெனில் அந்தச் சனம் வனாந்தரத்
திலே பசியும் இளைப்புந் தவனமுமாய்ப்
இருக்குமென்றார்கள்.

---

௧௮. அதிகாரம்.

*அப்சலோம் தாவீதோடே பண்ணுகிற யுத்த
த்திலே கொல்லுண்டு செத்தது.*

தாவீது தன்னோடிருக்கிற சனத்தை 1
இலக்கம்பார்த்து அவர்கள் மேல் ஆயிர
த்துச் சேர்வைக்காரரையும் நூற்றுக்கு
ச் சேர்வைக்காரரையும் வைத்துப்,-பின் 2
பு தாவீது சனத்தில் மூன்றத்தொரு ப
ங்கை யோவாபுடைய கையின் கீழும், மூ
ன்றத்தொரு பங்கைச் செருயாவின் கு
மாரனும் யோவாபின் சகோதரனுமா
ன அபிசாயின் கையின் கீழும், மூன்றத்
தொரு பங்கைக் கேத்தியனாகிய இத்தா
யின் கையின் கீழும் அனுப்பி, நானும்
உங்களோடே கூடப் புறப்பட்டுவருவே
னென்று இராசா சனத்தோடே சொ
ன்னான்.—சனமோ நீர் புறப்படவே 3

ண்டாம்; ஏனெனில் நாங்கள் முறிந்து ஓ
டிப்போனாலும், அவர்கள் எங்கள் காரி
யத்தை மனதிலே வைப்பதில்லை. நாங்
கள் பாதிப் பேர் செத்துப் போனாலும்,
எங்கள் காரியத்தை மனதிலே வைப்ப
தில்லை. ஏனெனில் இன்னம் எங்களைப்
போல் ஒத்த பதினாயிரம் பேரைத் திரு
ம்பச் சேர்ப்பீர். இப்போதும் நீர் பட்ட
ணத்தில் இருந்து எங்களுக்கு ஒத்தாசை
யாய் இருக்கிறது எங்களுக்குத் தாவிலை
4 யென்றார்கள்.—அப்போது இராசா அ
வர்களுடனே, உங்களுக்கு நன்றாய்க் கா
ண்கிறதைச் செய்வேனென்று சொல்லி,
இராசா ஒலிமுகவாசல் ஓரத்திலே நின்று
ன். சனம் எல்லாம் நூறுகளும் ஆயிரங்
5 களுமாய்ப் புறப்பட்டார்கள்.—இராசா
யோவாபுக்கும் அபிசாயிக்கும் இத்தாயி
க்கும் அப்சலோமென்ற வாலிபனை என
க்காக மெதுவாய் நடப்பியுங்களென்று
கற்பித்தான். இப்படி இராசா அப்சலோ
முக்காகத் தலைவருக்கெல்லாங் கற்பிக்கி
றதைச் சனம் எல்லாங் கேட்டார்கள்.—
6 சனம் வெளியே இஸ்ரவேலுக்கு எதிராய்

ய் புறப்பட்ட பின்பு எப்பிராயீமின்
காட்டிலே யுத்தம் உண்டாயிற்று.—அங் 7
கே இஸ்ரவேல் சனந் தாவீதின் சேவக
ருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டார்க
ள். அங்கே அன்றையித்தினம் இருபதி
னாயிரம் பேர் விழத்தக்கனையான பெரி
ய சங்காரமாயிற்று.— அங்கே யுத்தம் 8
அந்தத் தேசத்தின் மீது எங்கும் பரந்து
அன்றையித்தினம் பட்டயம் பட்சித்தவ
ர்களைப் பார்க்கிலும் காடு சனத்தில் அதி
கம் பேரைப் பட்சித்தது.—அப்சலோ 9
ம் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்பட்டா
ன். ஆனாலும் அப்சலோம் கோவேறு
கழுதையின்மேல் ஏறிவர, அந்தக் கோ
வேறு கழுதை சன்னபின்னலான ஒ
ரு பெரிய கருவாலியு மரத்தின் கீழ் வ
ந்ததினால், அவனுடைய தலை கருவாலியு
மரத்தில் மாட்டிக்கொண்டு, அவன் ஆ
காயத்திற்கும் பூமிக்கும் நடுவே தொங்
கினான். ஏனென்றால் அவன் கீழ் இருந்த
கோவேறு கழுதை அப்பாலே போயிற்
று.—அதை ஒருவன் கண்டு யோவாபுக் 10
கு அறிவித்து, இதோ அப்சலோமை ஒ

ரு கருவாலிய மரத்திலே தொங்கக் கண்
11 டேன் என்றான்.-அப்போது யோவாப்
தனக்கு அதை அறிவித்தவனுக்கு, இதோ
அதைக் கண்டாயே, பின்னை ஏன் அவனை
அங்கே வெட்டித் தரையிலே போடா
தே போனாய். நான் உனக்குப் பத்து
வெள்ளிக் காசையும், ஒரு கச்சையையுங்
கொடுக்கக் கடனாளியாய் இருப்பேனே
12 யென்றான்.—ஆனாலும் அந்த மனுஷன்
யோவாபுடனே சொன்னதாவது, நான்
என் கைகளில் ஆயிரம் வெள்ளிக்காசை
நிறுத்துக்கொள்ளக் கொடுபட்டாலும்,
நான் இராசாவுடைய குமாரன் மேல் எ
ன் கையை நீட்டுவதில்லை. ஏனெனில் அ
ப்சலோமென்ற வாலிபனை நீங்கள் அ
13 வரவர் காருங்களென்று இராசா உமக்
கும், அபிசாயிக்கும், இத்தாயிக்கும் எங்
கள் காதுகள் கேட்கக் கற்பித்தாரே.—
அல்லவென்று நான் என் மனச்சாட்சிக்
கு விரோதமாய் அதைச் செய்து மறை
த்தாலும், இராசாவுக்கு எந்தக் காரியமு
ம் மறைந்திருப்பதில்லை. நீர்தானும் என
14 க்கு எதிராக நிற்பீரென்றான்.—ஆனாலு

ம். யோவாப், நான் இப்படி உன்னோடே
பேசித் தாமதிக்க மாட்டேனென்று சொ
ல்லி, மூன்று வல்லயங்களைத் தன் கையி
லே பிடித்துக்கொண்டு, அப்சலோம் இ
ன்னம் கருவாலிமரத்தின் நடுவிலே உ
யிரோடே தொங்க, அவைகளை அவன்
இருதயத்திற்குட் குத்தினான்.—அப்போ 15
து யோவாபின் ஆயுதங்களைப் பிடிக்கிற
பத்து வேலைக்காரர் சூழ்ந்துகொண்டு, அ
ப்சலோமை அடித்துக் கொன்றுபோட்
டார்கள்.—அப்போது யோவாப், எக்காள 16
ம் ஊதினான். ஆனதுகொண்டு இஸ்ரவே
லைப் பின்தொடருகிறதை விட்டுச் சனந்
திரும்பிற்று. ஏனென்றால், யோவாப் ச
னத்தை நிறுத்திப்போட்டான்.—அவர் 17
கள் அப்சலோமை எடுத்து அவனைக் கா
ட்டில் இருந்த ஒரு பெரிய குழியிலே
போட்டு, அவன் மேல் மகா பெரிய கற்
குவியலைக் குவித்தார்கள். ஆனாலும் இஸ்ர
வேல் எல்லாம் அவரவர் தங்கள் கூடார
ங்களுக்கு ஓடிப் போனார்கள்.—அப்ச 18
லோமோ உயிரோடிருக்க, என் பே
ரை நினைக்கப்பண்ண எனக்குக் குமாரன்

இல்லையென்று சொல்லி, இராசாவின் பள்
ளத்தாக்கில் இருக்கிற ஒரு தூணைத் தனக்
கு எடுத்து நிறுத்தி, அந்தத் தூணுக்கு
த் தன் பேரைத் தரித்திருந்தான். அது
இந்நாள் வரைக்கும் அப்சலோமின் அ
டையாளமென்று சொல்லப்படுகின்றது.
19 சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ்
யெகோவா இராசாவை அவர் சத்துருக்
களின் கைக்கு நீங்கலாக்கி, நியாயஞ் செ
ய்தாரென்ற சுபசெய்தியை அவருக்குக்
கொண்டுபோக நான் ஓடட்டுமே என்
20 றான்.—ஆனாலும் யோவாப் அவனுட
னே, இன்றையத்தினம் நீ சுபசெய்தியைக்
கொண்டுபோகிறவன் அல்ல. பின்னொரு
நாளிலே நீ சுபசெய்தியைக் கொண்டு
போகலாம். இராசாவின் குமாரன் செ
த்தபடியினாலே, இன்றைக்கு நீ செய்தி
யைக்கொண்டுபோகாயாகவென்று சொ
21 ல்லி,—யோவாப் கூசியுடனே, நீ போ
ய்க் கண்டதை இராசாவுக்கு அறிவியெ
ன்றான். கூசி யோவாபை வணங்கி ஓடி
22 னான்.—ஆனாலும் சாதோக்கின் குமாரனா
கிய அகிமாஸ் இன்னம் யோவாபுடனே,

என்னமானாலுங் கூசியின் பிறகாலே நா
னும் ஓடட்டுமேயென்று திரும்பக் கே
ட்டதற்கு யோவாப் என்றவன் என் ம
கனே! உனக்கு நல்ல செய்தி கிடையாதி
ருக்க, நீ ஓட வேண்டியதென்னவென்
றான்! —ஆனாலும் அவன், என்னமா 23
னாலும் ஓடுவேனென்றான். அப்போது
யோவாப் அவனுக்கு ஓடென்றான். அப்
படியே அகிமாஸ் சமனான பூமி வழியா
ய் ஓடிக் கூசியைக் கடந்து போனான் —
தாவீதோ இரண்டு ஒலிமுகக் கெவுனிவா 24
சலுக்கு நடுவாக உளுக்கார்ந்திருந்தான்.
சாமங் காக்கிறவன் அலங்கத்தில் இருக்
கிற செவுனியின் மேல் நடந்து, தன் க
ண்களை ஏறெடுத்து, இதோ, ஒரு மனு
ஷன் தனியே ஓடிவருகிறதைக் கண்டு,—
கூப்பிட்டு, இராசாவுக்கு அறிவித்தான். 25
அப்போது இராசா, அவன் ஒருவனாய் வ
ந்தால், அவன் வாயிலே நல்ல செய்தி இரு
க்குமென்றான். அவன் நடந்து கிட்டி
வர,— சாமங் காக்கிறவன் வேறொரு 26
வன் ஓடி வருகிறதைக் கண்டு, அதோ,
பின்னொருவன் தனியே ஓடிவருகிறானெ

ன்று வாசற்காக்கிறவனோடே கூப்பிட்டு
ச் சொன்னான். அப்பொழுது இராசா அ
வனும் நற்செய்தியைக் கொண்டுவருகிற
27 வனென்றான்.—பின்னையுஞ் சாமங் காக்
கிறவன் முந்தினவனுடைய ஓட்டஞ் சா
தோக்கின் குமாரன் அகிமாசுடைய ஓட்
டம்போல் இருக்கின்றதென்று நான் கா
ண்கிறேனென்றான். அப்பொழுது இராசா
அவன் நல்ல மனுஷன். அவன் நல்ல செ
ய்தியைச் சொல்ல வருகிறானென்றான்.—
28 அகிமாஸ் வந்து இராசாவுடனே, சமா
தானமென்று கூப்பிட்டுக்கொண்டு, மு
கங்குப்புற விழுந்து, இராசாவை வணங்
கி, இராசாவாகிய என் ஆண்டவன் மே
லே தங்கள் கைகளை எடுத்த மனுஷரை
ஒப்புக்கொடுத்திருக்கிற உம்முடைய தே
வனாகிய யெகோவா இஸ்தோத்திரிக்கப்
29 பட்டவரென்றான்.—அப்பொழுது இரா
சா, அப்சலோமென்ற வாலிபன் சுகமா
ய் இருக்கிறானோவென்று கேட்டதற்கு,
அகிமாஸ் என்றவன், யோவாப் இராசாவி
ன் வேலைக்காரனையும் உமதடியானையும்
அனுப்புகிற போது, ஒரு பெரிய சந்த

டிலையைக் கண்டேன். ஆனாலும் அது எ
ன்னவென்கிறதை அறியேனென்றான்.—
அப்பொழுது இராசா, நீ அப்படிச் சுற்றி 30
வந்து நில்லென்றான். அவன் சுற்றிவந்
து நின்றான்.—இதோ, கூசி வந்து, இன் 31
று யெகோவா உமக்கு விரோதமாய் எ
ழும்பின எல்லாரின் கைக்கும் உம்மை நீ
ங்கலாக்கி நியாயஞ் செய்தார். இன்று இ
ராசாவாகிய என் ஆண்டவனுக்கு நல்ல
செய்தி வருகின்றதென்றான்.—அப்பொ 32
ழுது இராசா கூசியை, அப்சலோமென்
ற வாலிபன் சுகமாய் இருக்கிறானோவெ
ன்று கேட்டதற்குக் கூசியென்றவன், அ
ந்த வாலிபனுக்கு நடந்ததுபோல, இரா
சாவாகிய என் ஆண்டவனுடைய சத்துரு
க்களுக்கும் பொல்லாங்கு செய்ய உமக்
கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும்
நடக்கக் கடவதென்றான்.—அப்பொழுது இ 33
ராசா கலங்கிக் கெவுனிவாசலின் மேல்
வீட்டிலேறி, அழுது, என் குமாரனாகி
ய அப்சலோமே! என் குமாரனே! என்
குமாரனாகிய அப்சலோமே! நான் உனு
க்குப் பதிலாகச் செத்தேனானால் நலமா

௩௩. அப்சலோமாகிய என் குமாரனே!
என் குமாரனே! என்று உலாவிச் சொ
ல்லிக்கொண்டிருந்தான்.

௰௯. அதிகாரம்.

தாவீது எருசலேமுக்குத் திரும்பிவந்தது.

1 இதோ, இராசா அப்சலோமுக்காக
அழுது துக்கங்கொண்டாடுகிறனென்று
யோவாபுக்கு அறிவிக்கப்பட்டதினால்,—
2 அன்றையித்தினம் அந்தச் சயஞ் சன
த்திற்கெல்லாந் துக்கமாய் மாறிற்று. ஏ
னெனில் இராசா தம்முடைய குமாரனு
க்காக டனம் நொந்திருக்கிறாரென்று அ
3 ன்றையித்தினஞ் சனங் கேட்டது.—ஆ
கையாற் சனம் யுத்தத்தில் முறிந்தவிறு
ல், வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வரு
கிறாப் போலே, சனம் அன்றையித்தினந்
திருட்டளவாய்ப் பட்டணத்திற்குள் வந்
4 தது.—இராசாவோ முக்காடிட்டு மகா
சத்தமாய், என் குமாரனாகிய அப்சலோ
மே! அப்சலோமாகிய என் குமாரனே!
என் குமாரனே! என்று அலறிக்கொண்

டிருந்தான்.—அப்போது யோவாப் உ 5
ள்ளே இராசாவண்டைக்குட் பிரவேசித்
துச் சொன்னதாவது, இன்று உம்முடை
ய சீவனையும் உம்முடைய குமாரர் குமா
ரத்திகளின் சீவனையும், உம்முடைய பெ
ண்சாதிகளின் சீவனையும், உம்முடைய
வைப்பாட்டிகளின் சீவனையுந் தப்புவித்
த உம்முடைய எல்லா ஊழியக்காரரின்
முகத்தையும், இன்று நீர் உம்மைப் ப
கைக்கிறவர்களைச் சிநேகிக்கிறதினாலும்,
உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்
கிறதினாலும் வெட்கப்படுத்தினீர்.— ஏ 6
னென்றால் தலைவருஞ் சேவகரும் உமக்கு
அற்பமானவர்களென்று இன்று அறியப்
பண்ணினீர். அதேனென்றால் அப்சலோ
ம் உயிரோடிருந்து நாங்கள் அனைவரு
ம் இன்று செத்திருந்தால், அப்போது உ
ம்முடைய பார்வைக்கு நல்லதாய் இரு
க்குமென்று இன்று அறிந்துகொண்டே
ன்.—இப்போதும் எழுந்திருந்து வெளி 7
யே வந்து, உம்முடைய ஊழியக்காரரோ
டே அன்பாய்ப் பேசும். ஏனென்றால் நீ
ர் வெளியே வராதிருந்தால், இராவைக்கு

ஒருவரும் உம்மோடே தங்கியிருப்பதி
ல்லையென்று யெகோவா பேரில் ஆணையி
டுகிறேன். அப்போது உம்முடைய சிறு
வத்துலே துவக்கி, இதுவரைக்கும், உம்
முடைய மேல் வந்த எல்லாப் பொல்லா
ங்கையும் பார்க்க, அது உமக்கு அதிக
8 பொல்லாங்காயிருக்குமென்றான்.-அப்
போது இராசா எழுந்திருந்து போய், ஒ
லிமுகவாசலில் உளுக்கார்ந்தான். இதோ,
இராசா ஒலிமுகவாசலில் உளுக்கார்ந்திருக்
கிறாரென்று எல்லாச் சனத்திற்கும் அறி
விக்கப்பட்ட போது, சனம் எல்லாம் இ
ராசாவுக்கு முன்பாக வந்தது. இஸ்ர
வேலரோ அவரவர் தங்கள் கூடாரங்களு
க்கு ஓடிப்போனார்கள்.
9 இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திர
ங்களிலுமுள்ள சகல சனமுமோ தங்களு
க்குள்ளே வழக்காடிச் சொன்னதாவது,
இராசா நம்முடைய சத்துருக்களின்
கைக்கு நம்மை நீங்கலாக்கி விட்டு, அவர்
தாமே பெலிஸ்தரின் கைக்கு நம்மை
த் தப்புவித்தார். இப்போதோ அப்ச
லோமுக்குத் தப்பத் தேசத்தை விட்டு

ஓடிப்போனார்.— ஆனாலும் நாம் நம் 10
முடைய மேல் அபிஷேகம்பண்ணிவை
த்த அப்சலோம் யுத்தத்திலே செத்தா
னே. இப்போதும் இராசா திரும்ப அ
ழைத்துவர நீங்கள் அமர்ந்திருப்பானே
னென்று சொல்லிக்கொண்டார்கள்.—இ 11
ப்படி இஸ்ரவேல் எல்லாம் பேசிக்கொ
ண்டிருக்கிறது இராசா இருக்கிற வீட்டி
லே, அவனுக்குக் கேள்வியானபடியினா
லே, தாவீது இராசா சாதோக் அப்பிய
த்தார் என்ற ஆசாரியாண்டைக்கு ஆள
னுப்பி, நீங்கள் யூதாவின் மூப்பரோடே
பேசி இராசாவை தம்முடைய வீட்டுக்
குத் திரும்ப அழைத்துவர நீங்கள் பி
ந்தினவர்களாய்ப் போவானேன்?—நீங்க 12
ள் என்னுடைய சகோதரர். நீங்கள் என்
எலும்பும் என் மாமிசமுமானவர்கள். இ
ராசாவைத் திரும்ப அழைத்துவர நீங்
கள் பிந்தினவர்களாய் இருப்பானேனெ
ன்று சொல்லுங்கள்.—ஆமாசாவுக்கும் 13
நீங்கள் சொல்லவேண்டியது, நீ என் எ
லும்பும் என் மாமிசமும் அல்லவோ? நீ
யோவாபுக்குப் பதிலாக என்றைக்கும் என

க்கு முன்பாகப் படைத்தலைவனுமாய் இ
ராவிட்டால், தேவன் இப்படியும் அப்ப
டியும் எனக்குச் செய்யக் கடவரென்று
சொல்லுங்களென்று சொல்லச் சொன்
14 னன்.—இப்படியே சகல யூத மனுஷரி
ன் இருதயத்தையும் ஒரே ஒருவன் இ
ருதயத்தைப்போலே இணங்கப்பண்ணி
னதினாலே அவர்கள் இராசாவுக்கு, நீர் உ
ம்முடைய எல்லா ஊழியக்காரரோடுந்
திரும்பிவாருமென்று சொல்லியனுப்பி
15 னார்கள்.—இராசா திரும்பவருகிறதற்கு
யோர்தான் மட்டும் வந்தபோது, யூதாக்
கோத்திரத்தார் இராசாவுக்கு எதிர்கொ
ண்டு போய், இராசாவை யோர்தானை
க் கடக்கப்பண்ணக் கில்கால் மட்டும் வந்
தார்கள்.
16 பகூரிம் ஊரான எமினியின் குமார
னாகிய கேராவின் மகன் சீமேயியுந் தீ
விரித்துக்கொண்டு, யூத மனுஷரோடுந்
தாவீது இராசாவுக்கு எதிர்க்கொண்டு இ
17 றங்கிப்போனான்.— அவனோடே பென்
யமின் மனுஷர் ஆயிரம் பேருஞ் சவுலி
ன் வீட்டு வேலைக்காரனாகிய சீபாவும் அவ

ஞேடே அவனுடைய பதினைந்து குமா
ரரும் அவனுடைய இருபது வேலை
க்காரரும் இருந்தார்கள். அவர்கள் இ
ராசாவுக்கு முன்பாக யோர்தானை வே
கமாய்க் கடந்து வந்தார்கள்.—அவர்கள் 18
இராசாவின் வீட்டாரை இக்கரைப்படுத்
தவும், அவன் பார்வைக்குப் பொருந்தி
ய வேலையைச் செய்யவும் படகு அக்கரை
யிலே வந்தது. அப்போது கேராவின்
குமாரனாகிய சீமேயி யோர்தானைக் கடக்
கப் போகிற இராசாவுக்கு முன்பாகத் தா
ழ விழுந்து,—இராசாவோடே சொன்ன 19
தாவது, என் ஆண்டவன் என் அக்கிர
மத்தை என் மேலே சுமத்தாமலும், இ
ராசாவாகிய என் ஆண்டவன் எருசலே
மில் இருந்து புறப்பட்டு வருகிற நாளி
லே உமதடியான் செய்த தோஷத்தை
இராசா நினையாமலும், தம்முடைய மன
தில் வையாமலும் இருப்பாராக.—என 20
னில் நான் பாவஞ் செய்தேனென்று உ
ம்முடைய அடியானாய் இருக்கிற நான்
அறிந்திருக்கிறேன். இப்போதும் இ
தோ, இராசாவாகிய என் ஆண்டவனுக்

கு எதிர்க்கொண்டு இறங்கிவர யோசேப்
பு வீட்டார் அனைவருக்கும் நான் இன்
21 று முந்திக்கொண்டேனென்றான்.—அப்
போது சேருயாவின் குமாரனாகிய அ
பிசாய் பிரத்தியுத்தாரமாக யெகோவா
அபிஷேகம்பண்ணுவித்தவரைச் சிமேயி
தூஷணித்தபடியினாலே, அவன் அதற்
காகக் கொலைசெய்யப்பட வேண்டா
22 மோ என்றான்.— தாவீதோ சேருயா
வின் குமாரரே, இன்று நீங்கள் எனக்குச்
சாத்தான்களாகிறதற்கு எனக்கும் உங்க
ளுக்கும் என்ன? இன்று இஸ்ரவேலில் ஒ
ருவன் கொலைசெய்யப்படலாமோ? எ
னென்றால் இன்று நான் இஸ்ரவேலின்
மேல் இராசாவானேனென்கிறதை அறி
23 யேனோ என்று சொல்லி, —இராசா சி
மேயுடனே, நீ சாவதில்லையென்று அ
வனுக்கு ஆணையிட்டான்.
24 சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்
தும் இராசாவுக்கு எதிர்க்கொண்டு இறங்கி
வந்தான். இராசா போன நாள் துவக்கி, அ
வன் சமாதானத்தோடே திரும்பிவருகி
ற நாள் மட்டும், அவன் தன் கால்களையுந்

தன் தாடியையுஞ் சுத்தம்பண்ணிக்கொள்
ளாமலும் தன் வஸ்திரங்களை வெளாமலு
ம் இருந்தான்.- அவன் எருசலேமில் இருந் 25
து இராசாவுக்கு எதிர்க்கொண்டு வருகிற
போது, இராசா அவனை மேவிபோசே
த்தே நீ என்னோடே வராதே போனதெ
ன்னவென்று கேட்டான்.- அவன் சொ 26
ன்னதாவது, இராசாவாகிய என் ஆண்டவ
னே! என் வேலைக்காரன் என்னை மோசம்
போக்கினான். அதேதென்றால் உம்முடை
ய அடியானாயிருக்கிற நான் சப்பாணி
யானபடியினாலே, ஒரு கழுதையின் மே
லே சேணம் வைத்து அதின்மேல் ஏறி
இராசாவோடே போகிறேனென்று அ
டியேன் சொன்னேன்.—அவன் இரா 27
சாவாகிய என் ஆண்டவனோடே உமதடி
யான் மேலே குத்திரமுஞ் சொன்னான். இ
ராசாவாகிய என் ஆண்டவனோ தேவனு
டைய தூதரைப்போல் இருக்கிறார். உம்
முடைய பார்வைக்கு நல்லதாய்க் காண்கி
றபடியே செய்யும்.- என்னெனில் இராசா 28
வாகிய என் ஆண்டவனுக்குமுன்பாக என்
தகப்பன் வீட்டார் எல்லாருஞ் சாவுக்கே

துவாய் இருந்தார்களேயொழிய மற்றப்
படி அல்ல. என்றாலும் உமது பந்தியிலே
சாப்பிடுகிறவர்களுக்குள்ளே உமதடியா
னை வைத்தீர். இன்னம் நான் இராசா
வைப் பார்த்து முறையிட இனி எனக்
29 கு என்ன நீதி இருக்கின்றதென்றான்.-அ
ப்போது இராசா அவனுடனே, இனி உ
ன் காரியத்தை அதிகமாய்ப் பேசுவா
னேன்? நீயுஞ் சீபாவும் நிலத்தைப் ப
ங்கிட்டுக்கொள்ளுங்கள். இதை நான்
30 சொன்னேனென்றான்.—அதற்கு மேவி
போசேத் இராசாவுடனே, இராசாவாகி
ய என் ஆண்டவன் சமாதானத்தோடே
தம்முடைய வீட்டிற்கு வந்திருக்க, அவன்
எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளட்டு
மென்றான்.
31 கீலெயாத்தியனாகிய பர்சீலாயும் ரோகி
லிமில் இருந்து இறங்கிவந்து யோர்தான்
மட்டும் இராசாவை வழிவிட்டு அனுப்ப
அவனோடே யோர்தானின் துறை மட்டுங்
32 கடந்து வந்தான்.-பர்சீலாவோ எண்பது
வயதுசென்ற மகா கிழவனாய் இருந்தான்.
இராசா மகனாயீமிலே தங்கியிருக்குமட்டு

ம் அவன் இவனைப் பராமரித்துக்கொண்
டிருந்தான். ஏனென்றால் அவன் மகா
பெரிய மனுஷனாய் இருந்தான்.—இரா 33
சா பர்சிலாவுடனே, நீ என்னோடே க
டந்துவா. எருசலேமிலே உன்னை என்
னண்டையிலே வைத்துப் பராமரிப்பே
னென்றான்.—ஆனாலும் பர்சிலாய் இரா 34
சாவோடே சொன்னதாவது, நான் இ
ராசாவோடே எருசலேமுக்கு ஏறிவர நா
ன் இன்னம் உயிரோடிருக்கும் ஆயிசி
ன் நாட்கள் எம்மாத்திரம்?—இப்போது 35
ம் நான் எண்பது வயதுள்ளவன். இனி
நன்மை தீமையினுடைய வித்தியாசத்
தை அறிவேனோ? புசிக்கிறதுங் குடிக்
கிறதும் உமதடியானுக்கு ருசிகரமாய்
இருக்குமோ? கீர்த்தனக்காரர் கீர்த்தனக்
காரிகளுடைய சத்தத்தை இனிக் கேட்
பேனோ? இனி உம்முடைய அடியானாய்
இருக்கிற நான் இராசாவாகிய என் ஆண்ட
வனுக்குப் பாரமாய் இருக்க வேண்டிய
தென்ன?—அடியேன் கொஞ்சத் தூரம் 36
யோர்தான் மட்டும் இராசாவோடே வரு
வேன். அப்படிக்கொத்த பதிலுபகா

ரத்தை இராசா எனக்குச் செய்வானே
37 ன்!—நான் என் பட்டணத்தில் என் தா
ய் தகப்பனின் கல்லறையண்டையிலே ம
ரணம் அடையும்படிக்கு உமதடியான் தி
ரும்பிப்போகட்டும். ஆனாலும் இதோ,
உமதடியானாகிய கிமேகாம் இராசாவாகி
ய என் ஆண்டவனோடே நடந்து வருவா
ன். உம்முடைய பார்வைக்கு நலமா
னபடி அவனுக்குச் செய்யுமென்றான்.
38 —அப்போது இராசா கிமேகாம் என்
னோடே வரட்டும், உன் பார்வைக்கு ந
லமானபடியே நான் அவனுக்கு நடப்
பித்து நீ என்மேற் சுமத்தத் தெரிந்து
கொள்வதெல்லாவற்றையும் உனக்குச் செ
39 ய்வேனென்றான்.—சனம் எல்லாம் யோ
ர்தானைக் கடந்த போது, இராசா பர்சி
லாயியை முத்தமிட்டு அவனை ஆசிர்வதி
த்துத் தானுங் கடந்துபோனான். அவ
40 னோ தன்னிடத்திற்குத் திரும்பினான்.—
இராசா கடந்து, கில்கால் மட்டும் போ
னான். கிமேகாம் அவனோடே கடந்துவ
ந்தான். யூதாவின் சனம் அனைத்தும் இ
ஸ்ரவேலிலே பாதிச் சனமும் இராசா

வை இக்கரைப்படுத்தி வந்த பிறகு,—
இதோ, இஸ்ரவேல் மனுஷர் எல்லாரு 41
ம் இராசாவண்டைக்கு வந்து இராசாவு
டனே, எங்கள் சகோதரராகிய யூதாவி
ன் மனுஷர் திருட்டளவாய் உம்மை அ
ழைத்துவந்து இராசாவையும் அவர் வீ
ட்டாரையும் அவரோடே இருக்கிற தாவீ
தின் மனுஷர் அனைவரையும் யோர்தானை
க் கடக்கப்பண்ணினதென்னவென்றார்க
ள்!—அப்போது யூதாவின்மனுஷர் எல் 42
லாரும் இஸ்ரவேல் மனுஷருக்குப் பிர
த்தியுத்தாரமாக, இராசா எங்களைச் சே
ர்ந்தவரானபடியினாலே, இதைச் செய்
தோம். இதற்காக நீங்கள் கோபமாய் இ
ருப்பானேன்! நாங்கள் இராசாவின் கை
யிலே வாங்கித் தின்னவே தின்றோமோ?
எங்களுக்கு வெகுமானங் கொடுக்கப்ப
ட்டதோவென்றார்கள்.— இஸ்ரவேல் ம 43
னுஷரோ யூதா மனுஷருக்குப் பிரத்தியு
த்தாரமாக, இராசாவினிடத்தில் எங்களு
க்குப் பத்துப் பங்கு இருக்கின்றது. உங்
களைப் பார்க்கிலும் எங்களுக்குத் தாவீதி
னிடத்திலே அதிகமும் உண்டாயிருக்கி

ன்றது. பின்னை என் எங்களை அற்பமா
ய் எண்ணினீர்கள்? எங்கள் இராசாவைத்
திரும்ப அழைத்துவர வேண்டுமென்று
முந்திச் சொன்னவர்கள் நாங்கள் அல்ல
வோ என்றார்கள். ஆனாலும் இஸ்ரவே
லின் மனுஷரின் பேச்சைப் பார்க்கிலும்
யூதா மனுஷரின் பேச்சுப் பலத்தது.

உ௰. அதிகாரம்.

சேபா உண்டாக்கின கலகம் அமர்த்தப்பட்ட செய்தி.

1 அப்போது எமினி மனுஷனாகிய பி
க்கிரியின் குமாரனான சேபாவென்று பே
ருள்ள பேலியாள் மனுஷன் ஒருவன் த
ற்செயலாய் அங்கே இருந்தான். அவன் எ
க்காளம் ஊதி, எங்களுக்குத் தாவீதிடத்தி
லே பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிட
த்தில் எங்களுக்குச் சுதந்திரமும் இல்லை, இ
ஸ்ரவேலிலே அவரவர் தங்கள் கூடாரங்
களுக்குப் போகக் கடவர்களென்றான்.—
2 அப்போது இஸ்ரவேல் மனுஷர் எல்லா
ரும் தாவீதை விட்டுப் பின்வாங்கிப் பிக்கி

ரியின் குமாரனாகிய சேபாவைப் பின்செ
ன்று போனார்கள். ஆனாலும் யோர்தா
னைத் துவக்கி, எருசலேம் மட்டுமுள்ள
யூதா மனுஷர் தங்கள் இராசாவைச் சா
ர்ந்திருந்தார்கள்.

தாவீது எருசலேமில் இருக்கிற தன் 3
வீட்டுக்கு வந்த போது, வீட்டைக் காக்
க இராசா பின்வைத்துப் போன பத்து
வைப்பாட்டிகளை அழைத்து, அவர்களை
ஒரு காவல் வீட்டிலே வைத்துப் பராப
ரித்து, அவர்களிடத்திலே பிரவேசியாதி
ருந்தான். அப்படியே அவர்கள் சாகிற
நாள் மட்டும், அடைக்கப்பட்டு உயிரோ
டிருக்கும் நாள் எல்லாம் விதவைகளைப்
போல் இருந்தார்கள்.—பிறகு இராசா ஆ 4
மாசாவுடனே, நீ யூத மனுஷரை மூன்
றும் நாளில் என்னண்டைக்கு வரவழை
ப்பித்து, அப்போது நீயும் இங்கே வந்
து, நிற்க வேண்டுமென்றான்.- அப்போ 5
து ஆமாசா யூதாவை அழைப்பிக்கப் போ
யித், தனக்குக் குறித்த காலத்திலே வரா
மல் தாமதித்தான்.—அப்போது தாவீ 6
து அபிசாயுடனே, அப்சலோமைப் பார்

க்கிலும் பிக்கிரியின் குமாரனாகிய சேபா
இப்போது நமக்குப் பொல்லாங்குசெய்
வான். அவன் அரணான பட்டணங்களில்
வந்தடைந்து, நம்முடைய கண்களுக்குத்
தப்பிப்போகாதபடிக்கு, நீ உன் எசமா
னுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு,
அவனைப் பின்றொடர்ந்து போவென
7 ன்றான்.—அப்படியே யோவாபின் மனு
ஷரும், கிரேத்தியரும், பிலேத்தியரும்,
எல்லாப் பலசாலிகளும் அவன் பிறகாலே
புறப்பட்டுப் பிக்கிரியின் குமாரனாகிய
சேபாவைப் பின்றொடர எருசலேமில்
இருந்து போனார்கள்.
8 அவர்கள் கிபெயோன் கிட்ட இருக்
கிற பெரிய கல்லண்டையிலே வந்த போ
தோ, ஆமாசா அவர்களுக்கு எதிர்ப்பட்
டு வந்தான். யோவாபோ தான் உடுத்தி
க்கொண்டிருக்கிற தன் சட்டையின் பேரி
ல் ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருந்
தான். அதில் உறையோடே ஒரு பட்டய
ம் அவன் இடுப்பண்டையிலே தொங்கிற்
று. அவன் புறப்படுகையில், அது விழுந்த
9 து.—அப்போது யோவாப் ஆமாசாவு

டனே, என் சகோதரனே, சுகமாய் இ
ருக்கிறாயோவென்று சொல்லி, ஆமாசா
வை முத்தி செய்யத் தன் வலது கையினா
ல் அவன் தாடியைப் பிடித்து,—தன் கை 10
யில் இருக்கிற பட்டயத்திற்கு ஆமாசா
எச்சரிக்கையாய் இராதபோது, யோவா
ப் அவனை அவன் குடல்கள் தரையிலே ச
ரிந்துபோகத்தக்கனையாய் அதினால் வயி
ற்றிலே மறு குத்தில்லாமற் குத்திப்போ
ட்டான். அவன் செத்துப்போனான். அ
ப்போது யோவாபும் அவன் சகோதர
னாகிய அபிசாயும் பிக்கிரியின் குமாரனா
கிய சேபாவைப் பின்தொடர்ந்தார்கள்.
—யோவாபுடைய வாலிபரில் ஒருவன் 11
செத்தவனண்டையில் நின்று எவன் யோ
வாபின் மேற் பிரியப்பட்டு எவன் தாவீ
துக்கு அடுத்திருக்கிறானோ, அவன் யோ
வாவைப் பின்செல்வானாகவென்றான்.—
ஆனாலும் ஆமாசா நடு வழியிலே இரத் 12
தத்திலே புரண்டு கிடந்தபடியினாலே,
சனம் எல்லாந் தரித்து நிற்கிறதை அவ
ன் கண்டு, ஆமாசாவை வழியில் இருந்து
வயலிலே இழுத்துப்போட்டு, அவன் அ

ண்டையிலே வருகிறவன் எல்லாம் நிற்கிறு
னென்று கண்டபடியினாலே, ஒரு வஸ்திர
13 த்தை அவன் மேற் போட்டான்.—அவ
ன் வழியில் இருந்து எடுத்துப் போட
ப்பட்ட பிறகு, எல்லாரும் கடந்து பிக்கி
ரியின் குமாரனாகிய சேபாவைத் தொட
ர யோவாவைப் பின்சென்றார்கள்.
14 அவன் இஸ்ரவேற் கோத்திரங்களை எ
ல்லாஞ் சுற்றிப் பெத்மாக்காவாகிய ஆ
பேல் மட்டாகவும் பேரீயின் சகல புற
ங்கள் மட்டாகவும் வந்திருந்தான். ஆனா
லும் அவ்விடத்தாருங் கூடித் தாங்களு
15 ம் அவனைப் பின்சென்றார்கள்.—அவர்க
ள் வந்த பெத்மாக்காவாகிய ஆபேலிலே
அவனை முத்திக்கை போட்டுப் பட்டண
த்திற்கு எதிராகத் தெத்துமட்டுங் கொ
த்தளம் போட்டார்கள். யோவாபோ
டே இருக்கிற சனம் எல்லாம் அலங்கத்
தை விழப்பண்ண அழிவுக்கு எத்தனம்ப
16 ண்ணினார்கள்.—அப்போது ஞானமுள்
ள ஒரு ஸ்திரி பட்டணத்தில் இருந்து
கேளுங்கள், கேளுங்கள், நான் யோவா
போடே பேசத்தக்கதாக அவர் இங்கே

கிட்டிவர அவருக்குச் சொல்லுங்களெ
ன்று கூப்பிட்டாள்.—அவன் அவளண் 17
டைக்குச் சேர்ந்து வந்த போது, அந்த
ஸ்திரி நீர் யோவாபோ என்று கேட்டா
ள். அவன் நான்தானென்ற போது, அ
வள் அவனுடனே, உமதடியாளின் வார்த்
தைகளைக் கேளுமென்றாள். நான் கேட்கி
றேனென்றான்.-அப்போது அவள் சொ 18
ன்னதாவது, பூர்வ காலத்திலே மனுஷர்
ஆபேலில் இருக்கிறவர்களை ஆலோச
னை கேட்கவே கேட்கவேண்டுமென்று
சொல்லவே சொல்லி இப்படியே காரி
யத்தைத் தீர்த்துப் போடுவார்கள்.—இ 19
ஸ்ரவேலிலே நான் சமாதானமும் உண்
மையுமுள்ளதாய் இருக்க, நீர் இஸ்ரவேலி
லே தாயாய் இருக்கிற பட்டணத்தை நி
ர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் யெ
கோவாவுடைய சுதந்திரத்தை விழுங்கு
வதென்னவென்றாள்.—யோவாப் பிரத்தி 20
யுத்தாரமாகச் சொன்னது நான் விழுங்க
வேண்டும், அழிக்க வேண்டும் என்கிற ஆ
சை எனக்கு வெகு தூரமாவதாக,-காரிய 21
ம் அப்படி இராது. பிக்கிரியின் குமாரனு

கிய சேபாவென்று பேருள்ள எப்பிராயீ
ம்பருவதத்தானாய் இருக்கிற ஒரு மனு
ஷனே தாவீதாகிய இராசாவுக்கு விரோ
தமாய்த் தன் கையை எடுத்தான். அவன்
ஒருவனையே ஒப்புக்கொடுங்கள், அப்போ
து பட்டணத்தை விட்டுப் போவேனெ
ன்றான். அப்போது அந்த ஸ்திரீ யோவா
புடனே, இதோ அவன் தலை மதிளின்மே
ல் இருந்து உம்மண்டையிலே போடப்ப
22 டுமென்று சொல்லி,—அவள் தன் ஞான
த்துடனே எல்லாச் சனத்தண்டைக்கும்
உட்பிரவேசித்ததினாலே, அவர்கள் பிக்கி
ரியின் குமாரனாகிய சேபாவின் தலையை
வெட்டி, யோவாப்பண்டையிலே போட்
டார்கள். அப்போது அவன் எக்காளம்
ஊதுவித்ததினால், அவரவர் பட்டணத்
தை விட்டுக் கலைந்து, தங்கள் கூடாரங்க
ளுக்குப் புறப்பட்டுப் போனார்கள். யோ
வாபும் இராசாவண்டைக்குப் போக எ
ருசலேமுக்குத் திரும்பினான்.
23 யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா
இராணுவத்தின் மேலும், யோய்தாவின்
குமாரனாகிய பெனாயா கிரேத்தியர் பே

னும் பிலேத்தியர் மேலுந் தலைவராய் இரு
ந்தார்கள்.—அதோராம் பகுதிகளை வா 24
ங்குகிறவனும் அகிலூதின் குமாரனாகிய
யோசபாத் மந்திரியும்,—சேயா சம்பி 25
ரதியுஞ், சாதோக்கும் அப்பியத்தாரும்
ஆசாரியருமாய் இருந்தார்கள்.— யபீரி 26
யனாகிய ஈராவுந் தாவீதுக்கு ஆலோச
னைக்காரனாய் இருந்தான்.

---

௨௧. அதிகாரம்.

கிபெயோனியரைச் சவுல் கொன்றுபோட்டபா வத்தின் நிமித்தம் வந்த பஞ்சத்தைத் தாவீது அவர்களுக்குப் பழிகொடுத்ததினாலே விலக்கி னது.

தாவீதின் நாட்களில் மூன்று வருஷ 1
மாய் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது.
அப்போது தாவீது யெகோவாவுடைய
முகத்தைத் தேடினதற்கு யெகோவா,
கிபெயோனியரைக் கொன்றுபோட்ட ச
வுலுக்காகவும் இரத்தப்பிரியரான அவன்
வீட்டாருக்காகவும் தானே என்றார்.—அ 2
ப்போது இராசா கிபெயோனியரை அ

யழைப்பித்தான். கிபெயோனியரோ இஸ்ரவேல் புத்திரராய் இராமல் எமோரியரில் மீதியாய் இருந்தார்கள். அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருந்தாலும், சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும், யூதாவுக்காகவுங் காண்பித்த வயிராக்கியத்தினாலே அவர்களை வெட்ட வகை பா
3 ர்த்தான்.--ஆகையால் தாவீது கிபெயோனியரை, நான் உங்களுக்குச் செய்ய வேண்டியதென்ன? நீங்கள் யெகோவாவுடைய சுதந்திரத்தை ஆசீர்வதிக்கும் படிக்கு எதினாலே சரிபண்ணுவேனென்று கேட்
4 டான்.--அப்போது கிபெயோனியர் அவனுடனே, சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்கு இருக்கிற காரியத்திற்காக எங்களுக்கு வெள்ளியும் பொன்னுங் கவ்வை இல்லை. இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்றுபோட வேண்டுமென்கிறதும் எங்களுக்குக் கவ்வை இல்லையென்றார்கள். அப்போது அவன், ஆனாலும் நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்களென்றான்.—
5 அவர்கள் இராசாவோடே சொன்னதா

வது, நாங்கள் இஸ்ரவேலின் எல்லையில்
எங்கும் நிலையாதபடிக்கு அழிந்துபோ
க எவன் எங்களை நிர்மூலமாக்கி, எங்க
ளுக்குப் பொல்லாங்கு செய்ய நினைத்
தானோ,—அவன் குமாரரில் ஏழு பேர் 6
யெகோவா தெரிந்துகொண்ட சவுலின்
ஊராகிய கிபெயாவிலே நாங்கள் அவர்க
ளை யெகோவாவுக்கென்று தூக்கிப்போ
ட எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்
டும் என்றார்கள். நான் அவர்களை ஒப்புக்
கொடுப்பேனென்று இராசா சொன்னான்.
–ஆனாலுந் தாவீதாகிய தனக்குஞ் சவுலின் 7
குமாரனாகிய யோனத்தானுக்கும் உண்
டான யெகோவாவைக்கொண்டு இட்ட ஆ
ணையின் நிமித்தம் இராசா சவுலின் குமா
ரனாகிய யோனத்தானின் மகன் மேவி
போசேத்தைத் தப்ப விட்டு,— ஆயாவி 8
ன் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்கு
ப் பெற்ற அவளுடைய இரண்டு குமார
ராகிய அற்மோனியையும் மேவிபோசே
த்தையுஞ், சவுலின் குமாரத்தியாகிய மீ
காள் மெகொலாவியனான பர்சிலாயின்
குமாரனாகிய ஆதரீயேலுக்குப் பெற்ற

அவளுடைய ஐந்து குமாரரையும் பிடித்
9 துக்கொண்டு,— அவர்களைக் கிபெயோ
னியர் கையில் ஒப்புக்கொடுத்தான். இவர்
கள் அவர்களை யெகோவாவுக்கு முன்பா
கப் பருவதத்தின் பேரிலே தூக்கிப்போ
ட்டார்கள். அப்படியே அவர்கள் ஏழு
பேரும் ஒருமிக்க விழுந்தார்கள். வாற்
கோதும்பை அறுப்புத் துவக்குகிற அறு
ப்புக் காலத்தின் முந்தின நாட்களிலேதா
னே அவர்கள் கொன்றுபோடப்பட்டா
10 ர்கள்.-அப்போது ஆயாவின் குமாரத்தி
யாகிய ரிஸ்பாள் இரட்டுப் புடைவையை
எடுத்துக்கொண்டுபோய், அதைக் கன்
மலையில் தனக்காக விரித்து, அறுப்
புநாளின் துவக்கம் முதற்கொண்டு, வா
னத்தில் இருந்து அவர்கள் மேல் மழை
பெய்யுமட்டும், பகலில் ஆகாயத்துப் ப
றவைகளாகிலும் இரவிற் காட்டு மிருகங்
களாகிலும் அவர்கள் மேல் விழ ஒட்டா
11 திருந்தாள்.— ஆயாவின் குமாரத்தியாகி
ய ரிஸ்பாள் என்ற சவுலின் வைப்பாட்டி
செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட
12 போது,-தாவீது போய்ப் பெலிஸ்தர் கி

ல்போவாவிலே சவுலை வெட்டினபோது,
பெத்சானின் வீதியிலே தூக்கிப்போட்
டதுங் கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்
டணத்தாரோ அங்கே போய்த் திருடிக்
கொண்டு வந்ததுமான சவுலின் எலும்
புகளையும் அவன் குமாரனான யோனத்
தானின் எலும்புகளையும் அவர்களிடத்தி
ல் எடுத்து,-அங்கே இருந்து அவைகளைக் 13
கொண்டுவந்து, தூக்கிப்போடப்பட்டவ
ர்களின் எலும்புகளையும் அவர்களோடே
சேர்த்துக்கொண்டு,—சவுலின் எலும்பு 14
களையும் அவன் குமாரனாகிய யோனத்
தானின் எலும்புகளையும் பென்யமின்
தேசத்துச் சேலாவூரில் இருக்கிற அவன்
தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்க
ம் பண்ணுவித்தான். இராசா கற்பித்த இ
ந்தப்படி எல்லாஞ் செய்தார்கள். அத
ற்குப் பிறகு தேவன் தேசத்திற்காகச்
செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டரு
ளினார்.

தாவீது பெலிஸ்தரை மேற்கொண்ட ச
யங்கள்.

பின்னையும் பெலிஸ்தராலே இஸ்ரவே 15

லின்மேல் யுத்தம் உண்டாகிற போது,
தாவீதும் அவனோடே அவன் சேவகரும்
இறங்கிப் போய்ப் பெலிஸ்தரோடு யுத்த
ம்பண்ணினார்கள். தாவீது விடாய்த்துப்
16 போனான்.—அப்போது முந்நூறு சே
க்கல் நிறை வெண்கலமான ஈட்டியைப்
பிடிக்கிறவனும் புதுப் பட்டயத்தை அ
ரையிலே கட்டிக்கொண்டவனுமான இஸ்
பிபெனோத்தென்ற ரபா புத்திரரில் ஒரு
வன் தாவீதை வெட்ட வேண்டுமென்
17 றிருந்தான்.—ஆனாலுஞ் செருயாவின் கு
மாரனாகிய அபிசாய் அவனுக்கு ஒத்தா
சையாக வந்து, பெலிஸ்தனை வெட்டிக்
கொன்றுபோட்டான். அப்போது தா
வீதின் மனுஷர் நீர் இஸ்ரவேலின் விளக்
கை அணைந்துபோகப் பண்ணாதபடிக்
கு இனி நீர் எங்களோடே யுத்தத்திற்கு
ப் புறப்பட வேண்டாமென்று அவனு
18 க்கு ஆணையிட்டார்கள்.— அதற்குப் பிற
கு சம்பவித்ததேதென்றால், பெலிஸ்த
ரோடே திரும்பவுங் கோபிலே யுத்தமு
ண்டாகிற போது, ஊசாவியனான சிபே
க்காய் இராட்சத சந்ததியான சாப்பை

வெட்டிப்போட்டான்.-பெலிஸ்தரோடு 19
இன்னம் வேறொரு யுத்தங் கோபிலே உ
ண்டாகிற போது, யாரேயொர்கியின் கு
மாரனாகிய எல்க்கானானென்ற பெத்லெ
கேமியன் காத் ஊராளுகிய கோலியாத்
தை வெட்டினான்.அவன் ஈட்டி மரம் நெ
ய்கிறவர்களின் படமரமத்தனையாய் இரு
ந்தது.-இன்னம் ஒரு யுத்தங் காத் ஊ 20
ரிலே உண்டாகிறபோது, அங்கே உயர்ந்
த ஒரு மனுஷன் இருந்தான். அவன் கை
களின் விரல்கள் அவ்வாறும் அவன் கால்க
ளின் விரல்கள் அவ்வாறும், ஆக இருபத்
து நாலு விரல்களுமாய் இருந்தன. இவ
னும் இராட்சதனுய்ப் பிறந்திருந்து,-இ 21
ஸ்ரவேலை நிந்தித்தான். ஆனாலுந் தாவீதி
ன் சகோதரன் சிமேயாவின் குமாரனாகி
ய யோனத்தான் அவனை வெட்டினான்.
—இந்த நாலு பேருங் காத் ஊரிலே ரப் 22
பாவுக்குப் பிறந்திருந்து, தாவீதின் கை
யினாலும் அவன் சேவகரின் கையினாலு
ம் மடிந்தார்கள்.

———

௨௨. அதிகாரம்.

தாவீது பாடின வீர சம்பிரம்.

1 யெகோவா தாவீதை அவனுடைய எ
ல்லாச் சத்துருக்களின் கைக்குஞ் சவுலின்
கைக்கும் நீங்கலாக்கி விடுவித்தபோது,
அவன் யெகோவாவுக்கு முன்பாகச் சொ
2 ன்ன பாட்டின் வார்த்தைகளாவன.—யெ
கோவா என் குன்றும், என் கோட்டை
யும், என்னை விடுவிக்கிறவருமானவர்.—
3 தேவன் நான் நம்பியிருக்கிற குன்றும், எ
ன் கேடயமும், என் இரட்சிப்பின் கொ
ம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், எ
ன் மறைவிடமுமானவர். என்னை வல்லடி
க்கு நீங்கலாக்கிவிட்ட என் இரட்சகரா
4 ய் இருக்கிறீர்.—இஸ்தோத்திரிக்கப்பட்ட
யெகோவாவை நோக்கிக் கூப்பிட்டேன்.
அப்போது என் சத்துருக்கள் விலக இ
5 ரட்சிக்கப்பட்டேன்.—ஏனென்றால் மர
ணத்தின் அலைகள் என்னைச் சூழ்ந்துகொ
ண்டு பேலியாளின் வாய்க்கால்கள் என்
6 னைக் கலங்கப்பண்ணின.— நரகத்தின்

கயிறுகள் என்னைச் சுற்றிப் பிடித்து, ம
ரணத்தின் கண்ணிகள் எனக்கு நேரிட்ட
ன.-எனக்கு உண்டான நெருக்கத்திலே 7
யெகோவாவைத் தொழுதுகொண்டு, எ
ன் தேவனை நோக்கிக் கூப்பிட்டேன். த
மது தேவாலயத்தில் இருந்து என் சத்
தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அ
வர் செவிகளுக்குட்பட்டது.—அப்பொ 8
து பூமி அசைந்து அதிர்ந்து வானத்தின்
அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தன. எ
னெனில் எரிச்சலானார்.—புகை அவர் நா 9
சியாலும் பட்சிக்கிற அக்கினி அவர் வா
யாலும் எழும்பி, அவராலே தழலாக எ
ரிந்தது.—பரமண்டலங்களைத் தாழ்த்தி 10
இறங்கினார். அவர் பாதங்களின் கீழே ம
ந்தாரம் இருந்தது.—கேருபீனின் மேல் 11
ஏறிப் பறந்து காற்றின் செட்டைகளின்
மீதிலே தரிசனையானார்.-ஆகாயத்து மே 12
கங்களிலே கூடிய தண்ணீர்களின் இரு
ளைத் தம்மைச் சுற்றிலும் இருக்கும் கூ
டாரமாக்கினார்.—அவர் முகதாவின் பிர 13
காசத்தினால் நெருப்புத் தழலாய் எரிந்
தது.—யெகோவா வானத்தில் இருந்து 14

குமுறி உன்னதமானவர் தமது சத்தத்
15 தைக் காட்டினார்.—அவர் அம்புகளை அ
னுப்பி அவர்களைச் சிதறடித்து, மின்ன
ல்களைப் போக விட்டு அவர்களைக் கல
16 ங்கப்பண்ணினார்.— யெகோவாவுடைய
உதம்புதலாலும் அவருடைய நாசியின்
சுவாசக் காற்றினாலுஞ் சமுத்திரத்தின் ப
ள்ளங்கள் காணப்பட்டுப் பூதலத்தின் அ
17 ஸ்திபாரங்கள் திறவுண்டன.—உயரத்தி
ல் இருந்து கை நீட்டி, என்னைப் பிடி
த்துத் திரள் தண்ணீர்களில் இருந்து எ
18 ன்னைத் தூக்கிவிட்டார்.—என் வலு ச
த்துருவுக்கும் என் பகைஞருக்கும் என்
னை விலக்கி விடுவித்தார். ஏனெனில் என்
19 னிலும் பலத்திருந்தார்கள்.—என் ஆப
த்தின் நாளிலே எனக்கு எதிரிட்டு மறித்
தார்கள். ஆனாலும் யெகோவா எனக்கா
20 தரவாய் இருந்து,—என்னை எடுத்து
விசாலத்திலே வைத்துத் தப்புவித்தார்.
ஏனெனில் என்மேற் பிரியமாய் இருந்
21 தார்.-யெகோவா என் நீதிக்குத் தக்கதா
க எனக்குப் பதில் அளித்தார். என் கை
களின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்கு

வரப் பண்ணினார்.- ஏனென்றால் யெகோ 22
வாவுடைய வழிகளைக் காத்துக்கொண்டி
ருந்தேன். நான் என் தேவனை விட்டு ஆ
காமியஞ் செய்ததில்லை.—ஏனெனில் அ 23
வருடைய நியாயங்களை எல்லாம் எனக்
கு முன்பாக நிறுத்தினேன். நான் அவ
ருடைய பிரமாணங்களை விட்டு விலகாம
ல்,—அவர் முன்பாக மன உண்மையாய் 24
இருந்து, என் துற்குணத்திற்கு என்னை வி
லக்கிக் காத்தேன்.—ஆகையால் யெகோ 25
வா என் நீதிக்குத்தக்கதாகவுந், தம்முடை
ய கண்களுக்கு முன் நிற்கிற என்னுடை
ய சுத்தத்திற்குத்தக்கதாகவும் எனக்கு வ
ரப்பண்ணினார்.— சன்மார்க்கனுக்கு உ 26
ம்மைச் சன்மார்க்கமாகவும் மன உண்
மையான புருஷனுக்கு உம்மை மன உண்
மையாகவும்,—சுத்தனுக்கு உம்மைச் சு 27
த்தமாகவும் மாறுபாடானவனுக்கோ உ
ம்மைக் கோணலாகவுங் காண்பிக்கிறீர்.—
சிறுமைப்பட்ட சனத்தை இரட்சிக்கிறீ 28
ர். ஆனாலும் மேட்டிமையானவர்களைத்
தாழ்த்த உம்முடைய கண்கள் அவர்களு
க்கு விரோதமாகத் திருப்பப்பட்டிருக்

29 கின்றன.—ஏனெனில் யெகோவாவாகிய
தேவரீர் என் விளக்காய் இருக்கிறீர். யெ
கோவா என் இருளை வெளிச்சமாக்குகிறா
30 ர்.-ஏனெனில் உம்மோடே ஒரு இராணு
த்தண்டிற்குட் பாய்குவேன். என் தேவ
னோடே ஒரு மதிலைத் தாண்டுவேன்.—
31 தேவனுடைய வழி உத்தமமானது. யெ
கோவாவுடைய வசனம் புடமிடப்பட்ட
தாய் இருக்கின்றது. தம்மை அண்டிக்கொ
ள்ளுகிற அனைவருக்கும் அவர் கேடயமா
32 ய் இருக்கிறார்.—ஏனென்றால் யெகோவா
வையல்லாமல் தேவன் யார்? நம்முடைய
33 தேவனைத் தவிரக் கன்மலையார்?—தேவ
ன் எனக்குப் பலத்த அரணானவர். அவ
ர் என் வழியைத் தடையல்லாத நல் வ
34 ழியாக்குகிறார்.—என் கால்களை மான் கா
ல்களுக்கு ஒப்பாக்கி, என் உயர் தலங்க
ளில் என்னை நிறுத்துகிறார்.— வெண்கல
ல வில்லும் என் புயங்களால் வளைய எ
ன் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்
35 கிறார்.— உம்முடைய இரட்சிப்பின் கே
டயத்தையும் எனக்குத் தந்தீர். நீர் என்னை
ச் சிறுமைப்படுத்துகிறதினால், என்னைப்

பெரியவனாக்குகிறீர்.— என் கணுக்கால்க 37
ள் தள்ளாடாதபடிக்கு, நான் நடக்கிற வ
ழியை அகலமாக்கினீர்.—என் சத்துருக் 38
களைப் பின்றொடர்ந்து, அவர்களை அழி
ப்பேன். அவர்களை நிர்மூலமாக்குமட்
டுந் திரும்பேன்.— அவர்கள் எழுந்திரு 39
க்க மாட்டாமல் என் பாதங்களின் கீழ்
விழத்தக்கவையாய் அவர்களை நிர்மூல
மாக்கி வெட்டுவேன்.—ஏனெனில் யுத்த 40
த்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைக
ட்டி என் மேல் எழும்பினவர்களை என்
கீழ் மடங்கப் பண்ணி,—நான் என் பகை 41
ஞரைப் பாழ்க்கடிக்கும் படியாக என் ச
த்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்பு
க்கொடுத்தீர்.-பார்த்துக்கொள்ளுகிறார்க 42
ள். ஆனாலும் இரட்சிக்கிறவர் இல்லை. யெ
கோவாவைப் பார்த்துக்கொள்ளுகிறார்க
ள். ஆனாலும் அவர்களுக்கு மறுவுத்தர
வு கொடாதிருக்கிறார்.—அவர்களைப் பூமி 43
யின் தூளாக நருக்கித் தெருக்களின் சே
ற்றைப் போலே அவர்களை மிதித்துச் சி
தறப்பண்ணுவேன்.—நீர் என் சனத்தி 44
ன் சண்டைகளுக்கு என்னை விலக்கி வி

ட்டு என்னைச் சாதிகளுக்குத் தலைவனாக்
குகிறீர். நான் அறியாத சனம் என்னை
45 ச் சேவிக்கின்றது.—அன்னியர் இச்சக
ம் பேசி, எனக்கடங்கி என் சத்தத்தைக்
கேட்டவுடனே, எனக்குக் கீழ்ப்படிகிறா
46 ர்கள்.—அன்னியர் முனை விழுந்துபோ
ய்த் தங்கள் அடைப்புகளில் இருந்து த
47 த்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள்.—யெ
கோவா சீவனுள்ளவரும், என் கன்மலை
யும் இஸ்தோத்திரிக்கப்பட்டவருமாய் இ
48 ருக்கிறார்.—என் இரட்சிப்பின் கன்மலை
யாகிய தேவனும், நீதியைச் சரிக்கட்டுஞ்
சயங்களை எனக்கு அளித்துச் சனங்க
ளை எனக்குக் கீழ்ப்படுத்தி, என் சத்துரு
க்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிற தே
49 வனுமானவர் உயர்ந்தவர்.—என்னை எ
னக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்
மேல் உயர்த்துகிறீர். வல்லடிபண்ணுகிற
மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.—
50 யெகோவாவே! இதின் நிமித்தஞ் சாதிக
ளுக்குள் உம்மைத் துதித்து, உம்முடை
ய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்.—
51 தாம் வைத்த இராசாவின் இரட்சிப்புக்

களை அவர் பெரியவைகளாக்கித், தாம் அ
பிஷேகப்படுத்தின தாவீதுக்கும் அவன்
வித்திற்கும் என்றென்றைக்குங் கிருபை
செய்கிறார்.

---

௨௩. அதிகாரம்.

தாவீதுடைய கடைசிவார்த்தைகள்.

தாவீதுடைய கடைசிவார்த்தைகளாவ 1
ன, மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யா
க்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெ
ற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்ப
மாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய
தாவீதென்ற புருஷன் உரைத்துச் சொ
ல்லுகிறதேதெனில்,— யெகோவாவுடை 2
ய ஆவி என்னைக் கொண்டு பேசினார். அ
வருடைய வசனம் என்னுடைய நாவின்
மேல் இருந்தது.—இஸ்ரவேலின் தேவ 3
னும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர்
எனக்குச் சொல்லி உரைத்ததேதெனில்,
நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தேவ
பயமாய்த் துரைத்தனம்பண்ணுகிறவர்
உண்டாயிருப்பார்.—அவர் காலமே ம 4

ந்தாரம் இல்லாமல் உதிக்கிறதும், மழைக்
குப் பிறகு தன் காந்தியினலே புல்லைப்
பூமியில் இருந்து முளைக்கப்பண்ணுகிற
துமான சூரியனுடைய விடியதாரத்தி
ன் வெளிச்சத்தைப் போல் இருப்பாரெ
5 ன்றார்.—ஏனெனில் தேவனிடத்தில் என்
னுடைய வீடு நிலைவரமாயிராதோ? ஏ
னென்றால் எல்லாவற்றிற்குந் திட்டப்ப
ட்டதுங் கைக்கொள்ளப்படுவதுமான
நித்திய உடன்படிக்கையை எனக்கு ஸ்தா
பித்தார். ஆனதுகொண்டு என்னுடைய
எல்லா இரட்சிப்பும் எல்லாவிருப்பமு
6 ம் முளைத்தெழும்பாதோ?— பேலியா
ளின் மனுஷர் அனைவருமோ கையினு
லே பிடிக்கப்படக் கூடாதபடியினலே
எறிபட்டுப் போகிற முள்ளுக்களுக்குச்
7 சமானமானவர்கள்.— அவைகளை ஒருவ
ன் தொடப்போனல் இருப்பாயுதத்தை
யும் ஈட்டிக்கழியையுங் கெட்டியாய்ப்
பிடிக்க வேண்டும். அவைகள் இருக்கி
ற இடத்திலே தானே அக்கினியினற் சு
ட்டெரிக்கப்படவே சுட்டெரிக்கப்படும்
என்றான்.

தாவீதுடைய விசேஷித்த பராக்கிரமக்காரரின் இடாப்பு.

தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலி 8
களின் நாமங்களாவன, தக்கெமோனி
யின்குமாரனாகிய யோசெப்பா, செபெ
த்தென்றசேர்வைக்காரரின் தலைவன். இ
வன் எண்ணூறுபேர்களின்மேல் விழுந்
து அவர்களை ஒருமிக்க வெட்டிப்போ
ட்ட அதீனோஎஸ்னி ஊரானானவன்.—
இவனுக்கு இரண்டாவது அகோயி கு 9
மாரனாகிய தோதோகியின் மகன் எலெ
யாசாரென்றவன். இவன் பெலிஸ்தர் யு
த்தத்திற்குக் கூடின ஸ்தலத்திலே இஸ்
ரவேல் மனுஷர் எறிப்போகையில், தா
வீதோடே இருந்து, பெலிஸ்தரை நிந்
தித்த மூன்று பராக்கிரமக்காரரில் ஒரு
வனாய் இருந்தான்.—இவன் எழும்பித் 10
தன் கை சலித்துத் தன் கை பட்டயத்
தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலி
ஸ்தரை வெட்டினான். அன்றையித்தினம்
யெகோவா பெரிய இரட்சிப்பை நடப்
பித்தார். சனங் கொள்ளையாடமாத்திரம்
அவனைப் பின் சென்றார்கள்.—இவனுக் 11

கு மூன்றாவது ஆகேயின் குமாரனாகி
ய சம்மாவென்ற ஆசாரியன். சிறுபயறு
நிறைந்த வயல் இருந்த இடத்திலே பெலி
ஸ்தர் ஏராளமாய்க் கூடிச் சனம் பெலி
12 ஸ்தரைக் கண்டு ஓடுகிற போது,—இவ
ன் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அ
தைக் காப்பாற்றிப் பெலிஸ்தரை மடங்
கடித்துப் போட்டான். அதினால் யெ
கோவா பெரிய இரட்சிப்பை நடப்
13 பித்தார்.—முப்பது தலைவருக்குள்ளே
இந்த மூன்றுபேரும் இறங்கிப் போய்,
அறுப்பு நாளிலே அதுல்லாம் கெபியி
லே தாவீதண்டைக்கு வந்திருந்தார்கள்.
பெலிஸ்தரின் தண்டு இரப்பாயீம் பள்
ளத்தாக்கிலே பாளயமிறங்கின போதோ,
14 —தாவீது அரணான ஒரு இடத்தில் இரு
ந்தான். ஆனாலும் பெத்லகேமிலே அப்
போது பெலிஸ்தரின் தாணையம் இருந்த
15 து.—தாவீது ஆசைப்பட்டுப் பெத்ல
கேமின் ஒலிமுக வாசலில் இருக்கிற கிண
ற்றின் தண்ணீரிலே கொஞ்சம் என் தா
கத்திற்குக் கொண்டுவருபவன் யார் என்று
16 ன்.—அப்போது இந்த மூன்று பராக்கி

மக்காரர் பெலிஸ்தரின் பாளயத்திலே வ
லுமையாய்ப் புகுந்துபோய்ப் பெத்லெ
கேமின் ஒலிமுக வாசலில் இருக்கிற கிண
ற்றிலே தண்ணீர் மொண்டு தாவீதண்டை
க்குச் சுமந்துகொண்டுவந்தார்கள். ஆ
னாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லா
மல், அதை யெகோவாவுக்கென்று ஊற்
றிப்போட்டு,—யெகோவாவே! தங்களு 17
க்குப் பிராண யோக்கியத்தோடு போய்
வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக்
குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூ
ரமாய் இருப்பதாகவென்று சொல்லி, அ
தைக் குடிக்க மனதில்லாதிருந்தான். இ
ப்படி இந்த மூன்று பராக்கிரமக்கார
ர் செய்தார்கள்.—யோவாபின் சகோத 18
ரனுஞ் சேருயாவின் குமாரனுமான அ
பிசாய் என்கிறவன் அந்த மூன்றுபேரி
ற் பிரதானமானவன். அவன் தன் ஈட்
டியை ஓங்கி மூந்நூறு பேரை மடங்கடி
த்ததினால், இந்த மூன்று பேரிலும் பே
ர்பெற்றவனானன்.— இந்த மூன்றுபேர்க 19
ளில் அவன் சமர்த்தனாய் இருந்ததினால்
அல்லோ அவர்களில் தலைவனானான்! ஆனா

லும் அந்த முந்தின மூன்று பேருக்கு
20 அவன் சரியானவன் அல்ல.-நல்ல சேவக
னை யோய்தாவின் குமாரனுங் கப்செ
யெல் ஊரானுமாகிய பெனாயாவுஞ் செ
ய்கைகளாற் பெரியவனாய் இருந்தான்.
அவன் மோவாப் தேசத்தினுடைய இர
ண்டு வலுமையான சிங்கங்களைக்கொன்
றதுமல்லாமல், அவன் இறங்கிப்போய்
உறைந்த மழையின் நாளில் ஒரு சிங்கத்
தை ஒரு கெபிக்குள்ளே கொன்றுபோ
21 ட்டான்.—அவன் பயங்கர ரூபான ஒரு
எகிப்த்திய மனுஷனையுங் கொன்றுபோ
ட்டான். அந்த எகிப்த்தியன் கையில்
ஒரு ஈட்டி இருக்க, இவன் ஒரு தடி
யைப் பிடித்து அவனண்டைக்கு இற
ங்கிப்போய், அந்த ஈட்டியை எகிப்த்
தியன் கையிலே பறித்து அவனை அ
22 வன் ஈட்டியினாலே கொன்றான்.— இ
வைகளை யோய்தாவின் குமாரனாகிய
பெனாயா செய்தபடியினாலே, மூன்று
பராக்கிரமக்காரருக்குள்ளே பேர் பெ
23 ற்றவனாய் இருந்தான்.—மற்ற முப்பது
பேரைப் பார்க்கிலும் அவன் பிரபலிய

மானவன். ஆனாலும் அந்த முந்தின மூன்
று பேருக்கு அவன் சரியானவன் அல்ல. அ
வனைத் தாவீது தன் அரண் மனைச்சேர்
வைக்காரனாக வைத்துக்கொண்டான்.—
யோவாபின் தம்பியாகிய ஆசகேல் மற் 24
ற முப்பது பேருக்கடுத்தவன். அவர்கள்
யாரெனில், தோதோவின் குமாரனாகிய
பெத்லகேம் ஊரானான எல்க்கானான்.—
ஆரோதியனான சம்மா, ஆரோதியனான 25
எலீக்கா,—பலத்தியனான எலெஸ், இக் 26
கெசின் குமாரனாகிய ஈராவென்ற தேக்
கோவியன்,- ஆனதோத்தியனான அபியே 27
சர், ஊசாத்தியனான மெபுன்னாயி,—அ 28
கோகியனான சல்மோன், நேத்தோபா
த்தியனான மகராயி,—பானாவின் குமார 29
னாகிய எலேப்பென்ற நெத்தோபாத்திய
ன் பென்யமின் புத்திரரின் கிபெயா ஊ
ரானாகிய ரிபாயின் குமாரன் இத்தாயி,—
பிரத்தோனியனான பெனாயா, காகாஸ் 30
மலையாறுகளின் சீமையான ஈத்தாயி,—
அறபாத்தியனான அபி அல்போன், பறு 31
ம்பியனான அஸ்மாவேத்,— சால்போனி 32
யனான எல்யாபா, யாசேனின் குமாரரில்

33 யோனத்தான் என்றவன்,—ஆராரியனான
சம்மா, சாராரின் குமாரனாகிய அகியாம்
34 என்ற ஆராரியன்,—மாகாத்தியனின் கு
மாரனாகிய அகஸ்பாயிம் மகன் எலிப்
பேலெத், கீலோனியனாகிய அகித்தோப்
பெலின் குமாரனாகிய எலியாம் என்றவ
35 ன்,-கர்மேலியனான எஸ்ரூயி, அரபியனா
36 னபாராயி,—சோபா ஊரானாகிய நாத்
தானின் குமாரன் இகால், காதியனான பா
37 னி,—அம்மோனியனான சேலேக், செரு
யாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுத
ங்களைப் பிடிக்கிற பேரோத்தியனான, நக்
38 ராய்,—இத்தேரியனான ஈரா, இத்தேரிய
39 னான காரேப்,—ஏத்தியனான உரியாவுந்
தானே. இவர்கள் எல்லாரும் முப்பத்தே
ழுபேர்.

உ௪. அதிகாரம்.

சனத்தின் இலக்கத்தைப் பார்க்கச்சொன்ன தாவீதின் பெருமைக்கு ஆக்கினையாக வந்த பெருவாரிக்காய்ச்சலின் செய்தி.

1 யெகோவாவுடைய கோபந் திரும்ப
இஸ்ரவேலின் மேல் மூண்டு, நீ போய்,

இஸ்ரவேலில் யூதாவென்றவர்களின் இல
க்கத்தைப் பாரென்று அவர்களுக்குச்
சேதமாகச் சொல்லுகிறதற்குத் தாவீதை
ஏவிவிட்டது.—அப்படியே இராசா த 2
ன்னோடிருக்கிற சேனாபதியான யோவா
புடனே, சனத்தின் இலக்கத்தை நான் அ
றியும்படிக்கு நீ தாண் துவக்கிப், பேர்சே
பா மட்டுமுள்ள இஸ்ரவேல் கோத்திரங்
கள் எல்லாஞ் சுற்றித் திரிந்து, சனத்தை
இலக்கம் பாருங்களென்றான்.—அப்போ 3
து யோவாப் இராசாவுடனே, இராசா
வாகிய என் ஆண்டவனுடைய கண்கள்
பார்க்கத்தக்கதாக உம்முடைய தேவனா
கிய யெகோவா சனம் இப்போதிருக்கிற
தைப் பார்க்க அதை நூறத்தனையாய் வர்
த்திக்கப் பண்ணுவாராக. ஆனாலும் இரா
சாவாகிய என் ஆண்டவன் இந்தக் காரி
யத்தின் பேரிலே விருப்பம் வைப்பதே
ன்னவென்றான்.— ஆனாலும் யோவாபும் 4
இராணுவத்தலைவருஞ் சொன்ன வார்த்
தை செல்லாதபடிக்கு இராசாவின் வா
ர்த்தை பலத்தது. அப்படியெ இஸ்ரவே
லாகிய சனத்தை இலக்கம்பார்க்க யோ

வரபும் இராணுவத்தலைவரும் இராசாவை
5 விட்டுப் புறப்பட்டுப் போய்,— யோர்
தானைக் கடந்து, காத்துடைய ஆறுகள்
நடுவே இருக்கிற பட்டணத்திற்கு வலது
புறமான ஆரோவேரிலும் யாசேரண்
6 டையிலும் பாளயமிறங்கி,-அங்கே இரு
ந்து கீலேயாத்திற்கும் ஒத்சி என்ற ப
ள்ளச் சீமைக்கும் வந்து, அங்கே இருந்
து தாண்யானுக்குஞ் 'சீதோனின் சுற்று
7 ப்புறங்களுக்கும் வந்து,— பிறகு தீறு
வென்ற கோட்டைக்கும் எவியர் காறு
னியருடைய சகல பட்டணங்களுக்கும்
வந்து, அங்கே இருந்து யூதாவின் தென்
புறமான பேர்சேபாவுக்குப் புறப்பட்
8 டு,—இப்படியே தேசத்தில் எல்லாஞ் சு
ற்றித்திரிந்து ஒன்பது மாதமும் இருப
து நாளுமான பிறகு எருசலேமுக்கு வ
9 ந்தார்கள்.-யோவாப் சனத்தை இலக்கம்
பார்த்த தொகையை இராசாவுக்குக்கொ
டுத்தான். இஸ்ரவேலிலே பட்டயம் உ
ருவத்தக்க சேவக மனுஷர் எண்ணூறுயி
ரம் பேர் இருந்தார்கள். யூத மனுஷர் ஐ
ந்நூறுயிரம் பேருமாய் இருந்தார்கள்.-

ஆனாலுஞ் சனத்தை இப்படி எண்ணின 10
பிறகு இராசாவின் இருதயம் அவனைக்கு
த்திற்று. அப்போது தாவீது யெகோவா
வை நோக்கி, நான் இப்படிச் செய்ததி
னாலே மகா பெரிய பாவஞ் செய்தேன்.
இப்போதும் ஆண்டவரே! உமதடியா
னின் அக்கிரமத்தை நீக்கிப் போடுமே
ன்! ஏனென்றால் வெகு பயித்தியமாகச்
செய்தேனென்றான்.— தாவீது காலமே 11
எழுந்திருந்த போது, தாவீதின் ஞானதி
ஷ்டி புருஷனாகிய காத்தென்ற தீர்க்கதரி
சிக்கு யெகோவாவுடைய வார்த்தை உண்
டாய்ச் சொன்னதாவது,— நீ போய்த் 12
தாவீதுடனே, மூன்று காரியங்களை நாம்
உனக்கு முன்பாக வைக்கிறோம். அவை
களில் நாம் உனக்குச் செய்யப் போகிற
ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்ளென்
று யெகோவா உரைக்கிறாரென்று சொ
ல்லென்றார்.— அப்படியே காத் தாவீத 13
ண்டைக்கு வந்து அவனுக்கு அறிவித்து
ச் சொன்னதாவது, உம்முடைய தேசத்
திலே ஏழு வருஷம் பஞ்சம் உமக்குவ
வேண்டுமோ? அல்லவென்று மூன்று

மாதம் உம்முடைய சத்துருக்கள் உம்
மைத் தொடர நீர் அவர்களுக்கு முன்பா
க ஓடிப்போகவேண்டுமோ! அல்லவெ
ன்று உம்முடைய தேசத்திலே மூன்று
நாட் பெருவாரிக்காய்ச்சல் உண்டாயிரு
க்கவேண்டுமோ! இப்போதும் என்னை
அனுப்பினவருக்கு நான் என்ன மறுசெ
ய்தி கொண்டுபோகவேண்டும் என்கிற
தை நீர் யோசித்துப் பாருமென்றான்.—
14 அப்போது தாவீது காத்துடனே, வெ
கு இடுக்கண் அடைந்திருக்கிறேன். இப்
போது நாம் யெகோவாவுடைய கையி
லே விழுவோமாக. ஏனெனில் அவருடை
ய இரக்கங்கள் பெரிதாய் இருக்கின்றது.
மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக
15 வென்றான்.— அப்போது யெகோவா இ
ஸ்ரவேலிலே அன்று காலமே துவக்கி,
மறுநாளின் அந்த வேளை மட்டும் இருக்கு
ம் பெருவாரிக்காய்ச்சலை வரப் பண்ணி
னார். அதினால் தாண் முதற்கொண்டு, பே
ர்சேபா மட்டுமுள்ள சனத்தில் எழுபதி
னாயிரம் பேர் சென்றுபோனார்கள்.
16 தேவ தூதன் எருசலேமை அழிக்க

த் தன் கையை அதின்மேலே நீட்டின
போதோ யெகோவா அந்தத் தீங்குக்கு
மனஸ்தாபப்பட்டுச் சனத்தை அழிக்கி
ற தூதனுடனே, போதும். இப்போது
உன் கையை நிறுத்தென்றார். அப்போ
து யெகோவாவுடைய தூதன் எபூசியனு
கிய அற்விஞவின் போரடிக்கிற களத்தி
ற்கு நேரே இருந்தான்.-சனத்தை உபா 17
திக்கிற தூதனைத் தாவீது காண்கிற போ
து, அவன் யெகோவாவை நோக்கி வி
ண்ணப்பம்பண்ணி இதோ, நான்தான்
பாவஞ்செய்தேன்! நான்தான் அக்கிரம
ம் பண்ணினேன்! இந்த ஆடுகள் செய்த
தென்ன? உம்முடைய கை எனக்கும் எ
ன் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாய்
இருக்கட்டுமேனென்றான்.—அன்றையி 18
த்தினங் காத் தாவீதண்டைக்கு வந்து
அவனுடனே, நீர் ஏறிப்போய், எபூசிய
னுகிய அற்விஞவின் களத்திலே யெகோ
வாவுக்கு ஒரு பலிபீடத்தை ஸ்தாபியு
மென்றான்.— காத்துடைய வார்த்தையி 19
ன்படியே தாவீது யெகோவா கற்பித்
த பிரகாரமாக ஏறிப்போனுன்.— அற் ௨

வினா கண்ணெடுத்து, இராசாவும் அ
வனுடைய ஊழியக்காரரும் தன்னண்
டைக்கு வருகிறதைக் கண்ட போது, அ
ர்வினா புறப்பட்டுத் தரை மட்டுங் குனிந்
21 து இராசாவை வணங்கி,-இராசாவாகிய எ
ன் ஆண்டவன் தமதடியானண்டைக்கு வ
ருகிற காரியம் என்னவென்றதற்குத் தா
வீதென்றவன் வாதை சனத்தைவிட்டு நிறு
த்தப்பட யெகோவாவுக்கு ஒரு பலிபீட
த்தைக் கட்டும்படிக்கு, இந்தக் களத்தை
உன் கையிலேகொள்ள வந்தேனென்றான்.
22 -அர்வினா தாவீதுடனே, இராசாவாகிய
என் ஆண்டவன் அதை வாங்கிக்கொண்டு
தம்முடைய பார்வைக்கு நலமானபடி ப
லியிடுவாராக. இதோ பலிக்கு மாடுகளு
ம், விறகுகளும், போரடிக்கிற உருளைக
ளும், மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே
23 இருக்கின்றனவென்று சொல்லி,— அது
எல்லாவற்றையும் இராசாவாய் இருந்த அ
ர்வினா, இராசாவுக்குக்கொடுத்து, அர்வி
னா இராசாவுடனே, உம்முடைய தேவ
னாகிய யெகோவா உம்முடைய மேலே
24 பிரியமாவதாகவென்றான்.—ஆனாலும் இ

ராசா அறவினாவுடனே, அப்படி அல்ல
நான் இலவிசமாய் வாங்கி என் தேவனாகி
ய யெகோவாவுக்குச் சருவாங்கத் தகனங்
களைப் பலியிடாமல், அதை உன் கையி
லே விலைக்கிரயமாய் வாங்கவே வாங்குவே
னென்று சொல்லித், தாவீது அந்தக் க
ளத்தையும், மாடுகளையும் ஐம்பது சே
க்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான்.-
அங்கேதானே தாவீது யெகோவாவுக்கு 25
ஒரு பலிபீடத்தைக் கட்டுவித்துச் சருவா
ங்கத் தகனங்களையுஞ், சமாதான பலிக
ளையுஞ் செலுத்தினான். அப்போது யெ
கோவா தேசத்திற்கு ஒப்புரவாக்கப்பட்
டார். இஸ்ரவேலின்மேல் இருந்த அந்த
வாதை நிறுத்தப்பட்டது.

சாமுவேல் இரண்டாம் புஸ்தகம்

முடிந்தது.